# அய்யா அவர்கள்
## உருவாக்கிய
# அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம்

இராஜம்மாள் பா. தேவதாஸ்



சரியான வழியைத் தெரிந்து கொள்ளுவதும்,
அந்த வழியில் காரியங்களை வெற்றிகரமாக
முடிப்பதற்கு இடைவிடா முயற்சியும்
மிக அவசியம்.

யாரொருவர் தங்கள் மனத்தில்
நிறைந்த தன்னம்பிக்கையையும் அதனால்
நிறைந்த முயற்சியையும் ஊக்கத்தையும்
பெற்றிருக்கிறார்களோ, அவர்களுக்குத்
தோல்வி என்பதே இல்லை.

தங்கள் வேலையில் ஊக்கம்
இருப்பவர்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி
இருக்கும். அவர்கள் வாழ்க்கையில்
முன்னேறுவார்கள்.

எது மனிதனுக்குப் பலத்தையும்
சக்தியையும் ஆற்றலையும் கொடுக்கிறதோ,
அது தான் ஒருவனுக்கு நல்லது.

— தி.சு. அவினாசிலிங்கம்

# அய்யா அவர்கள்

உருவாக்கிய

# அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்

இராசம்மாள் பா. தேவதாஸ்

ADU LIB
91908

அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் – 641 043

முதற்பதிப்பு மே 1997

விலை ரூ. 35/-

*வெளியிடுவோர்:*

**பதிவாளர்**
அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் – 641 043

*அச்சிட்டோர்:*

**சாரதாலயா அச்சகம்**
அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள்
கோயமுத்தூர் – 641 043

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| | *முன்னுரை* | v |
| | *அணிந்துரை* | ix |
| | *வெளியீட்டுரை* | xi |
| 1. | முதல் சந்திப்புகள் | 1 |
| 2. | அமெரிக்காவிலிருக்கும் போது | 7 |
| 3. | 1950—ல் தாயகம் திரும்பிய போது | 12 |
| 4. | முதல் முறையாகக் கோவை இராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தில் | 15 |
| 5. | புது டெல்லியில் (1951—1952) | 21 |
| 6. | பரோடாவில் மகாராஜா சயாஜிராவ் பல்கலைக் கழகத்தில் | 28 |
| 7. | மீண்டும் டெல்லியில் வெஸ்டர்ன் கோர்ட்டில் (1955—1961) | 34 |
| 8. | அவினாசிலிங்கம் அறக்கட்டளை நிறுவப்பட்டது | 47 |
| 9. | அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரி பிறந்தது | 56 |
| 10. | கல்லூரியின் முதல் பத்தாண்டுகள் (1957—1967) | 65 |

பக்கம்

11. இரண்டாம் பத்தாண்டுகள் (1967—1977) 82

12. மூன்றாம் பத்தாண்டுகள் (1977—1987) 96

13. அவினாசிலிங்கம் நிகர் பல்கலைக்கழகம் உதயம் 107

14. வாழ்க்கையில் நிறைவு 126

15. அய்யா அவர்கள் தொடர்ந்து வழி நடத்துவார்கள் 137

16. நினைவை நிரந்தரமாக்க . . . 143

# முன்னுரை

அய்யா டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் வாழ்வும், தலைமையும் ஈடு இணையற்றதாக விளங்கின. அவர்களுடைய தியாகம் நிறைந்த தூய வாழ்க்கை அவர்களை ஒரு ஒப்பற்ற ஆன்மீக வழிகாட்டியாக எங்களுக்கு, ஆண்டவன் வரமாக அளித்தது. ஏறக்குறைய 46 ஆண்டுகள் எனக்குக் கிடைத்த அந்தத் தலைமையில் நானும் அவினாசிலிங்கம் உயர்கல்வி நிறுவனமும் வளர்ந்த அற்புதமான சரித்திரத்தை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பேராவலுடன் இந்த நூலை எழுதியிருக்கிறேன்.

*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு*

என்கிற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க அய்யா அவர்கள் கலங்கரை விளக்காக ஒளி தந்து வாழ்க்கையில் பல தரப்பினருக்கும் வழிகாட்டி வந்தார்கள். அமரர் அய்யா அவர்களின் ஒவ்வொரு செயலிலும், எண்ணத்திலும் ''எப்பொழுதும் செயலாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்'' என்ற தூய அன்னை சாரதாமணி தேவியாரின் வாக்கிற்கிணங்க வாழ்க்கை முறைகளை வாழ்ந்து காட்டினார்கள்.

பெண்களுக்காகக், குறிப்பாக கிராமப் புறங்களில் வாழும் மகளிரின் கல்விக்காக அரும்பாடுபட்டுப் பெண் கல்விக்கென்று மாபெரும் நிறுவனம் அமைத்தார்கள், அதில் இரண்டரை வயது குழந்தை, மழலையர் பள்ளியில் சேர்ந்து, வயதிலும் வகுப்பிலும் உயர்ந்து, முனைவர் (ஆராய்ச்சிப்) பட்டம் பெற்று வெளியேற முடியும்.

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*

என்கிற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் எண்ணத்தில் உதித்ததைச் செயலில் காட்டிப், பெண்கள் கல்விக்கு ஊக்கமும் உயர்வும் தந்த புனிதர் அய்யா அவர்கள். கல்வி நிலையங்கள் ஏற்படுத்தி, மக்களுக்குப் பயன் தரும் பாடங்களைக் கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்தால் மட்டும் கல்வியில் சீர்திருத்தம் ஏற்படாது. கல்விக் கண்களைத் திறக்கும் ஆசிரியர், தம் பணியை அறப்பணி என நினைத்து மாணவ மாணவியரின் நலனில் அக்கரை கொண்டு உழைத்திட அவர்களுக்கு உற்சாகம் வேண்டும். ஆசிரியர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திட்டு, ஆசிரியர்களுக்கு உற்சாகம் அளித்த பெருமான் அய்யா அவர்கள்.

அய்யா அவர்கள் மனத்தில் உறுதியும், செயலில் திண் ணமும் கொண்டு எடுத்த காரியம் யாவிலும், எங்கு நோக்கினும் வெற்றி பெற்றவர்கள். அவர்கள் வாழ்க்கை இன்றைய சமுதாயத்திற்கு மட்டும் இல்லாமல் வருங்கால சமுதாயத்திற்கும் ஒளி தரும் சுடராய், மக்களுக்கும், மாணவ மாணவியருக்கும் பயன் தர வேண்டும் என்கிற எண்ணத்தில் இதை எழுதியுள்ளேன்.

இந்நூலுக்கு மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் அருளுடன் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். மத்திய, மாநில அரசுகளில் பல பதவிகளை அமைச்சராகவும், மகாராஷ்டிர மாநில ஆளுநராகவும் வகித்து இருந்த அவர்களுக்கு கல்வியுலகில் பெரிய தலைமை இருக்கிறது. எங்கள் கல்வி நிறுவனங்களின் அறக்கட்டளையின் உறுப்பினராகவும் இருந்து அவற்றின் வளர்ச்சியிலும், உயர்விலும் மிகுந்த அக்கரை கொண்டு அவ்வப்போது வழிகாட்டி வருகிறார்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


இந்த நூலை வெளியிட கேட்டபொழுது, என் வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக் கொண்டு தன் ஆக்கமுள்ள கரங்களால் வெளியிட்ட அன்புச் சகோதரி முனைவர் திருமதி. இராதா தியாகராஜன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். அவர்கள் தியாகராஜர் பஞ்சாலை நிறுவனத்தின் தலைவராகவும், அழகப்பா பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகவும், தமிழுக்கும் தமிழகத்திற்கும் செய்து வரும் தொண்டுகள் பலபல. எங்கள் அறக்கட்டளையின் உறுப்பினராகவும், பல் கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் செய்து வரும் கல்வித் தொண்டு பெரிது.

இந்நூல் நல்ல முறையில் வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளில் எனக்கு உதவியாக இருக்கும் அவினாசிலிங்கம் பல்கலைக்கழக பதிவாளர், டாக்டர் (திருமதி) சரோஜா பிரபாகரன் அவர்களுக்கும் என் நன்றி. கருத்துடன் இதை அச்சிட்டுத் தந்திருக்கும் திரு. அய்யம்பெருமாளுக்கும் நன்றி. புகைப்படங்கள் வழங்கிய திரு. கண்ணனுக்கும், அட்டைப்படத்தை வடி வமைத்துத் தந்த திரு. சுவாமிநாதனுக்கும் நன்றி.

உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து இருந்த நினைவு களின் அடிப்படையில் பல விபரங்களைக் கொண்டிருக் கும் இந்தப் படைப்பு அவினாசிலிங்கம் நிறுவனங்களின் சரித்திரத்தில் இடம் பெறும் என்ற நம்பிக்கையில், இதை அய்யா அவர்களுக்கே அர்ப்பணிக்கிறேன்.

மே 5, 1997

( இராசம்மாள் பா. தேவதாஸ் )
வேந்தர்
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் – 43



திரு சி. சுப்பிரமணியம் அவர்கள்

**சி. சுப்பிரமணியம்**

1, ரிவர் வியூ
கோட்டூர்புரம்
சென்னை – 600 085

நாள் : 5.5.1997

# அணிந்துரை

திரு அவினாசிலிங்கம் ஐயா அவர்கள் ஒரு அபூர்வ புருஷர். பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வக்கீல் தொழிலுக்குப் படித்து இவைகளையெல்லாம் துறந்து தெய்வீகப் பணியிலும், தேசப் பணியிலும் ஈடுபட்டவர். இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர். பரமஹம்சரின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான சுவாமி சிவானந்த மஹராஜ் அவர்களிடம் தீட்சை பெற்றவர். மகாத்மா காந்தியடிகளின் சிஷ்யராகவும் விளங்கி தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்று பெரிய தியாகங்களைச் செய்தவர்.

இத்துடன் பல ஆக்கப்பணிகளிலும் ஈடுபட்டு மக்களின் மேன்மைக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து கொண்டார். முக்கியமாக கல்வித் துறையில் தனது கவனத்தைச் செலுத்திக் கல்வி நிறுவனங்களை நிறுவினார். ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம் பெரியநாயக்கன் பாளையத்தில் (கோவை மாவட்டம்) அமைக்கப்பெற்று ஆரம்பப்பள்ளியிலிருந்து ஆராய்ச்சி படிப்புவரை கொண்ட சிறந்த பெரும் கல்வி நிலையமாக விளங்குகிறது. 5000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்விப் பயின்று பயனடைகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் பெண்கள் கல்வியைத் தன்னுடைய பிரசங்கங்களிலும் எழுத்துக்களிலும் வலியுறுத்தியுள்ளார். சுவாமிஜியிடம் பக்தி கொண்ட ஐயா அவர்கள்

பெண்கள் கல்விக்காக அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை 1957–ல் நிறுவினார். இந்த ஸ்தாபனம் ஆல் போல் தழைத்து அருகு போல் வேறூன்றி இன்று ஒரு பல் கலைக் கழகமாகத் திகழ்கின்றது. இங்கும் மழலை ஆரம்பப் பள்ளியிலிருந்து ஆராய்ச்சிப் படிப்பு வரை நடை பெறு கிறது. 7000 குழந்தைகள் இந்த நிறுவனத்தில் கல்வி பெற்று வருகின்றனர். இந்தப் பல்கலைக்கழகம் உலகப் புகழ் பெற்று விளங்குகிறது. இந்தப் பெண்கள் கல்வி நிறு வனத்தை ஆரம்பிக்கவும், வளர்க்கவும், ஐயாவுக்குப் பெரி தும் ஒத்துழைத்தவர் டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ் அவர்கள். உலகப் புகழ் பெற்ற மனை இயல் நிபுணர். இந்த நிறுவனத்தின் நலனும், வளர்ச்சியும் தன்னுடைய வாழ்க்கையாக ஏற்றுத் தொண்டாற்றி வருகிறார். இன்று பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் விளங்குகிறார்.

இராஜம்மாள் அவர்கள், ஐயா அவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் இந்த அரிய நிறுவனத்தின் வரலாற்றைப் பற்றியும் இந்த நூலில் இயற்றியுள்ளார். இந்நூல் தமிழ் மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என நம்புகிறேன். ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாறு இளந்தலை முறைக்கு ஒரு வழிகாட்டியாக புத்துணர்ச்சியை ஊட்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

சி. சுப்பிரமணியம்.

(சி. சுப்பிரமணியம்)

**டாக்டர் இராதா தியாகராஜன்**
தலைவர் / நிர்வாக இயக்குநர்
தியாகராஜர் பஞ்சாலை

மதுரை
நாள் : 5.5.1997

# வெளியீட்டுரை



பெருமக்களே!

இப்பாராட்டு விழாவில் வரலாற்றுப் பேழையென விளங்கும் ஓர் அரிய நூலை மகிழ்ச்சியோடு வெளியிடும் நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். கல்வி வரலாற்றின் ஓர் ஆவணமாகவே திகழும் இந்த நூலை, நம் பெருமதிப்பிற்குரிய சகோதரி, அவிநாசிலிங்கம் பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர் இராசம்மாள் தேவதாஸ் அவர்கள் திறம்பட எழுதியுள்ளார்கள்.

இந்த நூலில், மூன்று பேராறுகள் திரிவேணி சங்கமத்தில் ஒன்று கலப்பது போல, மூன்று அரிய வரலாறுகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

தியாகச் சுடராய் தூய நல் வாழ்வின் சான்றாய் ஊக்கம் மிகுந்த முயற்சியின் உயர் மலையாய், காந்திய வழியில் வாழ்ந்து கல்விக்கும், சிறப்பாகப் பெண் கல்விக்கும் தமது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட பெருந்தகையார் டாக்டர் அவினாசிலிங்கம் அய்யா அவர்களின் பெரு வாழ்வு கங்கை ஆறு போல வெள்ள மிடுகிறது.

உலகப் புகழ் பெற்ற மனையியல் மேதை, அறிவியல் விஞ்ஞானி, இக்கல்வித் துறையில் நம் நாட்டுக்கு ஒப்பற்ற சேவை புரிந்து வரும் நல்லறிஞர், சகோதரி டாக்டர் இராசம்மாள் அவர்கள் கல்விச் சேவையில் வளர்ந்த சுவைமிக்க வரலாறு யமுனை நதிபோல இனிமையுறப் பாய்கின்றது.

இந்த இரண்டு பெருமக்களின் ஈடு இணையற்ற பெரு முயற்சியால் இக்கோவை மாநகரில் பெண் கல்விக்கு ஒரு பெரு நிலையமாய் அவினாசிலிங்கம் உயர் கல்வி நிலையங்கள் தோன்றி வளர்ந்த வரலாறு சரசுவதி ஆறு போல விளங்குகிறது.

நூலாசிரியர் அவர்கள் தமது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்த நினைவுகளின் அடிப்படையில் சுவையான பல செய்திகளைத் தொகுத்து இந்த வரலாற்றை உருவாக்கித் தியாகச் செம்மலான அய்யா அவினாசிலிங்கம் அவர்களுக்கே அர்ப்பணித்திருக்கிறார்கள்.

இதை ஒரு வரலாறாக எழுதி உள்ளார்கள் என்பதை விட, அய்யா அவர்களின் உயர்ந்த உள்ளம், தன்னலமற்ற தொண்டு, தூய இதயம் கொண்டு வாழ்ந்த இமய வாழ்வு

ஆகியவற்றிற்கு ஓர் இதய அஞ்சலி மலராக இதைப் படைக் கிறார்கள் என்று சொல்வது மிகையாகாது.

மதிப்பிற்குரிய அவினாசிலிங்கம் அய்யா அவர்கள் உயர்ந்த கொள்கைகள் பலவற்றைக் கொண்டு இருந்த வர்கள். அவற்றில் நம் நாடு எதிர்காலத்தில் தலை சிறந்து விளங்க வேண்டும் என்ற விருப்பமே மேம்பட்டு விளங் கியது. அதனை அவர்களின் வாக்காகவே நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

''எதிர்காலத்தில் நம் நாடு எல்லா விதங்களிலும் சிறப் புற்று விளங்க வேண்டும் என்கிற வேட்கை நம் மனதில் நிறைந்திருக்க வேண்டும். அந்த வேட்கையை நிறைவு செய்ய வேண்டுமானால், நம் மனத்தில் தளராத ஊக்கத் தையும், சலியாத உழைப்பையும் ஆற்றலையும் நாம் பெற வேண்டும்'' என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருந்த அய்யா அவர்கள் சுதந்திர இந்தியாவில் தமிழகத்தில் முதல் கல்வி அமைச்சராக அமர்ந்து, கல்வித் துறையில் அடிப்படையான பெரிய மாற்றங்களைத் துணி வோடு ஏற்படுத்தினார்கள். தமிழைப் பயிற்சி மொழி ஆக் கினார்கள். காந்தியடிகளின் ஆதாரக் கல்விக்கு முன் னுரிமை தந்து, சமுதாயத்தோடு இணைந்த கல்வித் திட்டத் தைக் கொண்டு வந்தார்கள். திருக்குறளைப் பாடத் திட்டத்தில் சேர்த்தார்கள்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தை நிறுவி தமிழ்க் கலைக் களஞ்சியத்தைத் தொகுக்கச் செய்தார்கள். அவருடைய ஆக்கப் பணிகள் பெரும்பாலும் கோவை மாநகரைச் சுற் றியே அமைந்தன. இராமகிருஷ்ண வித்யாலயம், அதைச்

சார்ந்த பல கல்வி நிலையங்கள் எல்லாம் அவர் கை வண்ணத்தால் வளர்ந்தன. தனி வாழ்க்கையில் தெய்வ நம்பிக்கை, பிரார்த்தனை, சிறந்த நூல்களைப் படித்தல், ஒழுங்கு முறை பிறழாத காலக் கணிப்புடைய வாழ்வு ஆகியவற்றைக் கொண்டு இருந்த அய்யா அவர்கள், வித்யாலயத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் குருகுலப் பயிற்சி அளித்து, மேற்கண்ட நற்பண்புகளை அவர்களுக்கும் ஊட்டி சிறந்த நன்மக்களாக உருவாக்கினார்கள்.

அவர்களுடைய கல்விச் சேவையில் முக்கியமான பகுதி பெண் கல்வி ஆகும். இன்று உலகிலேயே ஒரே ஒரு மனையியற் பல்கலைக் கழகமாக இந்த அவினாசிலிங்கம் மனையியற் பல்கலைக் கழகம் விளங்குகிறது என்றால், அதற்கு அய்யா அவர்களின் உயர்ந்த தொலை நோக்குப் பார்வையும், ''நாம் மிக உயர்ந்த காரியங்களைச் செய்வதற்குப் பிறந்து இருக்கிறோம். அதனை நிறைவேற்ற வேண்டும்'' என்ற அவர்களது வேட்கையும் அவர்களுக்கு இருந்த செல்வாக்கும், ஊக்கமும் ஒரு பெருங்காரணம் ஆகும். அதைப் போலவே சகோதரி டாக்டர் இராசம்மாள் அவர்களின், தனி ஆற்றல்களை அய்யா அவர்கள் தொடக்கத்திலேயே புரிந்து கொண்டு, அவர்களின் உயர் கல்விக்கும், வெளிநாட்டுப் பணிகளுக்கும் இந்தியாவில் அவர்கள் ஆற்றிய சேவைக்கும் உறுதுணையாக இருந்து இவற்றுக்குச் சிகரம் வைத்தது போல் கோவையில் மனையியற் கல்லூரியை உருவாக்கி, அது படிப்படியாக வளர்ந்து, ஒரு பல்கலைக் கழகமாக உயர ஊக்கமும் ஆக்கமும் அளித்தார்கள். சகோதரி இராசம்மாள் அவர்களின்

அரிய ஆற்றலும் ஆய்வுத் திறமையும், சேவையின் மேன் மையும் அதனால் அவர்கள் பெற்ற உலகப் புகழும் இந்த மனையியற் கல்லூரியின் பெரு வளர்ச்சிக்கும் பல் கலைக் கழகத்தின் தோற்றத்திற்கும் உறுதுணை ஆயின.

1952–ஆம் ஆண்டு அய்யா அவர்கள் தோற்றுவித்த அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை, மகளிர் கல்விக் காகப் பதிவு செய்யப்பட்டுப் புகழ்மிக்க பெருமக்களை ஆயுள் உறுப்பினராகக் கொண்டு, கடந்த 45 ஆண்டு களாக ஆற்றிவரும் கல்விப் பணி இந்த நூலில் அழகாகச் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. அவற்றில் சிறப்பான இடம் பெறும் மனையியற் பல்கலைக் கழகம் 1988–இல் தோற்று விக்கப்பட்டு, புதிய வேலை வாய்ப்புக் கல்வியுடன் கூடிய சமுதாயப் பணிகளோடு இணைந்த கல்வித் திட்டங்களை அமைத்து வெற்றிகரமாக நடத்தி வருவது பெரிதும் போற்றத் தக்கது. இப்பல்கலைக்கழகத்திற்கு வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களின் தொடர்புகள், அவற் றோடு கல்விப் பரிமாற்றம், அவற்றின் மூலம் முன்னேற்ற மான கல்விச் சாதனங்கள் ஆகியவை அமைந்து தற்காலக் கல்வியின் மேம்பட்ட கூறுபாடுகளுடன் இப்பல்கலைக் கழகம் பீடுநடை இட்டு வருகிறது. இங்கு முதுகலைப் பட் டப் படிப்புகளே பதினெட்டுக்கு மேல் அமைந்துள்ளன என்பதையும் ஐந்து வருடச் சிறப்புப் படிப்பு முற்றிலும் புதிய துறைகளோடு இணைந்த மனையியல் கல்வியாக அமைந்துள்ளது என்பதையும் இந்த நூலால் அறிந்து மகிழ்கிறோம்.

இக்கல்வி நிலையங்கள் ஆற்றி வரும் சேவையைக் கண்ணாரக் கண்டு அய்யா அவர்கள், தமது இறுதி நாட்

களில் மிக்க மனநிறைவோடு, ''நான் மிகவும் கொடுத்து வைத்தவன்; எனக்கு குருமகராஜ் அருளால் வாழ்க்கையில் அனைத்தும் கை கூடி இருக்கிறது'' என்று கூறினார், என இந்த நூலாசிரியர் முத்தாய்ப்பு வைக்கும் பொழுது நம் கண்கள் பனிக்கின்றன.

அர்ப்பணிப்பு உணர்வோடும், அஞ்சலிக்கும் இதயத்தோடும், சமுதாயப் பரிவுணர்ச்சியோடும் உயர்கல்வி வேட்கையோடும் அய்யா அவர்களின் வாழ்க்கை வரலாறாக, பெண் கல்வியின் சாதனை வரலாறாக, ஓர் அறிவியல் அறிஞரின் சேவை வரலாறாக எழுதப்பட்டது இந்த நூல். அறிஞர் சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்த நூலின் அணிந்துரையில் கூறுவதுபோல் இளந்தலைமுறைக்கு ஒரு வழிகாட்டியாக நின்று புத்துணர்ச்சியை ஊட்டும் என்று கூறி, இந்த நூலை மிக மகிழ்ச்சியோடு வெளியிடுகின்றேன். எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் இராசம்மாள் தேவதாஸ் அவர்களுக்கும், இக்கல்வி அறக்கட்டளை உறுப்பினர்களுக்கும் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# 1. முதல் சந்திப்புகள்

நான் முதன் முதலாக அய்யா டாக்டர் தி.சு. அவினாசி லிங்கம் அவர்கள் பெயரைச் செய்தித் தாட்களில், அவர்கள் மத்திய சட்டப் பேரவையில் (Central Assembly) வீர முழக்கங்கள் செய்தது பற்றியும், ஆங்கில சாம்ராஜ் யத்தைக் கேள்விகள் கேட்டுக் குலுக்கியது பற்றியும் படித்ததன் மூலமாகத்தான் தெரிந்து கொண்டேன். அன்று மாணவர் தலைவரும், பிறகு என் தங்கை லீலா வின் கணவருமான, அமரர் திரவியம் அவர்கள் அடிக்கடி அய்யா அவர்களின் சுதந்திரப் போராட்ட ஈடுபாடுகள், நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுவார்கள். இந்தியா சுதந் திரம் பெற்றதும் தமிழக அமைச்சரவையில் அவர்கள் இடம் பெறுவார்கள் என்பது உறுதி என்றும் கூறு வார்கள். இப்படிப்பட்ட அசாதாரண தியாகியைப் பற்றி நான் கேட்டதும், படித்ததுமாகிய அனைத்தும் என் உள்ளத்தில் பதிந்தன.

1947—ம் ஆண்டு மத்தியில் தமிழக அமைச்சரவை நியமனமாயிற்று. அய்யா அவர்கள் கல்வி அமைச்சரா னார்கள். அப்போது நான் படித்துப் பட்டம் பெற்ற ராணி மேரிக் கல்லூரியில், முதல் மனையியல் விரிவுரையாள ராகப் (Asst. Lecturer in Household Art) பணி புரிந்து கொண்டி ருந்தேன். நானும் என் தங்கை லீலாவும், இன்னும் சிலரும், சுதந்திர இயக்கத்தில் பேரார்வம் கொண்டு கதர் அணிவதிலும், கைராட்டையில் (Charka) நூல் நூற் பதிலும், விடுதலைப் போராட்டத்தில் இறங்கியவர்க ளுக்கு மறைமுகமாக உதவி செய்வதிலும், எங்கள் பொருள், நேரம், திறமைகளைத் தந்து வந்தோம். என் தம்பி இராஜதுரையும் விடுதலை இயக்கத்தில் சேர்ந் திருந்தான்.

1947—ம் ஆண்டு ஆகஸ்ட் 15—ம் தேதி — 14ம் தேதி நள்ளிரவில் பாரத நாட்டின் சுதந்திரம் பிரகடனமாயிற்று. வெள்ளையர், கத்தியின்றி, ரத்தமின்றி, நட்பு—வெறுப் பின்றி வெளியேறலாயினர். ''தாயின் மணிக்கொடி பாரீர்; அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்'' என்ற பாரதியார் பாடலுக்கேற்ப, முதல் சுதந்திரத் திருநாளாகிய அன்று ராணி மேரிக் கல்லூரியிலும் (ஆங்கிலேயர் ஆட்சி புரிந்து வந்த அந்த அரசுக் கல்லூரி) முதன் முதலாகச் சுதந்திர நாட்டின் தாயின் மணிக்கொடியை — மூவர்ணக் கொடியை — ஏற்றுவதற்காகச் சுதந்திர இந்தியாவின், தமிழகத்தின் முதல் கல்வி அமைச்சர் அய்யா அவர்களை அழைத்திருந்தோம். நான் அய்யா அவர்களை முதன் முதலில் பார்த்தது அன்று தான். தூய வெள்ளைகதரா டையில், நெற்றியில் நிறைந்த விபூதியுடன் சிவபெரு மானே எழுந்தருளிய மாதிரி, கம்பீரத் தோற்றமுடன் கவின்மிகுத் தேசியக் கொடியை ஏற்றி, ஆற்றிய உரை, கணீர், கணீர் என்று இன்னும் என் உள்ளத்தில் தொனித் துக் கொண்டிருக்கிறது. ''நாம் அண்ணல் காந்தியடி களின் தலைமையில் இப்போது பெற்றிருக்கும் சுதந் திரம், அரசியல் சுதந்திரம் — இது முதற்படி — அடுத்து நம்மை வாட்டும் வறுமையிலிருந்தும் அறியாமையி லிருந்தும் சுதந்திரம் பெற நீங்கள் அனைவரும் உறுதி எடுத்துக் கொண்டு செயல்பட முன் வரவேண்டும்'' என்று அறை கூவினார்கள். அன்றே, அவர்களை மானசீகமாக என்னுடைய மாபெரும் ஆசானாக ஏற்றுக் கொண்டேன். அவர்களிடம் வெளிப்பட்ட தியாக உணர்வும், நாட்டுப் பற்றும், பரிவும் என்னைக் கவர்ந்தன.

அதே வாரத்தில் நான் மத்திய அரசினரால், பலமான போட்டியில், ஆண்டவன் அருளால், உயர்ந்த தகுதிக் காகத் (merit) தேர்ந்தெடுக்கப்பட்டு, வட அமெரிக்காவுக்கு, நமது மத்திய அரசின் செலவிலேயே முதல் மனையியல்

மாணவியாக மேற்படிப்புக்காகப் புறப்பட ஏற்பாடு ஆகியிருந்தது. அரசுக் கல்லூரியில் வேலை பார்த்து வந்தபடியால் அரசின் உத்தரவைப் பெற வேண்டியிருந்தது. அதற்காக நான் பேருந்தில் புறப்படுவதற்காக மெரினா சாலையில் (கல்லூரிக்கு அருகில்) நின்று கொண்டிருந்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கார் அந்தப் பக்கம் வந்தது; நின்றது. என்னை ஏறிக் கொள்ளும்படி அமைச்சர் பணித்தார்கள். நான் ஏறியதும் கார் புறப்பட்டது. ''நீங்கள் எங்கே போக வேண்டும்?'' என்று அய்யா அவர்கள் கேட்க, நான், ''அரசுத் தலைமைச் செயலகத்திற்குச் சென்று, கல்விச் செயலரிடம் இருந்து ''ஆட்சேபனை இல்லை'' என்ற சான்றிதழை ( 'No objection' certificate ) வாங்க வேண்டும். அதற்காக தலைமைச் செயலகத்திற்குப் போக பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன்'' என்று சொன்னேன். நான் முரட்டுக் கதர் புடவை கட்டிக் கொண்டிருந்ததைக் கவனித்த அய்யா அவர்கள், ''நீங்கள் எப்பொழுதுமே கதர் தான் உடுத்துவீர்களா?'' என்று கேட்டார்கள். ''ஆம், 1942—ல் வெள்ளையனே வெளியேறு என்ற காந்தியடிகளின் அறை கூவலுக்குப் பிறகு கதர் மட்டும் அணிவதை என் கொள்கையாக்கிக் கொண்டேன். அதற்காக மகாத்மா காந்தி மாணவிகளைச் சந்தித்த போதும் உறுதியும் தந்திருக்கிறேன்'' என்றேன். பல வேளைகளில் சில இடங்களில் காத்திருக்க வேண்டிய கட்டாயம் வரும் போதும், ரிக்ஷா, பஸ்ஸில் பயணம் செய்யும் போதும், காலத்தை வீணாக்காமல் படிப்பதற்காக ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துச் செல்வேன். அன்றும் என் கையில் ஒரு புத்தகம் ''வாழ்வுக் கலை'' என்ற தலைப்பில் பிரெஞ்சு ஆசிரியர் ஆண்டிரே மார்வா எழுதியது (Art of Living by French Author Andre Marvois) இருந்தது. அந்தப் புத்தகத்தை அய்யா அவர்கள் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தார்கள். தலைமைச் செயலகமும் வந்தது. அய்யா அவர்கள் தனது அலுவல

கத்தில் இறங்கி விட்டு, எனக்காகக் கல்விச் செயலரிடம் தொலைபேசியில் பேசி, உதவி செய்து, என் காரியம் முடிந்ததும் என்னைக் கல்லூரியில் இறக்கி விட்டுத் திரும்பும்படி டிரைவரிடம் சொல்லி விட்டு, வழியனுப்பிக் கொண்டார்கள். அய்யா அவர்கள், சம்பந்தப்பட்ட அலுவலரிடம் சொல்லியிருந்தபடியால் 'ஆட்சேபனை இல்லை' என்ற சான்றிதழ் உடனே கிடைத்தது. முன் பின் தெரியாத, எந்தச் சொந்தமும் தொடர்பும் இல்லாத எனக்கு, எதிர்பாராத இந்த உதவி, பின்னர் என் வாழ்க்கைப் பாதையை மாற்றுவதற்கு முன்னோடியாக அமைந்து விட்டது போலும்!

சுதந்திர தினம் கொண்டாடிய மூன்றாவது தினம் இரவு பம்பாய்க்கு இரயிலில் சென்று, அங்கிருந்து ஆகஸ்ட் 21—ம் தேதி லண்டனுக்குப் புறப்படும் ஸ்ட்ராத் மோர் (Steamship S.S. Strathmore) என்ற நீராவிக் கப்பலில் செல்லுவதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்திருந்தபடி, தாமஸ் கூக் (Thomas Cook and Sons) என்ற அதிகார பயண முகவர் (Official Travel Agents) என்னிடம் பயண டிக்கெட்டுகளையும் தந்திருந்தார்கள். அயல்நாட்டுக்கு முதன் முதலாகப் புறப்படுவதற்கு முன்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் வழியனுப்பி ஆசீர்வாதம் பெறுவதற்காக நானும் என் தங்கை லீலாவும் அவர்கள் குடியிருந்த சாந்தோம் (San Thome) சாலையிலிருந்த வீட்டுக்குச் சென்றோம்.

வழியனுப்பும் போது, ''என்னை மேல் நாட்டுக்கு உயர்கல்விக்காக மத்திய அரசு அனுப்புவதால், ராணி மேரிக் கல்லூரியிலிருந்து விடுப்பு (leave) கேட்டிருந்தேன். ஆனால் நான் பணியில் நிரந்தரமாக்கப்படாததால், அதாவது ஒரு ஆண்டு அனுபவம் மாத்திரமே உள்ளவளாக இருந்தபடியால், வேலையை ராஜினாமா செய்து விட்டுச்



அய்யா அவர்கள் புகைப்படம் பீங்கான் தட்டில் பதித்தது

செல்ல அரசு கட்டளையிட்டார்கள். அப்படியே வேலையை விட்டு விட்டுச் செல்லுகிறேன். ஆனால், நான் திரும்பி வரும்போது எனக்கு நீங்கள் தான் ஒரு வேலை தரவேண்டும்'' என்று கேட்டேன். உடனே அய்யா அவர்கள், ''அம்மா சௌக்கியமாகச் சென்று திரும்பி வாருங்கள். அப்போது உங்கள் பாதங்கள் பூமியில் படிந்து இருந்தால் பார்க்கலாம்'' என்றும், ''சாதாரண மாக வெளிநாடு செல்பவர்கள் திரும்புவதில்லை; ஒரு சிலர் திரும்பினாலும் அவர்கள் தரிப்பதில்லை; பறந்து கொண்டே இருப்பார்கள்'' என்று தனக்கே உரிய பாணியில் சிரித்துக் கொண்டு சொன்னார்கள். அய்யா அவர்களிடம், புகைப்படம் ஒன்று கேட்டேன். அன்புடன் தந்தார்கள். அந்தப் படம் 1947—ல் அமைச்சரவைக்காக எடுத்தது. இன்றும் என்னிடம்இருக்கிறது. 1957—ல் நான் ஜப்பான் நாட்டுக்குச் சென்ற போது, அங்குப் புகைப் படங்களைப் பீங்கான் தட்டில் பதிப்பதைக் கண்டு அந்தப் படத்தையும் பதித்துக் கொண்டேன். அது என்னுடைய அலுவலக அறையில் ஆசீர்வாதமாகக் காட்சி அளிக் கிறது.

*எங்கே தியாகம், சேவை இருக்கின்றதோ,*
*அங்கு எடுக்கப்படும் முயற்சிகள்*
*வெற்றிகரமாக முடியும். எல்லாவற்றிற்கும்*
*அடிப்படையாக இருக்க வேண்டியது அன்பு,*
*நட்பு, சேவையுணர்வு ஆகியவைதான்.*

*— தி.சு. அவினாசிலிங்கம்*

# 2. அமெரிக்காவிலிருக்கும் போது

மத்திய அரசு, அமெரிக்காவில், ஓஹையோ மாநிலப் பல் கலைக்கழகத்தில் (Ohio State University) எனக்கு மனையியல் கல்வியில் முதுகலைப்பட்டம் (Master's Degree in Home Economics Education) படிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்தியாவில் நாம் 'Home Science' என்பது அமெரிக்காவில் அக்காலத்தில் 'Home Economics' என்று வழங்கியது. அங்கு சேர்ந்து நான் கண்டதையும், உணர்ந்ததையும், அனு பவித்ததையும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அய்யா அவர்களுக்கும், அவரவருக்கு ஏற்றவாறு, எவற் றைப் பற்றி விருப்பம் கொண்டிருந்தார்களோ, அவற் றைப் பற்றி எழுதிக் கொண்டிருந்தேன்.

அய்யா அவர்கள் கல்வி அமைச்சராகத் தீவிரமான புரட்சிகளைக் கல்வியுலகில் செய்து வருவதைக் கல்வித் துறையில் பணிபுரிந்து கொண்டு, இந்தியாவிலிருந்து வருகை தந்த, திருமதி சார்லஸ் போன்றவர்கள் கூறி னார்கள். தமிழ் பயிற்சி மொழியானது; திருக்குறள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றது; நூல் நிலையச் சட்டம் (Local Library Act) அமலாக்கப்பட்டது; உயர்நிலைக் கல்வித் திட்டத்தில் வரலாற்றையும், புவியியலையும் (Integration of History and Geography as Social Studies) இணைத்துச் சமுதாயக் கல்வி என்று ஒன்றுபடுத்தியது; ஆதாரக் கல்விக்கு முன் னுரிமை தந்தது; சமுதாயத்துடன் இணைந்த கல்வித் திட்டம்; வாழ்க்கைத் தேவைகளின் அடிப்படையில் அமைந்த கல்வி, என்றெல்லாம் வேகமாகப் புயல் போல், அலை அலையாகச் சீர்த்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இவற்றைக் கேள்வியுற்ற நான், இவற்றிற்குச் சம்பந்த மான செய்திகளைக் குறிப்புகளாகவும், இலக்கியச்

சான்றுகளாகவும் (references and literature) அய்யா அவர் களுக்கு அவ்வப்போது ஓஹையோவிலிருந்து அனுப்பி வைத்தேன். அவர்களும் அவற்றை ஏற்று நன்றி தெரி வித்து எழுதினார்கள். நான் அமெரிக்காவுக்குச் சென்ற முதல் ஆண்டில் விமானம் மூலம் தபால்கள் கிடையாது. கப்பலில் தான் கடிதங்கள், பார்சல்கள் அனுப்பப்பட்டன. அவை சுமார் 1½-2 மாதங்கள் கழித்துத் தான் கிடைக்கும். 1948 பிற்பகுதியிலிருந்து விமானம் மூலம் தபால்கள் ஆரம்பிக்கப்பட்டு 7—10 நாட்களில் தபால் கிடைக்க ஆரம்பித்தது. அது தாய் நாட்டின் 'தூரம்' என்ற துயரத் தைச் சற்று மாற்றியது. ஆனால் தபால் எப்பொழுது வரும் என்ற ஏக்கம் மாத்திரம் மாறவே இல்லை.

அமெரிக்க கல்வித் திட்டங்களில் குழந்தைப் பள்ளி முதல் பல்கலைக்கழகப் படிப்பு வரையிலும் இருந்த நெருங்கிய இணைப்புக் கோர்வையும், ஆசிரியர் எந்தக் கட்டத்தில் — குழந்தைப் பள்ளி, ஆரம்பப்பள்ளி, மேல் நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம் — என்று பணிபுரிந் தாலும் அவரவர் தகுதிக்கேற்ற ஊதியம் கிடைத்ததும், அதனால் குழந்தைப் பள்ளி அல்லது ஆரம்பப் பள்ளிக்குக் கூட முனைவர் (Ph.D.) பட்டப்படிப்பு உள்ள வர்களும் கல்வி புகட்டியதும், தகுதிக்கேற்ற ஊதியம் பெற்றதும், கல்விக்கு வயது அல்லது எல்லை வகுக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில், ஆசிரி யர்களும் மற்ற முதியோரும் தொடர்ந்து கல்வி கற்று வந்ததும், நூல் நிலையம், மற்ற கல்விச் சாதனங்கள் (teaching aids) ஏராளமாக அனைவருக்கும் கிடைத்ததும், பங்கு கொள்ளுதல், பங்கு பரிமாற்றம் (Participatory learning) என்ற அடிப்படையில், மாணவ மாணவியரும் ஆசிரி யருடன் படிப்பில் பங்கெடுத்ததும், வகுப்பில் மாணவ ருக்குக் குறிப்புகளை ஆசிரியர் சொல்லச் சொல்ல எழு தும்படி கட்டாயப்படுத்தல் (Dictation of Notes) இல்லாத அமைப்பும், ஆசிரியரே தேர்வு, மதிப்பெண்கள் முழுவதற்

கும் பொறுப்பாக (total internal assessment) இருந்தபடியால், வெளித்தேர்வு என்ற 'அரக்கன்' மாணவ மாணவியரை அச்சுறுத்துவதுமான நிலை இல்லாததும், அனைத்தும் என்னைக் கவர்ந்தது மாத்திரமல்ல, எல்லையற்றுப் படிக்கவும், அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் தூண்டின. இந்த நிலை நம் நாட்டில் வரவேண்டும் என்று மிகவும் ஏங்கினேன்; துடித்தேன். அய்யா அவர்களுக்கு இவற்றைப் பற்றி எழுதிக் கொண்டே இருந்தேன்.

1949–ம் ஆண்டில் தமிழ் நாட்டில் அமைச்சு மாறியது. அதில் அய்யா அவர்கள் சேரவில்லை. ''நான் அமைச்சராக இல்லாவிட்டாலும், நீங்கள் திரும்பும் போது உங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தர முடியும்'' என்று எழுதினார்கள். எப்படி வாழ்க்கைப் பாதையில் எல்லாத் துறைகளிலும் பாச–பந்தமற்று விளங்கினார்களோ, அந்தப் படியே, அமைச்சர் கடமையையும் விட்டார்கள்

*''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்''*

என்ற குறள்படி எந்தவிதமான ஏமாற்றமும் விரக்தியுமின்றி, உடனே தனது இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்திற்குத் திரும்பி மீண்டும் கல்விப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகத்தை முதன் முறையாக அமைத்துத் தமிழ் கலைக்களஞ்சியத்தை இயற்றுவது; காந்திஜியின் படைப்புகளைத் தமிழில் கொண்டு வருவது, சுவாமி விவேகானந்தரின் படைப்புகளைத் தமிழில் மொழி பெயர்ப்பது, திருக்குறள் ஆராய்ச்சி போன்ற மாபெரும் இமாலய முயற்சிகளை மேற்கொண்டு, உன்னதமான நிறைவைக் கண்டார்கள்.

அப்பொழுது, தமிழகத்தில், மனையியல் கல்லூரி ஒன்றைத் தனியாக நிறுவ வேண்டும் என்ற ஆர்வம்

என்னை ஆழமாகத் தூண்டியதும் அய்யா அவர்களுக்கும் அமெரிக்காவிலிருந்து அதனைப் பற்றி எழுதினேன். ''நீங்கள் திரும்பிய பின்பு பார்க்கலாம்'' என்று உடனே ஒப்புதல் தருவது போல் கடிதமும் எழுதினார்கள்.

1949—ம் ஆண்டு எனக்கு ஓஹையோ பல்கலைக் கழகத்தில், அனைத்துக் கோணங்களிலும் முதல் இடம் பெற்ற மாணவியாக இருந்தபடியால், பல விருதுகள் கிடைத்தன. பல அறிவியல் கழகங்கள் தங்கள் அமைப்புக ளில் கௌரவ உறுப்பினராக அழைத்துச் சிறப்பித்தார்கள்.

மற்ற மாணவர்களுக்கில்லாத ஒரு தனிப் பெரு மையும் கிடைத்தது. அதுதான் ஓஹையோ மாநில சட்டப் பேரவையில் தங்கள் பேரவை நிகழ்ச்சியின் போது என்னைச் சொற்பொழிவாற்ற அழைத்ததும், சொற் பொழிவுக்குப் பின் எனக்குச் சிறப்புகள் அளித்துத் தங்கள் பேரவை குறிப்புகளில் என்னைப் பற்றி நிரந்தர மாக எழுதியதுமாகும். இவற்றை நமது அரசுக்கும், செய்தித்தாட்களுக்கும் வாஷிங்டன்னிலிருந்த இந்தியத் தூதரகத்திலிருந்து செய்தியாக அனுப்பினர். ஹிந்துசெய் தித்தாளில் இவற்றைக் கண்ணுற்ற அய்யா அவர்கள், உடனே என்னைப் பாராட்டிக் கடிதம் எழுதினார்கள்.

நான் ஓஹையோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, இப்பொழுது மத்திய மேலவையின் நியமன உறுப்பினராக இருக்கும் முனை வர் எம். அறம் அவர்களை அய்யா அவர்கள் இராம கிருஷ்ண மிஷன் ஆசிரியக் கல்லூரியில் விரிவுரையாள ராக நியமித்து இருந்தார்கள். ஆங்கிலத் துறையில் எம். ஏ. பட்டதாரியான அவர்களை கல்வியியலில் முனைவர் பட்டத்திற்கு படிக்க அமெரிக்காவுக்கு அனுப்ப அய்யா அவர்கள் விரும்பி அதற்கு உதவி செய்யும்படி அய்யா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தன்னுடன் பணியாற் றுபவர்கள் மீது அய்யா அவர்கள் மிகுந்த அக்கறை காட்டு

வது வழக்கம். ஓஹையோவில் அறம் அவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. பேராசிரியர் எட்கார் டேலும், மில்டன் மெக்பீனும் பேருதவி செய்தார்கள். 1950–53 வரை அங்கு படித்து முனைவர் பட்டத்தோடு டாக்டர் அறம் திரும்பி வந்து வித்யாலயத்தில் பல ஆண்டு கள் பணி செய்தார்கள்.

நான் அமெரிக்காவில் இருந்த 34 மாதங்களில், ஏராளமான நண்பர்களைப் பெற முடிந்தது. அவர்கள் பல தரத்தினர், பல வயதினர், அறிஞர்கள், தாய்மார்கள், கிறிஸ்துவ ஆலயச் சம்பந்தமுள்ளவர்கள், பல்கலைக் கழகத்தில் என்னுடன் படித்தவர்கள், ஆசிரியர்கள் ஆவார்கள். சென்ற 48 ஆண்டுகளாக அவர்கள் தொடர்பு இருப்பதுடன் பலர் அய்யா அவர்களைக் கண்டு உபசரிக் கும் வாய்ப்புகளையும் பெற்றார்கள். இன்று பலர் விண் ணுலகம் அடைந்து விட்டனர். ஆனாலும் அவர்களுடைய அன்பு நினைவுகள் என்னை விட்டு அகலாதபடி நிரந்தர மாக விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

*எதிர்காலத்தில் நம் நாடு எல்லா*
*விதங்களிலும் சிறப்புற்று விளங்க வேண்டும்*
*என்கிற வேட்கை நம் மனத்தில்*
*நிறைந்திருக்க வேண்டும்.*
*அந்த வேட்கையை நிறைவு செய்ய*
*வேண்டுமானால் நம் மனத்தில் தளராத*
*ஊக்கத்தையும் சலியா உழைப்பையும்*
*ஆற்றலையும் நாம் பெற வேண்டும்.*

*– தி.சு. அவினாசிலிங்கம்*

# 3. 1950–ல் தாயகம் திரும்பிய போது

ஆண்டவனருளாலும், ஒஹையோ ஸ்டேட் பல்கலைக்கழ கத்தில் எனக்கு அமைந்த டீன், பேராசிரியர், முனைவர் கிளாடிஸ் பிரேனகன் (Dr. Gladys Branegan) (பிற்காலத்தில் ஓய்வு கிடைத்த பின் திருமணமாகி Gladys Branegan Chalkley ஆனார்கள்) அவர்களின் பேரன்பினாலும், மூன்று வருட முனைவர் பட்டப்படிப்பை இரண்டே முக்கால் வருடங் களில் முடித்து, உடன் ஒரு M.Sc. M.A. பட்டங்களையும் பெற்று, மத்திய அரசின் ஏற்பாட்டின்படி ஜூன் 1950, முதல் வாரத்தில் நியூயார்க் நகரத்திலிருந்து 'ராணி எலி சபெத்' என்ற பிரமாதமான, உலகப் பிரசித்தி பெற்ற கப்பலில் தாய்நாட்டிற்கு, லண்டன் மாநகர் வழியாகப் புறப்பட்டேன். லண்டனில் ஒரு மாத கால இடைவேளை கிடைத்தது. அப்பொழுது சில ஐரோப்பிய நாடுகளைப் பார்க்க ஒஹையோவில் என்னுடன் படித்த நண்பர் செல்வி மார்லிசா பிரிச்சி உதவி செய்தார்கள். பிறகு பம்பாய்க்கு 'ஜல ஜவகர்' என்ற இந்திய நாட்டுக் கப்பலில் லண்டனிலிருந்து புறப்பட்டு மூன்று வாரங்கள் கழித்து பம்பாய் வந்து சேர்ந்தேன். என் வாழ்க்கையில் எல்லா கட்டங்களிலும் என்னை உயர்த்தப் பேருதவியாக இருந்த என் கணவர், திரு எட்வர்ட் தேவதாஸ் அவர்கள், பம் பாயில் என்னைச் சந்தித்துச் சென்னைக்கு வசதியாக, என் பல மூட்டை முடிச்சுகளுடன் அழைத்து வந்தார்கள்.

நான் ராணி மேரிக் கல்லூரியில் மாணவித் தலைவி யாக இருந்த 1943–1944ம் ஆண்டில், முதன் முதலாக அந்த அரசுக் கல்லூரியில் தமிழச் சங்கம் நிறுவ விரும்

பினேன். அதற்காக பணம் சேர்க்கச் சிலப்பதிகாரக் காப்பியத்திலிருந்து, பேராசிரியர் காலஞ்சென்ற இராசா மணி அம்மையார் நாடகமாக எழுதித் தந்த 'கண்ணகி' நாடகத்தை மாணவியர் நடித்துப் பணம் திரட்ட, வெள்ளைக்கார ஆங்கிலேய முதல்வர் செல்வி கேதரீன் மயர்ஸ் அம்மையாரிடம் அனுமதி கேட்டோம். முதல்வர் அம்மையார், ''தமிழ் நாடகம் நமது பிரசித்தி பெற்ற கல்லூரியில் எடுபடாது. மக்கள் வரமாட்டார்கள். வேறு எங்காவது நிகழ்த்திக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி அனுமதி தந்து விட்டார்கள். எந்த அனுபவமும், வசதியும், சலுகையும் இல்லாத மாணவியர்களாகிய நாங்கள், பிரபல சினிமா டைரக்டர் திருவாளர் கே. சுப்பிரமணியம் அவர்களிடம் தெய்வச் செயலாகச் சென்றோம். அவர் எங்கள் மேல் அனுதாபம் கொண்டு, எங்கள் முதல் கன்னி முயற்சியை (maiden effort) ஆதரிக்க முன் வந்து புகழ் பெற்ற ரசிக ரஞ்சனி சபாவில் இலவசமாக இடம் வாங்கித் தந்ததுடன், ஆடை, ஒப்பனை, ஒத்திகை அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று நாடகம் மிகச் சிறப்புடன் முடியவும், சுமார் ரூ.5,000 நிகர லாபம் பெறவும் (இன்று அது லட்சம் ரூபாய் போலும்) கைம்மாறு எதுவும் கருதாமல் உதவி செய்ததுடன், அது முதல் 'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கு இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற திருக்குறளுக்கிணங்க ஆயுள் முழுவதும் சிறந்த நட்புக்கு இலக்கணமாக இருந்தார்கள். அவர்கள், இன்றைய பிரபல நடன நாட்டிய நிபுணர் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் (பத்ம பூஷன்), டாக்டர் கிருஷ்ணசாமி (Krishnaswamy Associates) ஆகியோரின் அருமைத் தந்தையாராவார். அவர் உதவியால் அரங்கேற்றப்பட்ட 'கண்ணகி' புகழடைந்து, ராணி மேரிக் கல்லூரியில் தமிழ்ச் சங்கமும் நிரந்தரமாக நிறுவப்பட்டது. டாக்டர் பத்மா சுப்பிரமணியமும், டாக்டர் கிருஷ்ணசாமி தம்பதியரும் இன்னும் எங்

களுக்கு இனிய நண்பர்களாக உதவிகள் செய்து வரு கின்றனர்.

பம்பாயிலிருந்து சென்னை மத்திய ரயில் நிலை யத்திற்கு டைரக்டர் திரு சுப்பிரமணியம், நிறைய சாமான் கள் இருக்குமென்று, பெரிய வேனுடன் என்னை வர வேற்க வந்திருந்து, வாழ்த்தி, என் தங்கை லீலா திர வியம் வசிக்கும் ஷெனாய் நகரில் எங்களை விட்டுச் சென்றார்கள். அய்யா அவர்கள் மேல் மிகுந்த பாசமும் மரியாதையும் கொண்டிருந்த அவர்கள், அய்யா அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காக எடுத்த எல்லா முயற்சிகளி லும் ஈடுபட்டு இயன்றதைச் செய்து வந்தார்கள்.

சென்னை வந்து சேர்ந்த அன்றே அய்யா அவர்கள் வீட்டிற்கு வந்து என்னைப் பார்த்து ஆசி கூறினார்கள். ''தனி மனையியல் கல்லூரி வேண்டும் என்ற ஆவல் இன்னும் உங்களுக்கு இருக்கிறதா?'' என்று கேட்டார்கள். ''ஆம் நிச்சயமாக; நான் அமெரிக்காவில் கற்ற கல்வியை முழுவதும் பயன்படுத்துவதற்கு அதுதான் வழி'' என்று அழுத்தமாகக் கூறினேன். ''நிச்சயம் அமைத்துத் தரு கிறேன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார்கள்.

சென்னையிலிருந்து, என் கணவர் போலீஸ் இன்ஸ் பெக்டராகப் பணி செய்து கொண்டிருந்த நாகப்பட் டினத்தை அடைந்தேன். மத்திய அரசின் உதாரத்துவ உதவித் தொகையினால் நான் அமெரிக்காவுக்கு மேற் படிப்புக்காக மூன்றாண்டு காலம் சென்றிருந்தபடியால், தாயகம் திரும்பியதும் அவர்கள் தரும் பணியில் ஐந்து ஆண்டுகளுக்காவது ஈடுபடுவேன்'' என்ற வாக்குறுதியை எழுதித் தந்திருந்தபடியால் — மத்திய அரசு என்னை எங்கு நியமிப்பார்கள் என்ற தபாலை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன்.

# 4. முதல் முறையாகக் கோவை இராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தில்

அந்த நாட்களில் அய்யா அவர்களிடமிருந்து கோவைக்க ருகில் அவர்கள் அமைத்துத் தங்கி இருந்த இராம கிருஷ்ண வித்யாலயத்திற்கு வந்து போகும்படி அழைப்பு வந்தது. இது கோவை மாவட்டத்தில் பெரியநாயக்கன் பாளையம் என்ற கிராமத்தில், கோவை நகரத்திலிருந்து சுமார் 22 கிலோ மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டிருந்தது. நானும் ஆவலுடன் ஆகஸ்ட் 1950—ல் வரும் தேதியைக் குறிப்பிட்டு எழுதிச் சென்றேன். கோவை ரயில் சந்திப் புக்கு அய்யா அவர்கள் கறுப்பு ப்ளைமவுத் கார் வந்திருந் தது. கார் டிரைவர் வித்யாலய விருந்தினர் இல்லத்திற்கு, என்னை அழைத்துக் கொண்டு போய்த் தங்கச் செய்தார்.

வித்யாலயத்தில் மூன்று நாட்கள் தங்குவதாகத் திட்டம். அங்குச் சென்ற பிறகுதான் அது அய்யா அவர்கள் நிறுவியது; அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த மாபெரிய கல்வி நிலையம் என்று உணர்ந்தேன். வித் யாலயத்தில், மழலைக் கல்வி முதல் முனைவர் பட்டப் படிப்பு வரையிலும் கல்வி புகட்டப் பல கல்வி நிலை யங்கள் இருந்தன. ஆண்களுக்கு என்று நிறுவப்பட்ட இந்தக் கல்வி நிலையங்கள் பண்டை குருகுல வாசம் போல் அமைந்திருந்தன. அய்யா அவர்கள், ஒரு கட்டிடத் தில் ஒரு புறத்தில் ஒரு அறையில் எளிமையாக வாழ்ந்து வந்தார்கள். என்னைப் பார்ப்பதற்கு நேரம் கொடுத்து,

நான் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது, ஒரு நோட்டுப் புத்தகத்தில் பல கேள்விகளை எழுதி வைத்திருந்து, அவற்றை ஒன்றன் பின் ஒன்றாகக் கேட்டார்கள். முதல் கேள்வியாக, ''நான் மனையியல் கல்லூரி அமைக்கச் சில ஆண்டுகள் ஆகலாம். அதுவரையில் எங்கு வேலை செய்ய விரும்புகிறீர்கள்?'' அதற்கு நான், ''மத்திய அரசின் நியதிப்படி அவர்கள் உத்தரவிடும் டெல்லியில் தான் வேலை பார்க்க வேண்டும். ஆனால், எனக்கு நான் விட்டுச் சென்ற ராணி மேரிக் கல்லூரியில் வேலை பார்க்கத்தான் ஆவலாக இருக்கிறது. அது தான் குடும்பத்தோடும் இருக்க உதவி செய்யும்'' என்று சொன்னேன். ஆனால் அய்யா அவர்கள், ''நீங்கள் டெல்லிக்குப் போவது தான் நல்லது. பரந்த அனுபவமும், உயர்ந்த தொடர்புகளும் கிடைப்பதற்கும், தேசிய நீரோட்டத்தில் அமர்வதற்கும், நாம் எதிர் காலத்தில் அமைக்க இருக்கும் மனையியல் கல்வி நிறுவனத்திற்கு வேண்டிய அடிப்படைகளைப் பெறுவதற்கும் வழி கிடைக்கும். மேலும் நானும் நாடாளுமன்றத்திற்குத்தான் (பார்லிமென்ட்) அடுத்து வரும் தேர்தலில் நிற்கப் போகிறேன். அதனால் அடிக்கடி டெல்லிக்கு வருவேன். போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட என் சிறிய தகப்பனார் உயர்திரு இராமலிங்கம் செட்டியார் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினராக டெல்லியில் இருப்பார்கள். உங்களுக்கு வேண்டிய சகல உதவிகளும் கிடைக்கும்'' என்று தைரியம் சொன்னார்கள்.

நான் வித்யாலயத்திலிருந்த மூன்று நாட்களும் பல பல புது அனுபவங்கள் எனக்குக் கிடைத்தன. புது இடங்களைப் பார்ப்பது, மாணவர்கள், ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசுவது, கோவில்களைத் தரிசிப்பது போன்று பல அர்த்தமுள்ள ஏற்பாடுகளை அய்யா அவர்

கள் செய்திருந்தார்கள். அவர்கள் எழுதியிருந்த திருக் கேதார யாத்திரை, குழந்தை வளர, நான் கண்ட மகாத்மா போன்ற புத்தகங்களையும் வழங்கினார்கள். தனது உற வினர்களை எல்லாம் நான் சந்தித்துப் பழகும் வாய்ப் பையும் அளித்தார்கள். பெரியய்யா திருஞான சம்பந்த செட்டியார், அவர் துணைவியார் இரத்தின ஜோதி அம்மாள், புதல்விகள் ஜனகம், தனலக்ஷிமி, ஜெயா, அவர் கள் கணவன்மார் திருவாளர் இராமசாமி, டி.எஸ். பால சுப்ரமணியம், முருகேசன் ஆகியோரும், திருப்பூரில் இருந்த பெரிய அண்ணன் திரு. கந்தசாமி செட்டியார், மனைவிமார் திருமதி மரகதம்பாள், திருமதி சுந்தராம் பாள், திருமதி சுந்தராம்பாளின் தங்கை இரஞ்சிதம்மாள் அவர்களையும், திரு ஷண்முக சுந்தரம் செட்டியார், அவர் கள் புதல்வர்கள் திரு சுவாமிநாதன், திரு மூர்த்தி ஆகியோரையும் கோவையில் அய்யா அவர்களுக்குப் பேருதவியாக இருந்த திரு. டி.எஸ். கல்யாணசுந்தரம் செட் டியார் அவர்களுடைய குடும்பம் முழுவதையும் சந்தித்து அன்புடன் பழக முடிந்தது. இந்த காலக் கட்டத்தில் தான் திருமதி ருக்மணி அம்மாள் கோவிந்தராஜுலு, திருமதி சாவித்திரி சண்முகம், திருமதி நீலவேனி இராமசாமி அவர்கள் நட்பும் கிடைக்க அய்யா அவர்கள் அறிமுகம் செய்து உதவினார்கள். இவர்களில் பெரியவர்கள் பலர் இறைவன் அடி சேர்ந்து விட்டார்கள். இவர்கள் அனை வருடைய அன்பு இன்றும் பேருதவியாக உள்ளது.

இங்ஙனம் கோவையில் நான் மேற்கொண்ட முதல் பயணம் மனநிறைவுடன் முடிந்தது. அதன் பின், நான் என் கணவர் இருந்த நாகை நகருக்குத் திரும்பினேன்.

அய்யா அவர்கள் என்னை மட்டுமின்றி என் உற வினர் அனைவரையுமே தன்னுடையவர்களாக்கிக்கொண்

ADU LIB

டார்கள். என் மகன் மோகனை நான் அமெரிக்கா சென்ற பொழுது அந்த மூன்று ஆண்டுகளிலும் என் தாயார் பார்த்துக் கொண்டார்கள். நான் தாய்நாடு திரும்பியதும் அவன் என்னுடனேயே இருக்க விரும்பினான். அது இயற்கை. ஆனால் எனக்கு வடக்கே வேலை கிடைக்கும் என்பதால் மோகனைச் சென்னையில் உள்ள ஒரு நல்ல பள்ளியில், விடுதியில் சேர்த்தேன். அவன் அங்கு இருக்க விரும்பாமல் என் தங்கை லீலா வீட்டிற்கு ஓடி வந்து விட்டான். பிறகு என்ன செய்வது என்றே தெரியவில்லை. சென்னையைத் தவிர வேறு எங்கிருந்தாலும் படிக்கிறேன் என்று சொன்னான். எனக்கு ராமகிருஷ்ண வித்யாலயம் தான் மனத்தில் தோன்றியது. அவனை அங்கு அழைத்துச் சென்று அய்யா அவர்களிடம் அவனைச் சேர்த்துக் கொள்ளும்படிக் கேட்டேன். அய்யா அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். மோகனும் வித்யாலயத்தை விரும்பினான். ஆறாவது வகுப்பில் சேர்ந்து 11—வது வரை அவன் அங்கு படித்தக் காலத்தில் அய்யா அவர்கள் அவனுக்குக் காட்டிய பரிவு மிகப் பெரிது. மோகன் வித்யாலயத்தில் தரித்திருந்து நன்றாகப் படிக்க அவர்கள் அன்பே உறுதுணையாக இருந்தது. அங்கு சேர்ந்த மோகன், படிப்பிலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கினான். பிறகு மோகன், சென்னையில் லயோலாக் கல்லூரியில் பியூசி படித்து முடித்ததும், சென்னை மருத்துவக் கல்லூரியில் சேரவும் அய்யா அவர்கள் பேருதவி செய்தார்கள். அவன் நல்லதொரு மருத்துவராவதற்கு அய்யா அவர்களின் மேற்பார்வையும், வித்யாலய வளர்ப்பும் வித்திட்டன.

அதுபோலவே என் கணவர், தாயாரிடத்திலும் சகோதரச் சகோதரிகளிடமும், அய்யா அவர்கள் அளவற்ற அன்பு செலுத்தினார்கள், கவனிப்பும் காட்டினார்கள். இளமையிலேயே சுதந்திரப் போராட்டத்தில் குதித்து



டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ் அவர்களின் 100 வயது தாயார்
திருமதி சொர்ணம்மாள் பாக்கியநாதன் அவர்களுடன் அய்யா அவர்கள் உரையாடும்போது

இடர்கள் பல அனுபவித்துச் சுதந்திரத்திற்குப் பிறகு தமிழக அரசில் சேர்ந்து, படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, தலைமைச் செயலராகிக் காலமான என் மைத்துனர் திரு. திரவியத்தின் பேரில் அதிக அன்பு வைத்திருந்தார்கள். அவருடைய மறைவுக்குப் பின் என் தங்கை லீலாவுக்கு அய்யா அவர்கள் காட்டிய அனுதாபம் பெரிது. அதுபோலவே சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு எடுத்த என் தம்பி இராஜதுரையின் பேரிலும் நிறைந்த அன்பு கொண்டிருந்தார்கள்.

தாயகம் திரும்பிச் சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு, என்னைப் புதுடெல்லியிலுள்ள மத்திய அரசின் செவிலியர் கல்லூரிக்கு பிரதம உணவியல் அலுவலர், மேலும் விரிவுரையாளர், ஆக நியமனம் செய்ய, மத்திய பொது தேர்வுக் குழுவிடம் இருந்து நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்தது. அதற்காக டெல்லி சென்று அந்த நியதியையும் முடித்துத் திரும்பினேன். இரண்டு மாதங்களுக்குள் நியமன உத்தரவும் வந்தது. 1951—ம் ஆண்டு ஜனவரி மாதம் 7—ம் தேதிக்குள் பணியில் சேர்வதற்காகக் கடுங்குளிரில், ரயிலில் புறப்பட அவசியமாயிற்று.

*அன்பு வடிவமான எந்த வேலையும் இன்பத்தைத் தரவல்லது. அமைதியையும், மகிழ்ச்சியையும் தராத அன்புச் செயலே இல்லை.*

*— தி.சு. அவினாசிலிங்கம்*

# 5. புது டெல்லியில்
## (1951–1952)

1951–ம் ஆண்டு ஜனவரி 2–ம் தேதி காலையில் 8 மணியளவில் சென்னை சென்ரல் சந்திப்பில் இருந்து புதுடெல்லிக்குக் கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ் (Grand Trunk Express) என்ற ரயிலில் புறப்படப் பயணச் சீட்டு வாங்கிப் பயணமும் உறுதிசெய்யப்பட்டிருந்தது. அன்று என்னை வழியனுப்புவதற்காகவே அய்யா அவர்கள் சென்னைக்கு வந்து மைலாப்பூரில் உள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் தங்கியிருந்தார்கள். நான் நாகப்பட்டினத்திலிருந்து சென்னைக்குப் புறப்பட்டு வந்த ரயில் அதிகாலையில் 5 மணிக்கு எழும்பூரைச் சேர்ந்திருக்க வேண்டும். அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, இராம கிருஷ்ண மடத்திற்குச் சென்று அய்யா அவர்களிடம் ஆசி பெற்றுச் சென்னை மத்திய ரயில் சந்திப்பிலிருந்து 8 மணிக்கு டெல்லிக்குப் புறப்படலாம் என்று திட்டம் போட்டு வந்தேன். ஏனோ, அன்று, ரயில் 1½ மணித் தாமதமாக வந்தது. ஆகவே, ராமகிருஷ்ண மடத்திற்கும் போக முடியாதே என்று பெரும் ஏமாற்றத்துடன் மத்திய ரயில் நிலையத்திற்குச் சென்றேன். ஆனால் அய்யா அவர்களின் அன்பும், தூரப்பார்வையும் எவ்வளவு பெரியன என்று விளங்கும் வகையில், தொலைபேசி மூலம், ரயிலின் தாமதத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட அவர்கள், உடனே கார் டிரைவரிடம் எனக்கு வாழ்த்துக் கடிதங்களையும், இனிப்பையும் ரயிலுக்கு அனுப்பியிருந்தார்கள். அந்த அன்புச் செயல், நான் தயக்கத்துடன் மேற்கொண்டிருந்த நீண்ட நெடும் பயணத்தை ஒரு வகையில் இலகுவாக்கியது.

முன்பின் தெரியாத தலைநகராம் டெல்லியைத் தன்னந்தனியாகக் கடும் குளிரில் ஜனவரி 4—ம் தேதிக் காலையில் அடைந்தேன். செவிலியர் கல்லூரி புது டெல்லியில், 1946—ம் ஆண்டு முடிந்த இரண்டாவது உலக யுத்த காலத்தில் 5, ஜஸ்வந்து சிங் சாலையில் இராணுவ வீரர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த தற்காலிக அறைகளில் (hutments) செயல்பட்டு வந்தது. செல்வி மார்கிரேட்டா கிரேக் (Margaretta Craig) என்ற அமெரிக்க மாது, முதல்வராக இருந்தார்கள். எனக்காக ஒதுக்கப் பட்டிருந்த வீட்டைக் காட்டி, என் கடமைகளையெல்லாம் சொன்னார்கள். முதலாம் ஆண்டிலும், இரண்டாம் ஆண் டிலும் செவிலியர் பட்டபடிப்பு படிக்கும் மாணவியருக்கு நான் வாரம் இரண்டு மணி நேரம் உணவியல் சொல்லித் தருவதும், டெல்லியிலிருந்த பெரிய அரசு மருத்துவ மனைகளிலிருந்த உணவுத் தயாரிக்கும் இடங்களைப் பார்வையிடுவதும் தான் என் கடமைகள் என்று உணர்ந் தேன். மாபெரும் முயற்சிகளுடன் ஆராய்ச்சியின் அடிப் படையில் உணவியல் முனைவர் பட்டத்துடன் ஆர்வ முடன் தாயகம் திரும்பிய எனக்கு, இந்தப்பணி மிகச் சிறியதாகவும் ஏமாற்றம் தருவதாகவும் இருந்தது.

தங்குவதற்குப் போதுமான இடமிருந்தது. ஆனால் கற்றுத் தருவதற்குச் சாதனங்கள், புத்தகங்கள் எதுவுமில் லாமல், ஒரு சிறு அறை மாத்திரம் இருந்தது. அதில் அடுப்புக்கரி போட்டு வைக்கப்பட்டிருந்தபடியால் ஒரேகறுப் பாக இருந்தது. துறைத் தலைவி என்ற வகையில், முன்பு நிலக்கரி போட்டுக் கறுப்பாக இருந்த அந்த இடத்தில், 4' x 8' அடி பரப்புள்ள மற்றொரு சிறு அறை கொடுக்கப் பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் கண்ணீர் பெருக்குடன், ‘ஆண்டவனே இந்த இடத்துக்கா என்னை அழைத்து வந் தாய்?’ என்று சிறிது நேரம் புலம்பினேன். அங்குள்ள எல் லோரும் ஹிந்தி மொழியில்தான் பேசினார்கள். குளிரோ அதிகம். உடல் நடுங்கியது. நான் விடுதியிலிருந்த உண

வைத்தான் அருந்த வேண்டியிருந்தது. அது தமிழருக்குப் பரிச்சயமானதல்ல. இவையனைத்தும் என்னைத் தமிழ கத்திற்கே திரும்பிவிட வேண்டும் என்று ஏங்க வைத்தன.

என் வேலை நிலைமையைப் பற்றி அமெரிக்காவில் இருந்த என் அன்பு ஆசிரியர் (Dean) டாக்டர் பிரேனகனுக் கும் அய்யா அவர்களுக்கும் துயரமாகக் கடிதங்கள் எழுதி னேன். உடனே இருவரும் பதில் அனுப்பினார்கள். டாக்டர் பிரேனகன், ஒரே வாக்கியத்தில், "Make yourself indispensable where you are" ''நீ எங்கு இருக்கிறாயோ, அங்கு நீ இல்லாமல் காரியம் நடக்காது என்ற நிலையில், உன்னை ஆக்கிக் கொள்'' என்று எழுதி விட்டார்கள். அந்த அழுத்தமான யோசனை என்னைத் திறம்படச் செயல்பட வைத்ததுடன் சுய பரிதாபம் — அதாவது தன் னைத் தானே பரிதவித்துக் கொள்ளுதல் (self pity) என்ற கொடிய நோயினின்றும் விடுவித்தது. அய்யா அவர்கள், ''முதலில் இப்படித்தான் இருக்கும். போகப் போகப் பழகி விடுவீர்கள். உங்கள் மாணவியரின் அன்பைப் பெறு வதில் கவர்ச்சியாக உணவியலைச் சொல்லித் தாருங்கள். நான் இரு வாரங்களில் வருகிறேன்'' என்று எழுதியிருந் தார்கள். என் கணவருக்கோ, தாயாருக்கோ இதைப் பற்றி நான் எழுதவில்லை. எழுதியிருந்தால் மிகவும் கவலைப் பட்டிருப்பார்கள்.

எனக்குக் கிடைத்த யோசனைகளுக்குப் பிறகு மும் முரமாக உணவியல் ஆய்வுக் கூடத்தை (laboratory) ஒன்று மில்லாத நிலைமையை மாற்றி 24 மாணவியர் செய் முறைப் பயிற்சி (practical) பெறும் அளவுக்கு நன்றாக அமைப்பதிலும், புத்தகமாகக் குறிப்புகள் எழுதுவதிலும் மும்முரமாக முனைந்தேன்.

ஜனவரி மாதக் கடைசியில் அய்யா அவர்களும் டெல் லிக்கு வந்தார்கள். அவர்களிடம் ''மீண்டும் நான் சென்

னைக்கு வர வேண்டும். நீங்கள் உதவி செய்ய வேண்டும்'' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். தமிழக அரசுக்கு விண்ணப்பித்து அன்று கல்வி அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் அவர்களுக்கும், விண்ணப்பப் பிரதியையும் அனுப்பினேன்.இந்தியக் குடியரசின் முதல் தேர்தலும் (election) வந்தது.

அப்பொழுது, எங்கள் இனத் தலைவர்களில் ஒருவரான காலம் சென்ற எல்.எஸ். கரையாளர் என்பவர், என்னைப் பாராளுமன்றத்திற்கு நிற்க வைக்க வேண்டும் என்ற ஆவலுடன் தொடர்பு கொண்டார். நான், ''அரசியலில் நுழைய நான் விரும்பவில்லை, அறிவியல் பணியைத்தான் செய்யப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு அய்யா அவர்களிடம் இந்த விஷயத்தைச் சொன்னேன். அவர்களும் என்னைப் பாராட்டி, ''அரசியல் ஒரு சாக்கடை, உங்களைப் போன்ற அறிவியல் நிபுணர்கள் அதற்கருகில் வரக்கூடாது'' என்று சொன்னார்கள். பல ஆண்டுகள் கழித்துப் பெருந்தலைவர் மாண்புமிகு காமராசர் அவர்கள் எங்கள் கல்லூரிக்கு வந்தபோது, என்னுடைய இந்த நிராகரிப்பைப் பெரிதும் பாராட்டிக் கல்விப் பணி எவ்வளவு பெரிய பணி என்று எடுத்துரைத்தார்கள்.

கோவையிலிருந்து பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக அய்யா அவர்கள் நின்று அமோக வெற்றி பெற்றார்கள். டெல்லியில் அவர்களுக்கு வெஸ்டர்ன் கோர்ட் (Western Court) என்ற அரசினர் விடுதியில் தங்கும் இடமும் ஒதுக்கப்பட்டது. அய்யா அவர்கள் முனைவர் கே. எஸ். கிருஷ்ணன் போன்ற பலப் பெரிய நிபுணர்களுக்கும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

திருவனந்தபுரத்திலிருந்து மேலவை உறுப்பினராக இருந்த தலைவர் திரு. சட்டநாதக் கரையாளர் அவர்கள்

நான் டெல்லியிலிருந்த நாட்களில் பெரும் ஆதரவாக இருந்தார்கள். அவர்கள் பேத்தி திருமதி ராஜலக்ஷிமியின் கணவர்தான் இந்தியன் வங்கியின் மேலாண்மை இயக்குனரும், தலைவருமாக இருந்த திரு. எம். கோபாலக்கிருஷ்ணன். அய்யா அவர்கள் அன்பை வர மாகப் பெற்ற திரு. கோபால கிருஷ்ணன் எங்கள் வளா கத்திலேயே இந்தியன் வங்கி இருப்பதற்குப் பெரிதும் உதவி செய்தார்கள். பெரியவர் திரு. கரையாளர் அவர் களும், அய்யா அவர்களும் காட்டிய பரிவினால் டெல்லி யிலிருந்த நாட்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கழிந்தன.

அய்யா அவர்கள், முதன் முதலாக செவிலியர் கல் லூரியிலுள்ள என்னுடைய இருப்பிடத்திற்கு வந்த பொழுது, ''உங்களுக்கு நல்ல காப்பி போடத் தெரியுமா?'' என்று கேட்டார்கள். ''தெரியும்'' என்று பதிலுரைத்தேன். ''போட்டுக் கொடுங்கள்'' என்று சொன்னார்கள். நல்ல மணமாக வறுக்கப்பட்டிருந்த காப்பிக் கொட்டையை அரைத்து பில்டரில் காப்பி போட்டுக் கொதிக்கக் கொதிக் கப் பாலில் சர்க்கரையுடன் கலந்து கொடுத்தேன். அன் புடன் ருசித்துக் குடித்து ''மிகவும் நன்றாக இருக்கிறது'' என்று பாராட்டினார்கள். அதுவே அய்யா அவர்களுக்கு என்னுடைய உணவியலறிவில் நம்பிக்கையைத் தந்தது போலும்! அய்யா அவர்களுக்குப் பருகக் காப்பியோ, பாலோ கொடுப்பது என்றால் அவை கொதிக்கக் கொதிக்க இருக்க வேண்டும், கொஞ்சம் கூடக் குறைந்த சூடாய் இருக்கலாகாது.

பல மாதங்களுக்குப் பிறகு எனக்கும் வெஸ்டர்ன் கோர்ட்டில் தங்க அறை கிடைத்த போது, எங்களுக்குப் பொதுவாக இருந்த உணவுச் சாலைக்கு போகும்போது நல்ல பில்டர் காப்பி டிக்காக்ஷன் எடுத்துச் செல்வேன். ஒரே மேசையில் அப்பொழுது வெளியுறவு அமைச்சராக இருந்த திருமதி லக்ஷ்மி மேனன் அவர்களும், அவர்கள்

கணவர் பேராசிரியர் நந்தன் மேனன் அவர்களும், அய்யா அவர்களும் ஒன்றாகக் காலை உணவு அருந்துவோம். நான் போட்டுக் கொடுக்கும் காப்பியை அவர்கள் மூவரும் மிகவும் விரும்பிப் பருகுவார்கள்.

1951ல் மே மாதத்தில் கொளுத்தும் வெயிலில் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அதன் தலைவராக அய்யா அவர்கள் சென்றபோது என்னையும் அழைத்துச் சென்றதுடன், நிகழ்ச்சி நிரலிலும் எனக்கு முக்கிய இடம் அளித்தார்கள். அந்த மாநாட்டிற்கு அய்யா அவர்களின் நெருங்கிய நண்பர்களான மதுரை அய்யா திரு. என். எம். ஆர். சுப்பராமன், சர்தார் வேதரத்தினம்பிள்ளை, டாக்டர் டி.பி. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் மு. வரதராஜனார், திரு பெரியசாமித் தூரன் இன்னும் பலர் வந்திருந்தார்கள். மாநாடும், இலங்கைக் காட்சிகளும், விருந்தோம்பலும், மனத்தில் நீங்கா இடம் பெற்றன.

அண்ணாச்சி சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களை முதன் முதலாக நான் சந்தித்தபோது, அவர்கள் சென்னை சட்டசபை உறுப்பினராக இருந்தார்கள். நிறைந்த அன்புள்ளம் கொண்டவர்கள். வேதாரணியத்தில் கஸ்தூரிபா கன்னியா குருகுலத்தை, அனாதை அரிஜன மாணவியருக்காக நிறுவிப், பல இடைஞ்சல்கள், இன்னல்கள் மத்தியில் நடத்தி வந்தார்கள். வேதாரணிய குருகுல அறக்கட்டளையிலும் அய்யா அவர்கள் என்னையும் உறுப்பினராகச் சேர்க்கச் சொன்னப் பரிந்துரையை ஏற்று, இந்நாள் வரையிலும் அந்த அறங்காவலர் குழுவில் உறுப்பினராக இருக்கிறேன். அண்ணாச்சியவர்கள் துணைவியார் திருமதி கமலம்மாளும், புதல்வர் தம்பி அமரர் திரு அப்பாக்குட்டி அவர்களும், அவர்கள் மனைவி திருமதி புஷ்பவல்லியும், புதல்வி கமலாவும் அவள் கணவரும், புதல்வர்கள் திரு வேதரத்தினமும்,

திரு கேடிலியப்பனும் அவர்கள் துணைவியார், அனைவ ரும் காட்டிய, காட்டிவரும் உறவும் அன்பும் மகத்தானவை.

டெல்லிக்குப் போவதற்கு முன்பு அண்ணாச்சி அவர் கள் சென்னையில், நான் வேலை தேடி உதவி கேட்ட சமயத்தில், தனது செலவிலேயே வாடகைக் கார் வைத்து முதலமைச்சர் திரு குமாரசாமி இராஜாவிடமும், மற்ற வர்களிடமும் அழைத்துச் சென்று, அறிமுகம் செய்து, வலுவாகப் பரிந்துரைத்ததை நான் மறக்கவே முடியாது. இந்த முயற்சியின் பயனாக, 1951—ம் ஆண்டு இறுதி யில் எனக்கு ராணி மேரிக் கல்லூரியில் விரிவுரையாள ராக உத்தரவும் வந்தது. அதற்குள் டெல்லி வாழ்க்கை பிடித்துப் போனதாலும், மத்திய அரசின் பதவி எல்லாக் கோணங்களிலும் மாநிலப் பணியை விடச் சிறந்தது என்பதாலும், அந்த உத்தரவை நான் ஏற்றுக் கொள்ள வில்லை. அய்யா அவர்கள் தீர்க்கத்தரிசனமாக என்னை டெல்லியிலேயே இருக்கும்படிச் சொன்னதன் விவேகத்தை நன்றியுடன் உணர்ந்து கொண்டேன்.

டெல்லியில் செவிலியர் கல்லூரியில் பதவியும், வேலைப் பளுவும் மிகக் குறைவாக இருந்தன. எனினும், பல நல்ல தொடர்புகளைத் தேடித் தந்தன. அப்போது தான் உருவாக்கிக் கொண்டிருந்த இந்திய மனையியல் சங்கத்தின் பூர்வாங்கக் கூட்டங்களில் ஆயுள் உறுப்பினர் களில் ஒருத்தியாகக் கலந்து கொண்டது; டெல்லி பல் கலைக்கழக மகளிர் சங்கத்தின் செயலராகத் தேர்ந்தெ டுக்கப்பட்டது, YWCA-வில் சேர்ந்தது, உலக செவிலியர் சங்கத்திற்கு B.Sc. Nursing பயிற்சிக்காக உணவியற் பகுதி களைப் பாடத்திட்டத்தில் சேர்த்தது, அதற்குப் பாடங்களை எழுதி அவர்கள் பிரசுரித்தது, ஆகிய அனுபவங்கள் அரிய வாய்ப்புகளாக வந்தன.

# 6. பரோடாவில் மகாராஜா சயாஜிராவ் பல்கலைக் கழகத்தில்

அப்பொழுது மத்திய அரசின் நல்வாழ்வுத் துறையின் அமைச்சராக இருந்தவர்கள், மகாத்மா காந்தியடிகளுக்குத் தொண்டு செய்த ராணி ராஜகுமாரி அமிர்த கௌரி அவர்களின் நண்பர் திருமதி ஹன்சா மேத்தா அவர்கள் பரோடாவில் மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக இருந்தார்கள். முதன் முதலாகப் பரோடா பல்கலைக்கழகத்தில் நிறுவியிருந்த மனையியற் புலனுக்கு, ஒரு நல்ல தலைவி (Dean for the Faculty of Home Science) வேண்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்னைப் பற்றி எப்படியோ தெரிந்து கொண்டு, என்னுடைய சேவையை இரண்டு ஆண்டுகளுக்கு இரவலாக மத்திய அரசிடம் கேட்டிருந்தார்கள். அதைப்பற்றி நான் அய்யா அவர்களிடம் கலந்து கொண்ட போது, ''நீங்கள் பரோடா போய் வருவது நல்லது. அங்குப் போய் அக் கல்லூரி அமைப்பைப் பார்த்து, அனுபவமும் பெற்று வந்தால், பிற்காலத்தில் நாம் ஆரம்பிக்க இருக்கும் மனையியல் கல்லூரிக்கு உதவியாக இருக்கும்'' என்று தெளிவாகத், தீர்மானமாக யோசனை சொன்னார்கள். அய்யா அவர்களிடம், எந்த ஐயப்பாட்டுக்கு யோசனை கேட்டுச் சென்றாலும், திட்டவட்டமாகச் சுருக்கமாக நறுக்கென்று ஆனால், பளிச்சென்று யோசனை சொல்லுவார்கள். அவர்கள் தரும் அறிவுரையில் சந்தேகத்திற்கே இடம் இருக்காது. உடனே செயலிலிறங்க வழி தோன்றும்.

ஆகவே, பரோடா செல்வதற்குத் தீர்மானமாயிற்று, டிசம்பர் மாதம் 1952—ம் ஆண்டு 8—ம் தேதி செவிலியர் கல்லூரியிலிருந்து அறையைக் காலி செய்து, மூட்டை

முடிச்சுகளுடன் முதல்வர் மார்கிரேடா கிரேக் மற்றும் நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, பரோடா வுக்குப் புதுடெல்லியிலிருந்து செல்லும் பிராண்டியர் மெயில் என்ற துரித ரயில் வண்டியில் புறப்பட்டேன். போகும் பொழுது மீண்டும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு செவிலியர் கல்லூரிக்குத் திரும்பும் எண்ணத் தோடு தான் சென்றேன். ஆனால் விதியின் கட்டாயத் தினால் நான் அங்குத் திரும்பச் செல்லவில்லை. டெல்லி செவிலியர் கல்லூரியில் நான் பயிற்றுவித்த பல மாண வியர், பின்னர் பல மாநிலங்களில் செவிலியர் கல்லூரி களுக்கும், அரசு துறைகளிலும் தலைவியராகச் சிறப் பாகப் பணி செய்தார்கள் என்ற பெருமை எனக்குண்டு.

ரயில் பரோடாவுக்கு நள்ளிரவு வந்தது. பல்கலைக் கழகச் சிப்பந்தி ஒருவர் என்னைச் சந்தித்து, எனக்காக ஒதுக்கப்பட்டிருந்த 'நிம்ப்நிவாஸ்' என்ற பங்களாவுக்கு அழைத்துச் சென்றார். எங்கும் நிசப்தம். ஆட்கள் ஒருவரும் அருகில் இல்லை. மிகவும் அச்சமாக, ஏக்கம் நிறைந்த உள்ளத்துடன், இதுவும் இறைவன் செயல்தான் என்று என்னைத் தேற்றிக் கொண்டு கண் அயர்ந்தேன்.

காலையில், மிக அருகிலுள்ள மனையியற் கல்லூ ரிக்குச் சென்று, பொறுப்புகளை ஏற்றுக் கொண்டேன். முன்பு, ஒஹையோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் என் னுடன் படித்த திருமதி சுர்ஜீத் சோப்ரா அங்குப் பணியில் அமர்ந்திருந்தார்கள். மற்றவர்கள் அனைவரும் தெரியாத வர்கள். பேசும் மொழியோ குஜராத்தி. ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்கள் சிலர் தான். கண்ணியம் நிறைந்த துணைவேந்தர் திருமதி ஹன்சா மேத்தா ஆங்கிலத்தில் பேசியதுடன், ஆதரவும், தைரியமும் தந்தார்கள். அவர் களுடைய ஒரே புதல்வியான அஞ்சலி மேத்தாவும் மிகுந்த உதவியாக இருந்தார்கள். காந்தியடிகளின் மருத்துவர்களில்

ஒருவரும், பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சராகவும் இருந்த டாக்டர் ஜீவராஜ் மேத்தாவின் துணைவியார் தான் திருமதி ஹன்சா மேத்தா அவர்கள்.

ஆரம்பத்திலிருந்தே முறைப்படி அமுலாக்கப்படாத பாடத்திட்டம், தேர்வுத் திட்டம் ஆகியவற்றைச் சீர்படுத்திச் செயலாக்குவதில் முதல் மூன்று மாதங்கள் கழிந்தன. அடுத்தக் கட்டத்தில் முதுகலைப்பட்டப் படிப்புத் திட்டங்கள், ஆராய்ச்சி, என்று ஆரம்பிக்க அரும்பாடு பட வேண்டிய தாயிற்று.

நான் மனையியலுக்கு நல்ல விளக்கம் தந்து, நன்கு செயல்படுவதைக் கண்டு பலர் பெருமைப்பட்டனர். அவர் களில் முக்கியமானவர், அமரர் பேராசிரியர் டி.கே.என். மேனன் அவர்கள், என் செயலாக்கத்தைக் கண்டு வியந்து, என்னிடம் தொடர்பு கொண்டு, பெரும் நட்புக்கு வழி செய்து, என் பரோடா வாசத்தை மகிழ்ச்சிகரமாக்கி னார்கள். அவருடைய துணைவியார் டாக்டர் கமலா மேனன், புதல்வி அநில்லா, புதல்வர்கள் கோபி, தத்தன் ஆகியோர் அளித்த பாசமும், பரிவும் மகத்தானவை. மேனன் வீடு எனது இல்லம் போலும், என் வீடு அவர்கள் குடும்பம் போலும் ஆயிற்று. கல்வியியல் துறையில் எனக்குப் பல வாய்ப்புகளை அளித்ததுடன், என் ஆய்வுக் கட்டுரைகளைத் தனது 'கல்வியியல்' இதழில் பேரா சிரியர் மேனன் பிரசுரித்தார்கள். பிரசித்திப் பெற்ற ஜெ.பி. நாய்க் போன்ற பல கல்வி நிபுணர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தினார்கள். இந்தக் கட்டத்தில் காலம் சென்ற பேராசிரியர் முனைவர் பிலம்மி பி கிட்ரல் அமெரிக்காவிலுள்ள ஹோவார்டு பல்கலைக்கழகத்தி லிருந்து பரோடா பல்கலைக்கழகத்திற்கு சிறப்பு பேரா சிரியராக மனையியல் புலனுக்கு வந்திருந்தார்கள். கறுப்பு நீக்ரோ இனத்தைச் சார்ந்த அவர்கள் அன்பிலும்,

பண்பிலும், நிபுணத்துவத்திலும், இந்தியா பேரிலுள்ள
மதிப்பிலும் நிகரற்று விளங்கினார்கள். அய்யா அவர்
களுடன் மிகுந்த மரியாதையுடன் பழகி அவர்களுடைய
பாராட்டுதல்களையும் பெற்றார்கள். அவர்கள் கொடுத்த
ஆதரவையும், வாழ்நாள் முழுவதும் காட்டிய அன்பையும்
நான் மறக்க முடியாது.

97908

டிசம்பர் 1952—ல் நான் பரோடாவுக்குச் சென்றேன்.
அய்யா அவர்கள் பரோடா மனையியல் கல்லூரியைப்
பார்வையிடுவதற்காக ஜனவரி மாதம் 1953—ல் பரோ
டாவுக்கு வருகை தந்தார்கள். அப்போது அவர்கள்
நாடாளுமன்றத்தில் கல்விக் குழுவுக்குத் தலைவராக
இருந்தபடியால் பல்கலைக்கழகத்திலுள்ள முக்கிய
விருந்தினர் விடுதியில் அவர்கள் தங்க ஏற்பாடு செய்
திருந்தோம். அய்யா அவர்கள் பரோடாவில் தங்கிய
மூன்று நாட்களில், என் அச்சங்கள் நீங்கின. அவர்கள்
துணை வேந்தர் திருமதி ஹன்சா மேத்தா, உதவி துணை
வேந்தர் டாக்டர் சி. எஸ். பட்டேல், பேராசிரியர் டி.கே.
என். மேனன் ஆகியோரையும், மற்ற அதிகாரிகளையும்
சந்தித்தார்கள். பல்கலைக்கழகத்தின் பல துறைகளைப்
பற்றித் தெரிந்து கொண்டார்கள். மனையியல் கல்
லூரியை நன்கு பார்வையிட்டுக் குறிப்புகள் எடுத்துக்
கொண்டார்கள். நிறைந்த தூரப் பார்வையுடன், பல
கேள்விகளைக் கேட்டு விளக்கமும் பெற்றார்கள்.
இரண்டு ஆண்டுகள் முடிந்ததும் டெல்லிக்கே நான்
திரும்ப வந்து விடலாம் என்ற உறுதியும் கூறி ஊர் திரும்
பினார்கள்.

இரண்டு ஆண்டுகள் முடியும் தறுவாயில் திருமதி
ஹன்சா மேத்தா அவர்களுக்கு என்னை அங்கேயே நிரந்
தரமாக வைத்துக் கொள்ள ஆர்வம் உண்டாயிற்று. அதற்
காகப் பதவி உயர்வு கொடுத்து, மறுபடியும் அரசு
வேலையில் சேரும் வாய்ப்பை (lien) ரத்து செய்யும்படி,

அரசு வேலையை ராஜினாமா பண்ணச் சொன்னார்கள். நானும் அய்யா அவர்களைக் கேட்காமலேயே, மனையியலுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தினால் மத்திய அரசின் வேலையை ராஜினாமா செய்து, பரோடாவில் தங்க முடிவு செய்தேன். இது ஒரு பெரிய தவறாகி விட்டது என்பதை விரைவில் உணர்ந்தேன்.

அந்தக் கட்டத்தில், அய்யா அவர்கள் பரோடாவுக்கு வந்தார்கள். என் முடிவை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், அவர்களுக்கு இயல்பாக இருந்த பெருந்தன்மையின் பயனாக என்னை அதைரியப் படுத்தவே இல்லை. ''விரைவில் நம் கல்லூரியை அமைப்போம்'' என்று மாத்திரம் சொன்னார்கள். பரோடாவில் Faculty of Home Science அமைப்பின் வசதிகளை ஆழமாகக் கவனித்துப் பல புள்ளி விபரங்களை எடுத்துக் கொண்டார்கள். எனக்குப் பல அறிவுரைகளைத் தந்து எப்படிப் பக்குவமாக மறுவாய்ப்பு கிடைக்கும் போது, பரோடாவிலிருந்து கிளம்பி விடலாம் என்று தைரியப் படுத்தித் திரும்பினார்கள்.

பரோடாவில் எனக்கு வீட்டில் தொலைபேசி கிடையாது. அலுவலகத்தில் தான் இருந்தது. அய்யா அவர்கள் அடிக்கடி தொலைபேசியில் பேசுவார்கள். அதற்காக வீட்டுக்கு மிக அருகிலுள்ள அலுவலகத்தில் இரவு 10 மணி வரையிலும் வேலை செய்து கொண்டு காத்திருப்பேன். அந்த நேரங்களில், அய்யா அவர்களின் அன்புக் குரலையும், அதில் தொனித்த செயல் திறனையும், கேட்கும் போது, என் உள்ளம் மகிழ்ச்சியினால் நிரம்பித் தைரியம் அடையும்.

பரோடாவில் மே, ஜூன் மழைக்காலம். கடுமையாக மழை பெய்யும். அப்பொழுதெல்லாம் என் அலுவலகத்திற்கும், வீட்டிற்கும் இடையிலுள்ள வெற்றிடம் மழை

நீரால் குளம் போல் நிரம்பி விடும். ஒரு நாள் அத்தகைய மழை நீர் இடுப்பளவில் இருந்ததையும் தாண்டி, அலுவலகம் அடைந்து, தொலைப்பேசியில் பேச்சைக் கேட்டு விட்டு அதே நீரில் கஷ்டத்துடன் கடந்து வீட்டை அடைந்தேன். அதிகாலையில், அந்த நீரில் ஒரு பெரிய மலைப் பாம்பு படுத்திருந்தது. இதை ஒரு நாள் அய்யா அவர்களிடம் கூறிய பொழுது மிகவும் வேதனைப்பட்டு இனி மேல் இரவில் அப்படியெல்லாம் போகக் கூடாது என்று அழுத்தமாகக் கூறியதை இன்னும் கடைப்பிடிக்கிறேன்.

நான் மத்திய அரசின் வேலையை விட்டதும், குஜராத்தில் என் மேலுள்ள பரிவும், மதிப்பும் குறைய ஆரம்பித்தன. பல சில்லரைத் தொந்தரவுகளுக்கு ஆளானேன். திருமதி ஹன்சா மேத்தாவின் ஆதரவும் அதிகமாகக் கிடைக்கவில்லை. எனக்கு அதிக காலம் பரோடாவில் தாக்கு பிடிக்க முடியாது என்று பட்டது. துணை வேந்தராக இருந்த முனைவர் சி.எஸ். பட்டேல் அவர்கள் மாத்திரம் எப்பொழுதும் ஒரே சீராக அன்பும், மரியாதையும் காட்டி வந்தார்கள்.

ஆண்டவர் திருவருளால், மத்திய பொதுத் தேர்வுக் குழு, ‘பிரதம மனையியல் நிபுணர்’ என்ற பதவியை விளம்பரப் படுத்தினார்கள். பிரதமர் மாண்புமிகு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் புதிதாக ஆரம்பித்த தேசிய விரிவாக்க, சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காகப் பெண் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான திட்டத்தில் உயர் பதவி அது. எனக்கு, அதற்கு வேண்டிய எல்லா தகுதிகளும் இருந்தபடியால் என் மனுவை அனுப்பினேன். நல்ல வேளையாக திருமதி ஹன்சா மேத்தா அவர்கள் ஊரில் இல்லை. முனைவர் சி.எஸ். பட்டேல் அவர்கள் என் மனுவை அன்புடன் வழி மொழிந்து அனுப்பி விட்டார்கள். டெல்லியில் நேர்முகத் தேர்வும் நடந்து, நானும் தேர்வு செய்யப்பட்டேன்.

# 7. மீண்டும் டெல்லியில் வெஸ்டர்ன் கோர்ட்டில் (1955-1961)

ஏப்ரல் 1955—ல் 17ம் தேதி பணியில் சேர்ந்தேன். அப்போது காலம் சென்ற திருமதி தாராபாய் அவர்கள் டெல்லியிலிருந்த புகழ் பெற்ற இர்வின் சீமாட்டிக் கல்லூரியின் (Lady Irwin College) இயக்குநராக இருந்தார்கள். எனக்கு டெல்லியில் தங்க இடம் கிடைக்கும் வரையிலும் தனது இல்லத்தில் விருந்தினராக இருக்க அழைத்தார்கள். அவர்கள் வீட்டிலேயே தங்கியிருந்தேன். அவர்கள் அன்பை என்றும் மறவேன்.

பிறகு அரசு ஊழியருக்கான வெஸ்டர்ன் கோர்ட்டில் இடம் கிடைத்தது. அதே விடுதியில் தான் அய்யா அவர்களும், திருமதி லக்ஷ்மி மேனனும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தங்கியிருந்தனர். வெஸ்டர்ன் கோர்ட்டு என்பது சரித்திரப் புகழ் பெற்ற இடம். அங்கு தான் பண்டித ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு தங்கியிருந்தார்கள். நாங்கள் இருந்த காலத்தில் கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் மகள், பத்மஜா நாயுடுவும், பிரபல கவிஞர் சட்டோபாத்யாயாவும் அங்கு இருந்தனர். இன்று பெருந்தலைவர் மாண்புமிகு உயர் திரு ஜி.கே. மூப்பனார் அவர்கள் டெல்லியில் தங்கியிருப்பதும் வெஸ்டர்ன் கோர்ட்டில் தான்.

மத்திய அரசின் அலுவலராக வெஸ்டர்ன் கோர்ட்டில் 1955—1961 வரையிலும் மேல் மாடியில் அறை 42—ல் தங்கி இருந்தேன். அய்யா அவர்கள் எண் 1 மற்றும் 2

என்ற அறைகளில் கீழ் மட்டத்தில் இருந்தார்கள். திருமதி மேனன் தம்பதியாரின் அறை எண் 30.

தினமும் உணவு அருந்தும் இடத்தில் அய்யா அவர் களைச் சந்திப்பேன். பில்டர் காப்பியும், அவர்களுக்குப் பிரியமான லஸி என்ற மோரும் அவர்களுக்குக் கொடுப் பேன். திருமதி மேனன் அவர்களும், நந்தன் மேனன் அவர்களும் எங்களுடன் காலை உணவு அருந்துவார்கள். அந்த நாட்களில் என்னை மிகுந்த அன்புடன் கவனித்துக் கொண்டார்கள். அய்யா அவர்கள் மூலமாகப் பல அமைச் சர்கள், அரசு செயலர்களைப் பார்த்துப் பழக முடிந்தது. பல அரிய விருந்துகளுக்கும் அழைப்பார்கள். அழைத்தும் செல்வார்கள். ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷனில் சுவாமி இரங்கநாதானந்தஜிக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். அது வாழ்நாள் முழுவதும் ஆசீர்வாதமாக அமைந்து விட்டது.

என்னுடைய அலுவலகம், ராஜேந்திர பிரசாத் சாலை யில் 'கிரிஷி பவனில்' இருந்தது. அய்யா அவர்கள் பாரா ளுமன்றத்திலிருந்து தினமும் மதிய உணவுக்கு அந்த வழியாகப் போகும் போது, கிரிஷி பவனிலிருந்து என் னையும் அழைத்துச் செல்வார்கள். அதற்காகப் புறப் படுவதற்கு முன்பு தொலைபேசி மூலம் தான் வரும் நேரத்தை அறிவிப்பார்கள். நான் தயாராக கீழே வந்து காத்திருப்பேன்.

வெஸ்டர்ன் கோர்ட்டின் சிறிய அறையில், ஒரு சிறு பகுதியைச் சமையல் செய்வதற்காகத் தற்காலிகமாக அமைத்துக் கொண்டு, அய்யா அவர்களுக்குத் தேவை யான உணவு தயாரித்துத் தருவேன். அதை அவர்கள் ருசித்துச் சாப்பிடுவதுடன் என் முயற்சியைப் பெரிதும் பாராட்டுவார்கள். ஓராண்டுக்குப் பிறகு வித்யாலயத்தி

லிருந்து சுப்பையன் என்ற இளைஞனைத் தனக்கு உதவிக்காக அய்யா அவர்கள் அழைத்து வந்தார்கள். சுப்பையன் வெகு விரைவில் அய்யா அவர்களுக்கு எப்படி உணவு தயாரிக்க வேண்டும் என்று கற்றுக் கொண்டார். அய்யா அவர்களுக்கு வேண்டிய மற்ற எல்லா பணிகளையும் செய்வதுடன், கடைக்குப் போவது போன்ற சிற்றேவல்களையும் நன்றாகச் செய்து எங்கள் அன்பைப் பெற்றுக் கொண்டார். பிற்காலத்தில் அய்யா அவர்களுடைய கார் டிரைவராகிக் கடைசி வரையிலும் அய்யா அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர் களுடைய ஆசியை மனமாரப் பெற்றுக் கொண்டார். இன்றும் வித்யாலயத்தில் நல்ல தொண்டு செய்து வருகிறார்.


டெல்லியில் சென்று வேலை ஏற்ற சில நாட்களில், மே 1955—ல் அமெரிக்காவிலிருந்து பிரபல நியூயார்க் ஹெரால்ட் டிரிபூன் நாளிதழை நடத்துபவர்கள், உலக சமாதானத்திற்காக ஒரு மாநாடு கூட்டினார்கள். அதற்காக எனக்கும் அழைப்பு விடுத்தார்கள். இரண்டே வாரத்தில் தயாராகி அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டது. பாஸ்போர்ட், விசா முதலிய சடங்கு களைத் தவிர, அரசிடம் இருந்து நான் அனுமதி பெற் றாக வேண்டும். புது பணியில் சேர்ந்து ஒரு மாதம் கூட ஆகாததால், உத்தரவு மறுக்கப்பட்டது. அப்பொழுது திரு அஜித் பிரசாத் ஜெயின் அவர்கள் உணவுத்துறை கேபினட் அமைச்சராக இருந்தார்கள். அய்யா அவர்களும், திருமதி லக்ஷ்மி மேனன் அவர்களும் (வெளி உறவுத் துறை இணை அமைச்சர்) திரு அஜித் பிரசாத் ஜெயி னிடம் வாதாடிப் புறப்பட 24 மணி நேரம் இருக்கும் போது, உத்தரவு பெற்றுத் தந்தார்கள். அந்த உத்தரவில் நான் மூன்றே நாட்களில் திரும்ப வேண்டும் என்ற நிபந் தனையும் கண்டிருந்தது. அய்யா அவர்களின் செல்



1955 ல் வெஸ்டர்ன் கோர்ட் மைதானத்தில் கல்லூரி
ஆரம்பிப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது

வாக்கால் உடனே பாஸ்போர்ட்டும், விசாவும் கிடைத்தன. பேனம் (PANAM) விமான அதிகாரிகள் எனக்கு முதல் வகுப்பு பயணச்சீட்டைப் போக வரத் தந்தார்கள். அக்கா திருமதி மேனன் அவர்கள் வாழ்த்து கூறித் தன் பட்டுப் புடவை ஒன்றையும் இரவலாகத் தந்தார்கள். அந்தப் பட்டுப்புடவையை அவர்களிடம் திருப்பித் தரச் சென்ற போது, ''என்னை விட உனக்கு அந்தப் புடவை மேல் அதிக ஆசை இருக்கிறது. அதை நீயே வைத்துக் கொள். இன்னும் பல நல்ல வெளிநாட்டுப் பயணங்கள் உனக்குக் கிடைப்பதாக'' என்று வாழ்த்தி அளித்தார்கள். அப்பொழுதிலிருந்து 1955–லிருந்து 1996 வரையிலும் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குப் புறப்படும் பொழுதும் அந்தப் புடவையைத் தான் அணிந்து கொண்டு புறப்படுவேன். 1996–ம் ஆண்டு இலங்கையில் கொழும்பு நகரில் தங்கியிருந்த ஒரு ஹோட்டலில் அந்தப் புடவையை மறந்து விட்டு விட்டுத் திரும்பி விட்டேன்; அதை இழந்துவிட்டேன்.

நியூயார்க்குக்கு அவசரமாகப் புறப்பட்டு ஒரு நாள் அதிகாலையில் நியூயார்க் விமான நிலையத்தை அடைந்தேன். அப்பொழுது அந்த விமான நிலையத்திற்கு ஐடில் வைல்ட் (Idle wild) என்று பெயர். ஐடில் வைல்டுக்குப் பின்னர் கொலை செய்யப்பட்ட மாமனிதர் அமெரிக்க ஜனாதிபதி ஜான். எப். கென்னடியின் பெயர் கிடைத்தது. மாபெரும் நியூயார்க் நகரில் எனக்குப் பிரபல வால்டார்ப் ஆஸ்டேரியா (Waldorf Astoria) ஹோட்டலில் பெரிய அறைகள் ஏற்பாடு ஆகியிருந்தது. அதில்தான் பண்டித ஜவஹர் லால் நேரு தங்குவார்களாம். எல்லா வசதிகளையும் கொண்ட பெரிய பெரிய அறைகள் – ஒரு மாளிகை போல் இருந்தது. இறைவன் அருள் எப்படியெல்லாம் பரிபாலிக்கிறது; நான் புறப்படும் முன் அமெரிக்க நண்பர்களுக்கு அன்பளிப்புகளையும் அவர்களிடம் நாங்கள்



அய்யா அவர்கள் திருமதி லக்ஷிமி மேனனுடன், பிறந்த நாளன்று — மே 1989

ஆரம்பிக்க இருக்கும் மனையியற் கல்வி நிலையங்களைப் பற்றித் தெரிவிக்க ஒரு அறிக்கையையும் எடுத்துச் சென்றேன். அதை இரவோடு இரவாக அய்யா அவர்கள் எழுதி, அடுத்த நாள் அச்சு எடுத்து 100 பிரதிகளைத் தந்திருந்தார்கள். * (பின் இணைப்பு - 1, பார்க்கவும்)

நியூயார்க் டிரிபூன் கருத்தரங்கில், ஒரே மேடையில் பின்னாள் அமெரிக்க ஜனாதிபதியாக வந்த ரிச்சர்ட் நிக்சன், பிரபலச் சமூக இயல் நிபுணர் பார்பரா வார்டு ( Sociologist Barbara Ward ) பாரத விஞ்ஞானி ஹோமி பாபாவும், நானும் கலந்து கொண்டோம். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உள்ள ஒரு அரங்கில் சுமார் 1000 பேர் இருந்த கூட்டத்தில் ''இந்தியாவின் வளர்ச்சித் திட்டத்தில் மனையியலின் பங்கு'' என்பதைப் பற்றிப் பேசினேன். ஆழ்ந்த கவனத்துடன் கேட்டு என் பேச்சு முடிந்ததும் அனைவரும் எழுந்து (Standing ovation) கொடுத்த கர கோஷம் பெரிதாக இருந்தது. அடுத்த நாள் நியூயார்க் டைம்ஸ் போன்ற பிரபல பத்திரிகைகள் பிரமாதமாக எழுதியிருந்தார்கள். ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி மீதியிருந்த இரு நாட்களில் நியூ பால்ட்ஸ் ஆசிரியர் கல்லூரி (New Paltz College of Education) தலைவர் முனைவர் வில்லியம் ஹேக்கர்ட்டி (Dr. William Haggerty) (இந்தியாவுக்கு ஆலோசகராக வந்திருந்தவர்) வீட்டிற்குச் சென்று அங்கிருந்து, நான் படித்த கொலம்பஸ் ஒஹியோ ஸ்டேட் பல்கலைக்கழகத்திற்குச் சென்று நண்பர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் பார்த்து விட்டு அமெரிக்க நாட்டின் தலை நகரான வாஷிங்டன் டி.ஸி.யில் நண்பர்கள் ரூத் மற்றும் அவர்கள் கணவர் டக்லஸ் போர்மன் (Douglas Formans) வீட்டிற்குச் சென்று, அங்கிருந்து நியூயார்க் விமான நிலையத்தை அடைந்து, குறிப்பிட்ட நாளில் டெல்லிக்கு வந்து சேர்ந்தேன். இந்தக் குறுகிய காலத்தில் நூற்றுக் கணக்கான நண்பர்களிடம் நாங்கள் ஆரம்பிக்க இருக்கும் நிறுவனத்தைப் பற்றிச் சொல்லி அவர்களுடைய

நல்வாழ்த்துக்களுடன், ஆரோக்கியத்துடன் திரும்பிய தற்கு அய்யா அவர்கள் மிகவும் மகிழந்தார்கள். இந்தப் பயணத்திற்காக என்னைத் தயார் செய்வதற்கும், வேண் டிய அனுமதிகளைப் பெறுவதற்கும் அய்யா அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமம் அளவிடற்கியலாதது.

அந்த நாட்களில், அமெரிக்காவில் முன்னணியில் இருந்த தலைவிகளில் ஒருவரான திருமதி ஹெலன் பௌலர் (Mrs. Helen Fowler) அவர்களுடைய கணவருடன் டெல்லிக்கு வந்திருந்தார்கள். அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில் மிகுந்த செல்வாக்குள்ள அரசியல் வாதி யான அவர்களுக்கு நாங்கள் வெஸ்டர்ன் கோர்ட்டில் காட் டிய சிறு உபசரிப்பு, பிற்காலத்தில் விலை மதிக்க முடியாத அன்பு உதவியாகப் பிரதிபலித்தது.

பிரபல உணவியல் நிபுணர் – விட்டமின் 'சி'–யைச் செயற்கையாக அமைத்துக் காட்டிய, டாக்டர் சார்லஸ் ஜி. கிங் தம்பதியரையும் வெஸ்டர்ன் கோர்ட்டில் உபசரித் தோம். 1971–ம் ஆண்டில் உலக உணவு மாநாட்டில் வாஷிங்டன் நகரில் கலந்து கொண்ட பிறகு நியூயார்க் கிலிருந்த அவர்கள் வீட்டில் என்னை உபசரித்தார்கள். அவர்கள் பிற்காலத்தில் மனையியற் கல்லூரிக்கும் வருகை தந்தார்கள். தங்கள் வாழ்நாள் முழுவதும் அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரிக்குப் பரிந்துரை செய்து வந்தார்கள். இப்படிப்பட்ட உலக அறிவியல் வல்லுநரைச் சந்தித்துப் பேசுவது அய்யா அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அறிவியல் மேதைகளுக்கெல் லாம் மாமேதையாக அய்யா அவர்கள் கேட்கும் கேள்வி களும் விளக்கங்களும் அமைந்திருந்தன.

மத்திய அரசின் கல்வித்துறையில் துணைச் செய லராக இருந்த டாக்டர் ஆர்.கே. பான் அவர்களையும் அய்யா அவர்கள் மூலமாகத் தெரிந்து கொண்டேன். அவர்

என்னை நாடு முழுவதற்குமான, மனையியல் பல் நோக்கு மேல்நிலைக் கல்விக்கான திட்டத்தைத் தயார் செய்து தரக் கேட்டுக் கொண்டார்கள். அப்படியே செய்து தந்தேன். அந்த அறிமுகத்தால் இன்று வரை நான் NCERT போன்ற தேசிய கல்விக் கழகங்கள், தேசிய அமைப்பு களுடன் நெருங்கிய தொடர்பு வைக்க முடிகிறது.

என் பணியில், நான் தேசம் முழுவதும் சென்று மனையியல் விரிவாக்க நிலையங்கள் அமைப்பதற்கும், அதில் பணி செய்யும் மகளிருக்குப் பயிற்சி தருவதற்கும், மாதத்தில் 20 நாட்கள் பயணமாகக் கழியும். அய்யா அவர் களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினராகச் சுற்றுப் பயணங்கள் இருந்தன. சில வேளைகளில், ஒரே இடத் திற்குப் போகும் வாய்ப்புகளும் கிடைத்தன. சரித்திரப் புகழ் பெற்ற சாஞ்சி நினைவுக் கோயில், காசி, கயா, சாரநாத், கல்கத்தா, புவனேஷ்வர், கட்டாக், ஆக்ரா, போபால், கோனாறக், கஜ்ராஹோ, கௌகத்தி, ஜெய்ப்பூர், ராஜ்கோட் (சௌராஷ்டிரம்) ஆகிய பல இடங்களில் அய்யா அவர்களுடைய அறிவார்ந்த உதவியோடு சென்று அநேக விபரங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இந்தக் காலக்கட்டத்தில் ஜப்பானுக்கு முதன் முதலாக 1956–லும் 1957–லும் இருமுறை மனையியல் கருத் தரங்குகளில் கலந்து கொள்வதற்காகச் செல்லும்வாய்ப்பு கிடைத்ததில், போகும் வழியில் தாய்லாந்தையும் பார்க்க முடிந்தது. வெளிநாடுகளுக்குச் செல்லும் போது மனமார ஆசி கொடுத்து அய்யா அவர்கள் அனுப்புவார்கள். அங் குள்ள நண்பர்களுக்கு என்னைக் கவனித்துக் கொள் ளும்படிக் கடிதமும் எழுதுவார்கள். ஜப்பானின் மனை யியல், கிராம வேளாண்மைச் சமுதாயத்துடன், ஒன்றி யிருந்ததைக் கண்டேன். அமெரிக்காவில் நியூயார்க், சிகா கோ, பாஸ்டன், சான் பிரான்ஸிஸ்கோ, சான்டா பார்பரா,

ஹாலிவுட் ஆகிய நகரங்களிலும், ரங்கூன், கொழும்பு, பீஜித்தீவு, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், லண்டன், பாரீஸ் ஆகிய இடங்களிலுள்ள இராம கிருஷ்ண மடத் தலைவர்களுக்கு என்னைக் கவனித்துக் கொள்ளும்படி எழுதியிருந்ததால் எங்குச் சென்றாலும், அன்னையின் இல்லத்தில் எனக்குப் பாதுகாப்பு கிடைக்க வழி செய்து உதவினார்கள் அய்யா அவர்கள்.

இந்த அனுபவங்களின் பின்னணியில் தான், ஆண் டவனுடைய ஒப்பற்ற அருளுடன், அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியின் அடித்தளம் உருவானது. அதற் காக அய்யா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள், பார்த்த இடங்கள், எழுதிய கடிதங்கள், விவாதித்த பிரச் சனைகள் ஏட்டிலடங்கா. திட்டமிட்டு ஆற்றலுடன், தன் சக்திக்குட்பட்டுச் செயல்படும் வீரனை அய்யா அவர்க ளிடம் கண்டேன்.

அய்யா அவர்கள் டெல்லியில், நாடாளுமன்றம் இருக் கும் நாட்களில் தான் முடிந்தவரை தங்குவார்கள். அப் பொழுது அவர்களுக்கு வித்யாலயத்தில் இருந்து கத் தைக் கத்தைகளாகக் கடிதங்கள் வரும். அவர்களும் அவ் வப்போது பதில் எழுதி விடுவார்கள். உடனுக்குடன், சிறி யவர் பெரியவர் என்று பாராமல் பதில் எழுதும் குண நலமுள்ள பண்பாளர் அய்யா அவர்கள்.

நேரத்தை ஆக்க முறையில் செலவு செய்யும் வழி களையும் அய்யா அவர்களிடம் வெஸ்டர்ன் கோர்ட் வாழ்க் கையில் கண்டேன். ஓயாமல் தியானத்திலும், படிப்பிலும், எழுத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இருப் பார்கள். அவ்வப்போது தொலைபேசி மூலம், பலரிட மிருந்து பல செய்திகளைத் தெரிந்து கொள்வார்கள்.

அந்தக் காலத்தில் தான் ஆதாரக் கல்வியைப் புரிந்து கொள்ளுதல், விழாக்களைக் கல்விக்குப் பயன்படுத்துதல், உலக மகா ஆசிரியர்கள் கல்வியைப் பற்றிக் கூறுவது ஆகிய புத்தகங்களை வெஸ்டர்ன் கோர்ட்டில் இருந்து கொண்டே எழுதினார்கள். அவற்றைப் பார்வையிட்டு என் கருத்துக்களைக் கூறும் பாக்கியத்தையும் அய்யா அவர்கள் எனக்கு அளித்தார்கள். பிற்காலத்தில் எழுதிய பல நூல்களையும் நான் வரி வரியாகப் படித்து ஆக்கப் பூர்வமான யோசனைகளைச் சொல்ல வாய்ப்புகளைத் தந்தார்கள்.

''எப்பொழுதும் செயலாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்'' என்று தூய அன்னையார் சாரதாமணி தேவி கூறியதை அய்யா அவர்கள் நினைவூட்டிக் கொண்டேயிருப் பார்கள். இக்காலத்தில் சாதாரண மனிதனின் வாழ்க்கை யில், உறங்குவது, உண்பது, உடுப்பது, சினிமா பார்ப் பது, வீடியோ பார்ப்பது, அரட்டை அடிப்பது ஆகியவை பெரும் பகுதியான நேரத்தை விழுங்குகின்றன. ஆனால் பரம சான்றோனாகிய அய்யா அவர்கள் வாழ்க்கை, அதிகாலையில் 4.30 மணிக்கு, எக்காலத்திலும், எந்தப் பருவத்திலும் ஆரம்பமாகி, நாளொன்றுக்கு மூன்று மணி நேரம் தியானத்திற்கும், மூன்று மணி நேரம் படிப் பதற்கும், இரண்டு மணி நேரம் எழுதுவதற்கும், இரண்டு மணி நேரம் கருத்து பரிமாற்றங்களுக்கும், மூன்று மணி நேரம் நிர்வாகம், மேற்பார்வைக்கும், விருந்து உபசரிப் புக்கு இரண்டு மணி நேரம், குளிப்பது, உண்பது போன்ற பணிகளுக்கும் இரண்டு மணி நேரம், நட்புக்கு ஒரு மணி நேரமும், உறக்கம் 6—7 மணி நேரமுமாகச் செலவு செய்யப்பட்டன. அய்யா அவர்கள் தம் நேரத்தைப் பயன்படுத்துவதில் எவ்வளவு சிக்கனமும், சேமிப்பும் கையாண்டார்கள் என்பதை உணர்ந்தேன்.

விருந்து உபசரிப்பில் அய்யா அவர்களுக்கு அலாதி இன்பம். விருந்தில் சேர்க்கப்படும் உணவு தயாரிப்புகள் மிகவும் நன்றாக, அதிக அளவில், இருக்க வேண்டும். நிறையப் பரிமாற வேண்டும். மலர்ந்த முகத்துடன் பரிமாறி விருந்தாளிகளுக்கு மேலும் சாப்பிட ஆர்வம் வரும்படி உபசரிக்க வேண்டும் என்று அடிக்கடிச் சொல் லுவார்கள். தனக்குப் பிரியமான ஜிலேபி, ரசகுல்லா ஆகியவற்றை விருந்தில் சேர்க்க மறக்கவே மாட்டார்கள். வெஸ்டர்ன் கோர்ட்டில் இருந்த நாட்களில் ஒவ்வொரு இரவும், 3—4 பேரை விருந்துக்கு அழைப்பார்கள். அவர் களிடம் என்ன பேசுவது என்பதை முதலிலேயே குறித் துக் கொண்டு, உணவு நேரத்தில் இனிய பேச்சு வார்த்தை களுக்குத் தயாராக இருப்பார்கள்.

சிறந்த புத்தகங்கள், நல்ல நண்பர் என்று உணர்ந்து அய்யா அவர்கள் தேர்ந்தெடுத்த புத்தகங்களை ஆர்வத் துடன் படிப்பார்கள். ரீடர்ஸ் டைஜஸ்டை அவர்கள் விரும் பிப் படிக்கத் தவறுவதில்லை. எனக்கு, அமெரிக்காவில் நான் படித்த காலத்தில், என் பேராசிரியர் ஒருவர் அந்தப் பத்திரிகைக்கு ஆயுள் சந்தாவை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார்கள். அய்யா அவர்கள் அமெரிக்கன் பதிப்பைத் தனி ஆர்வத்துடன் படிப்பார்கள். மாதந் தோறும் அய்யா அவர்களுக்கு அதைத் தருவதில், நான் அடைந்த இன்பம் பெரிது.

வெஸ்டர்ன் கோர்ட்டிலிருந்து கல்லூரிக்கு வேண்டிய, எல்லா சாதனங்களையும் இலகுவில் வாங்கிக் கோவைக் குக் கொண்டு வர முடிந்தது. அந்தக் காலத்தில் ரயிலில் தான் பயணங்கள் செய்தபடியால், கொண்டு போகும் பொருட்களின் எடையை அதிகமாகத் தாராளமாக எடுத்துச் செல்லவும் முடிந்தது.

1957—ல் எனக்குக் கடுமையான குடல் புண் (peptic ulcer) உண்டாயிற்று. ஓயாது பல ஊர்களுக்குப் பயணம் செய்ததும், அங்குள்ள உணவு, நீர் முதலியன ஒத்துக் கொள்ளாததும், கடுமையான உழைப்பும் இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆகவே ஓய்வுடன் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்ட பொழுது, என் புதல்வன், மோகன் வித்யாலயத்திலிருந்து விடுமுறைக்காக டெல்லிக்கு வந்தான். வெஸ்டர்ன் கோர்ட்டில் என்னுடன் தங்கியிருந்து எனக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தான். சமையலும் கற்றுக் கொண்டு, நல்ல மெதுவான இட்லிகளைத் தினமும் அவித்துத் தந்தான். அய்யா அவர்கள் அவனுடைய பரிவையும், பணியையும் பார்த்துப் பாராட்டினார்கள். தனது இட்லிகளை அய்யா அவர்கள், திருமதி லக்ஷ்மி மேனன், அவர்களுடைய கணவரிடமும் பகிர்ந்து மகிழ்ந்தான்.

*உண்மை உழைப்புக்கு அடிப்படையாக*
*இருப்பது ஊக்கம். ஊக்கம் இல்லாத*
*உழைப்பு பரிணமிக்காது,*
*ஏற்ற பயனையும் தராது.*

*— தி.சு. அவினாசிலிங்கம்*

# 8. அவினாசிலிங்கம் அறக்கட்டளை நிறுவப்பட்டது

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டிலிருந்து தொடர்ந்து எடுத்துக் கொண்ட முயற்சிகளால், 1952–ம் ஆண்டு புனித விஜயதசமி அன்று, திரு அவினா சிலிங்கம் கல்வி அறக்கட்டளை, மகளிர் கல்விக்காகப் பதிவு செய்யப்பட்டது. அறக்கட்டளையின் ஆயுள் உறுப் பினர்களாக அய்யா அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களில் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், சுவாமி சோமானந்தா, பெரிய அய்யா திரு கே.எஸ். திருஞான சம்பந்த செட்டியார், சின்ன அய்யா திரு டி.எஸ். தண்ட பாணிச் செட்டியார், டாக்டர் கே. குழந்தைவேல், மதுரை அய்யா திரு எம்.எம்.ஆர். சுப்பராமன் அவர்கள், திரு என். மகாலிங்கம், டாக்டர் இராஜம்மாள் பா. தேவதாஸ் அடங்குவார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அய்யா அவர்கள் அறக் கட்டளையில், புதிதாக, டாக்டர் சி. கோபாலன், ஜஸ்டிஸ் ஆர். செங்கோட்டுவேலன், திரு டி.கே. சண்முகானந்தம், டாக்டர் கோதாவரி கமலநாதன், திரு டி.எஸ். பாலசுப்ர மணியம், திரு ஞானதுரை மைக்கேல், திருமதி லக்ஷ்மி மேனன் ஆகியோரையும் அறங் காவலர்களாக நியமித் தார்கள். அய்யா அவர்கள் அறக் கட்டளையின் தலைவரா கவும், நிர்வாக அறங்காவலராகவும், நான் துணைத் தலைவராகவும், ஆரம்பம் முதல் செயல்பட்டோம்.


அய்யா அவர்கள் மறைந்த 1991–ம் ஆண்டு நான் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக இருந்த படியால், என் துணைவேந்தர் பதவி காலம் முடியும்

வரையிலும் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கித் தலைமைப் பொறுப்பை அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். அது எங்களுக்கு அளவில்லாத ஆற்றலையும், பெருமையையும் அளித்தது.

துணைத் தலைவராக அய்யா அவர்கள் என்னிடம் வைத்திருந்த நம்பிக்கை மிகப் பெரிது. தனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான என்னை அய்யா அவர்கள் தலைமைப் பொறுப்புக்காகப் பயிற்றுவித்து, ஆதரவு கொடுத்த முறைகளும் வியக்கத்தக்க பெருமையுடையவை.

## ஆலயம் அமைத்தது

''பிரார்த்தனை என்பது காலையில் திறவுகோல், மாலையில் தாழ்ப்பாள்'' என்றார் அண்ணல் காந்தியடிகள். மாணவப் பருவத்திலேயே நல்ல பிரார்த்தனை செய்யும் மனப்பக்குவத்தை உருவாக்குவதற்கேற்ற சூழ்நிலையை அமைத்துத்தர, அய்யா அவர்கள், வளாகத்தின் மத்தியில் அனைவரையும் ஈர்த்து இறைவனை நினைக்க வழி வகுக்கின்ற பிரார்த்தனைக் கூடத்தை முதலாவது எழுப்பிய கட்டடங்களில் ஒன்றாக அமைத்தார்கள். அன்னை சாரதா மணி அவர்கட்கும், ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் கட்டப்பட்ட இந்தத் திருக்கோயில் கட்டிடத்திற்குப் பூமி பூஜையோ அடிக்கல் நாட்டு விழாவோ ஆடம்பரமாக நடக்கவில்லை. பூமி பூஜை செய்யும் இடத்தில், தோண்டிய குழியில், பள்ளி விடுதியில் படிக்கும் பிள்ளைகளை அய்யா அவர்கள் குருமகராஜையும், தேவியையும் நினைத்து வணங்கி நவரத்தின கற்களைப் போடும்படி பணித்தார்கள். அப்போது கட்டிட வேலைகளைக் கவனித்து வந்த மேஸ்திரி ராமசாமி போயரும் மேற்பார்வை செய்து வந்த பொறியாளர் கங்காதரன் அவர்




மாண்புமிகு திரு சி. சுப்பிரமணியம்
அவர்களுடன்

களும் உடன் இருந்தார்கள். கட்டிட வேலை ஆரம்பித்ததும், தினமும் அதிகாலையிலும், மாலையிலும் வித்யாலயத்திலிருந்து அய்யா அவர்கள் வந்து, கட்டிட வேலை எப்படி நடக்கிறது என்று ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து எப்படி எல்லாம் அமைக்க வேண்டும் என்று பொறியாளரிடம் கூறிச் செல்வார்கள்.

சுமார் ஆறு மாத காலத்தில் திருக்கோவில் கட்டிடம் முடிந்ததும், கோவிலுக்குத் தேவியின் படத்தையும், இராமகிருஷ்ண பரமஹம்சர் படத்தையும் அய்யா அவர்கள் வித்யாலயத்திருந்து கொண்டு வந்தார்கள். மேலும், ஏசு நாதர், தூய அன்னை மரியம்மாள், சுவாமி விவேகானந்தர், சுவாமி சிவானந்தர் ஆகியோரின் படங்கள் திருக்கோவிலில் இருக்க வேண்டுமென விரும்பினதால், அவையும் கோவிலின் சுவர்களில் மாட்டப்பட்டன.

கோவிலின் பிரதிஷ்டையையும், திறப்பு விழாவையும் 1956-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ம் தேதி, தவத்திரு சுவாமி யதீஷ்வரானந்தா அவர்கள் நடத்தி வைத்தார்கள். அதற்காக 12 மணி நேர அகண்ட பூஜை, பள்ளியிலுள்ள சிறுமிகளால் நடத்துவதற்கு அய்யா அவர்களே முன்னின்று தலைமை ஆசிரியை விசாலாட்சி அம்மாளுக்கு வழி காட்டினார்கள். அன்று நானும், அமெரிக்க நண்பர் காலம் சென்ற திருமதி ஆட்டி சோடர் அவர்களுடன் டெல்லியிலிருந்து வந்து முழு பங்கு பெற அரிய வாய்ப்பு கிடைத்தது. பஜனைப் பாடல்கள் விண்ணைப் பிளக்குமாறு அமைந்தன. வித்யாலயத்தில் அன்று இருந்த சர்வக்ஞானந்தா சுவாமியும் கூட இருந்தார்கள். வித்யாலய பஜனைக் குழு பாட்டு இசைக்க, அய்யா அவர்கள் திட்டமிட்டபடி கோவில் அழகாகத் திறக்கப்பட்டது. பள்ளி ஆசிரியைகள் — குறிப்பாக இசை ஆசிரியையும், திருமதி ரஞ்சிதம்மாளும், செல்வி ஹேமபிரபாவும், மாணவி



சாரதாலய வளாகத்தில் அமைந்துள்ள கோயில்

களும் பஜனை செய்து கொண்டே இருந்தனர். பெற்றோர்களும் காலையிலிருந்து நடுப்பகல் வரை நடந்த அகண்ட பூஜையில் பங்கு கொண்டனர். பள்ளி ஆசிரியைகளும், அய்யா அவர்களின் குடும்பத்தினரும், சின்னய்யா திரு தண்டபாணிச் செட்டியார், பெரிய அய்யா திருஞானசம்பந்தம் செட்டியார் திரு எஸ். ராமசாமி அவர்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். உச்சி பூஜை ஆரத்தியுடன் முடிந்தது. சுமார் மூன்று மணி அளவில் அழைக்கப்பட்டிருந்த பேரறிஞர்கள், தேவியைப் பற்றியும், குருமகராஜைப் பற்றியும் பேசினார்கள். மாலையில் சுமார் 6 மணி அளவில் நிறைவு பூஜை சுவாமி யதீஷ்வரானந்தா அவர்களால் நடத்தப்பட்டது. ஸ்ரீ குருமகராஜுக்கு ஜே, தேவிக்கு ஜே, சுவாமிக்கு ஜே என்ற பேரொலியுடன் முடிந்து, சில நிமிடங்கள் மௌனமாக இருந்த பிறகு பிரசாதம் வழங்கப்பட்டது. அன்று கோயிலில் ஏற்றப்பட்ட விளக்கு இன்று வரை ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அய்யா அவர்கள் அவ்வப்போது எனக்குத் தக்க அறிவுரைகளை, ''எல்லாம் ஆண்டவன் அருள்; குருமகராஜ் அருள்படி நடக்கிறது'' என்ற அடிப்படையில் தருவார்கள். அவற்றில் சில பின்வருமாறு:

*''அனைவரிடத்திலும் அன்பு காட்ட வேண்டும்.*
*எல்லோரும் நமக்கு வேண்டியவர்களே''*

*''அனைவரையும் நம் பெரும் பணியில்,*
*இது தங்கள் நிறுவனம் என்று நினைத்து,*
*ஒத்துழைப்பு தரும் வகையில் அணுகி,*
*அனுசரித்து ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.*
*யாராவது பகைமை காட்டினால்*
*'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண*
*நன்னயம் செய்து விடல் வேண்டும்' என்ற*

*திருக்குறள்படி, அன்பினால் வெல்ல வேண்டும்.''*

*''பேசும்போதோ, எழுதும் போதோ, 'நான்' 'எனது' 'எனக்கு' என்ற நினைவுகள் வராமல் 'நாம், 'நம்', 'நமக்கு' என்ற கருத்துக்களை வெளியிட வேண்டும். தனியாக யாருமே எதையுமே சாதிக்க முடியாது. பலர் சேர்ந்து அறிவுடன் ஒத்துழைப்பு தரும்போது தான், பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும்''.*

*''வாழ்க்கையில் இடையூறுகள் வருவது சகஜம். ஆனால் அவற்றால் சோர்ந்து போகாமல் நிமிர்ந்து நிற்க வேண்டும். தைரியமாக எதிர் கொள்ள வேண்டும். நிதானத்தையும், பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுதும் சிரித்த முகத்துடன், இன்சொற்களையே பயன்படுத்த வேண்டும். கடும் சொல்லும், சிடுசிடுத்த முகமும், வாழ்க்கையில் வெற்றியைத் தராது.''*

*''உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு''*

என்ற தெய்வப் புலவர் வள்ளுவர் வாக்குக்கு உதாரண மாகத் திகழ்ந்தார்கள் அய்யா அவர்கள்.

அய்யா அவர்களுக்கு உலக வாழ்க்கையில் பற்று அறவே கிடையாது. ஆனால் அனைவரையும் குழந்தை களாகவும், உறவினராகவும் மதித்து நடத்தினார்கள். எளிய அழகிய பொருட்களையே விரும்பி உபயோகித் தார்கள். உதாரணமாக, எண்ணற்ற நூல்கள், கட்டு

ரைகள், குறிப்புகள், கடிதங்கள் எழுதுவதற்கு, நல்ல பேனாவை விரும்பிப் பெறுவார்கள். நான் வெளிநாடு களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் நல்ல உயர்ந்தரக பேனாக்களை வாங்கி வந்து தருவேன். மலர்கள் மேல், அவற்றின் அழகில், நறுமணத்தில் மனத்தைப் பறி கொடுப்பார்கள். எனக்கும் மணமுள்ள பூக்கள் மேல் அபார பிரியம் உண்டு. கல்லூரி வளாகத்தில் நான் தங்கு வதற்காக அமைத்துத் தந்திருக்கும் வீட்டைச் சுற்றிலும், மல்லிகை, ரோஜா, சம்பங்கி, மனோரஞ்சிதம், கனகாம் பரம் ஆகிய செடிகளையும், ஷண்பக மரத்தையும் வளர்த்து வருகிறேன். அவை பூக்கும் போது, ''ஆகா, என்ன அழகு; இவை தான் உங்கள் வீட்டிற்கு உண்மை யான அலங்காரம்'' என்று பேருவகையுடன் சொல்வார்கள். தினமும் அவர்களுக்குச் சட்டையில் வைத்துக் கொள்ள (சட்டையில் அதற்கென்றே ஒரு பை தைக்கப்பட்டிருந் தது) நீண்ட காம்புள்ள ரோஜாப்பூவுடன் மருவு, மல்லிகை வைத்துக் கட்டித் தருவோம். அவர்கள் அதை ஆனந்தமாக அணிந்து கொண்டு வருவார்கள். அவர்களுடைய ஆபர ணம் மலர்களே.

நல்ல புத்தகங்கள், அருள் வாக்குகள், ஆண்டவரைப் பற்றிய சித்திரங்கள், சந்தனத்திலும், தந்தத்திலும் செய்த உருவங்களைப் பெரிதும் விரும்புவார்கள். ஆனால் எதையும் தனக்கென வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையே கிடையாது. நல்ல பொருட்களைப் பார்த் துப் பாராட்டுவார்கள். ஆனால் அடுத்த நிமிடமே அவற்றை அருகிலுள்ளவர்களுக்கோ, தங்களைப் பார்க்க வரும் நண்பர் உறவினர்களுக்கோ தந்து விடுவார்கள். எனக்கோ, அவற்றில் சில நம் கல்வி நிறுவனங்களின் உடைமைகளாக வேண்டும் என்ற ஆவல் இருக்கும். ஆனால் மற்றவர்களுக்கு விரும்பித் தருவதை நான் எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? இயன்றவரையில்

யாரும் இல்லாத பொழுது, அய்யா அவர்களிடம் எஞ்சி இருக்கும் புத்தகங்கள், அழகுப் பொருட்களைக் கேட்டு வாங்கிக் கல்லூரிக்குக் கொண்டு வந்து விடுவேன். நாட்கள் செல்லச் செல்ல இது அய்யா அவர்களின் மனத்திலும் பட்டது. ஆகவே, பிற்காலங்களில் சில பொருட்களை அய்யா அவர்களே என்னிடம், ''உங்களுக்குப் பிரியமான ஒரு பொருள் வைத்திருக்கிறேன் இதோ'' என்று எடுத்துக் கொடுப்பார்கள்.

''ஒருவருக்கு அழகெல்லாம் அவர்கள் தூய்மையும் குண நலன்களும் தான். ஆகவே ஆபரணங்கள், ஆடைகள் மேல் அதிகமாக கருத்து செல்லலாகாது'' என்று அடிக்கடி சொல்லுவார்கள். இது எவ்வளவு நல்ல அறிவுரை! இந்த உண்மையை அவர்களைப் போல் பழக்கமாக்கிக் கொண்டால், வாழ்க்கை எளிமையாவதற்கும், எளிமையில் செம்மையும் சீரிய சிந்தனைகளும் உருவாகுவதற்கும் எவ்வளவு உதவி கிடைக்கின்றது!

*இலட்சிய வாழ்வுக்குப் பெரிது பணமல்ல,*
*அதிகாரமல்ல, சேவைதான் பெரிது;*
*தூய்மைதான் பெரிது; கடமையைச்*
*செவ்வனே செய்வதுதான் பெரிது.*

*– தி.சு. அவினாசிலிங்கம்*

# 9. அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரி பிறந்தது

அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரி 1957–ம் ஆண்டு ஜூலை மாதம் 24–ம் தேதியில் முறைப்படித் துவங்கப்பட்டது. அதற்கு முன்னோடியாக, 1955 ஜூன் மாதத்தில் அவினாசிலிங்கம் உயர்நிலைப்பள்ளி முதலமைச்சர் மாண்புமிகு திரு எம். பக்தவத்சலம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியை அன்று துணை குடியரசுத் தலைவராக இருந்த ஒப்பற்ற தத்துவ ஞானி டாக்டர் சர். ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்கள். கட்டிடங்களைப் பண்டித ஜவஹர்லால் நேருவிடம் வெளியுறவு துணை மந்திரியாக இருந்த திருமதி லக்ஷ்மி மேனன் திரு விளக்கேற்றித் திறந்து வைத்தார்கள். அய்யா அவர்களின் பெயர் தாங்கும் கல்லூரியின், முதல் கட்டிடமாக, பல சான்றோர் முன்னிலையில், ஆண்டவன் அருளாசியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட ''அப்பனருளில்'' இவர்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்லூரி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, இந்தியத் துணை கண்டத்திலேயே, ஏன் ஆசிய கண்டத்திலேயே, இணையற்ற பெரிய மனையியற் கல்லூரியாக வளர்ந்து, 1988–ல் பல்கலைக் கழகமாக மலர்ந்தது, ஒரு தெய்வீக அற்புதமே. உலகில் இன்று உள்ள ஒரே ஒரு மனையியல் பல்கலைக்கழகமும் இதுவே.

அய்யா அவர்கள் தன் பெயரால் இயங்கும் மனையியற் கல்லூரிக்குத் தந்த நோக்கங்கள் ஆவன :

1. கல்லூரியின் பாடத்திட்டங்கள், போதனா முறைகள் அனைத்தும் உலகத்தின் பெரிய ஞானிகள்,பேராசிரியர்களுடைய அறிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு இந்திய மகளிருடைய அருங்குணங் களைத் தழுவியதாக இருக்க வேண்டும். நல்ல குடி மக்களை உருவாக்க வேண்டும்.
2. கல்லூரியில் வழங்கப்படும் உயர் கல்வியானது, இந்திய, காந்தீயச் சூழ்நிலையுடன் ஆன்மீகம் நிறைந்து அறிவியலையும் நுண்பொறியியலையும் உதவியாகக் கொண்டு தற்காலத்திற்கு ஏற்றதாக அமைய வேண்டும்.
3. எதிர்கால அன்னையருக்கும், தலைவிகளுக்கும் இந்தியப் பண்பாட்டின் சிறந்த அம்சங்களை வடித்துத் தருவதாய் மலர வேண்டும்.
4. பொருத்தமான சமுதாயச் சேவைக்கு ஏற்ற விரி வாக்கத் திட்டங்களுடன் சமுதாயத்திற்குத் தொண்டு புரிய வேண்டும்.
5. மாணவியருள்ளங்களில் தன்மானத்தையும் சுய மதிப் பையும் உண்டாக்க வேண்டும்.
6. தேசிய ஒருமைப்பாட்டை விளைவிக்க வேண்டும்.
7. சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற் கேற்ற ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.
8. சமுதாயத்திற்கு உழைக்கக்கூடிய பல வகையான ஊழியர்களுக்கு, அரசு தனியார் நிறுவனங்கள் சார் பில் பயிற்சி கொடுக்க உதவ வேண்டும்.
9. கற்பித்தல், ஆய்வு செய்தல், விரிவாக்கம் ஆகியவை இணைந்து செயல்பட வேண்டும்.
10. ஆய்வுகளின் முடிவுகள், நல்ல பிரசுரங்களாக வெளி வரச் செய்ய வேண்டும்.
11. கல்வியில் புதுமைகளைக் கொண்டு வரவேண்டும்.
12. அனைத்து இந்தியாவில் இருந்தும் அயல் நாடு களில் இருந்தும் வரும் ஆசிரியைகளுக்கும், மாண வியருக்கும் உயர்ந்த கல்வியைத் தர வேண்டும்.

இந்த நோக்கங்களை நிறைவேற்ற அய்யா அவர்கள் சில திட்டவட்டமான அடிப்படைகளை வகுத்து அளித்தார் கள். அவற்றில் தலையாயது இறை உணர்வாகும். நமது செயல்களில் எல்லாம் உழைப்பின் கண்ணியம் மிளிர வேண்டும். யாவற்றிலும் தூய்மையும், ஒழுங்கும் காணப் பட வேண்டும். இந்திய பண்பாட்டின் உறைவிடம் நாம். இந்தியப் பண்பாடு என்பது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நமது வாழ்க்கையில் இரண்டறக் கலந்து, உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இல்லம், பேசும் பேச்சு, பாடும் பாட்டு, செய்யும் அலங்காரங்கள், தெய்வ வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் பின்னிப் பிணைந்து, வாழ்க்கைக்கு முழுமையைத் தருவது. இந்தியப் பண்பாட்டை நமது உபநிடதங்கள், தேவாரம், திருவாசகம், திருக்குறள் ஆகிய அழியாத தெய்வீக இலக் கியங்களில் காணலாம்.

உண்ணும் உணவு அனைத்தையும், விருந்து உணவு கள் உட்பட நாமே தயார் செய்து கொள்ள வேண்டும். தயாரித்த உணவு பதார்த்தங்களைக் கடைகள், ஹோட்டல் களிலிருந்து வாங்காமல், நாமே தயாரிக்கும் போது, சுகா தாரம், சுத்தம், அழகு, ருசி உள்ள உணவுகளைப் பெறுவ துடன், செலவும் குறையும். நாமே தயாரித்த உணவுகளை மற்றவர்கள் உண்டு மகிழும் போது நமக்கும் பெருமை யும் மன நிறைவும் உண்டாகும்.

அய்யா அவர்களுக்கு தெய்வீக இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது. தினமும் காலையில் இறை வழிபாடு முடிந்த பின்பு, ஆலமரத்தடியிலிருந்து இந்த இலக்கியங்களைத், திரு அருள் மொழிகளைப், பாடிப் பரவசமடைவார்கள். இவ்வாசகங்களில் முக்கியமான வற்றை ஒவ்வொரு கட்டிடத்தின் அடிக்கல்லிலும், கோயி லின் திறப்பிலும் செதுக்கி, அந்த வழியாகச் செல்லும் ஆசிரியர் மாணவியருடைய சிந்தனைகளைத் தூண்டும் வண்ணம் அமைத்துத் தந்தார்கள். அவற்றில் சில அடுத்தப் பக்கத்தில் தரப்பட்டுள்ளன:



துணை குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்,
அமைச்சர் திருமதி லக்ஷ்மி மேனன், மற்றும் திருமதி இராஜம்மாள் தேவதாஸ் அவர்களுடன்

| கட்டிடங்கள் | வாசகம் |
| --- | --- |
| திருக்கோயில்<br>23.12.1956 | உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை<br>அற்றே தவத்திற்கு உரு<br>உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது<br>தள்ளினும் தள்ளாமை நீர்த்து<br>— திருவள்ளுவர்<br><br>வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்<br>தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்<br>மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு<br>ஊனமொன் றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே<br>— அப்பர்<br><br>உயர்வற உயர்நலம் உடையவன் யவன் அவன்<br>மயர்வற மதிநலம் அருளினன் யவன் அவன்<br>அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன் அவன்<br>துயரறு சுடர்அடி தொழுதெழு என் மனனே<br><br>வீடுமின் முற்றவும், வீடு செய்து உம்முயிர்<br>வீடுடை யானிடை, வீடுசெய்ம்மினே<br>— நம்மாழ்வார்<br><br>யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை<br>யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை<br>யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி<br>யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே<br>— திருமூலர்<br><br>நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற<br>மறப்பயன் விளைக்குறும் வன்மை அன்றரோ<br>இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்<br>துறப்பிலர் அறம்எனல் சூரர் ஆவதே<br>— கம்பர்<br><br>ஒன்றாகக் காண்பதே காட்சி புலன்ஐந்தும்<br>வென்றான்தன் வீரமே வீரமாம் — என்றுந்தான்<br>சாவாமல் கற்பதே கல்வி தனைப்பிறர்<br>ஏவாமல் உண்பதே ஊண்.<br>— ஔவையார்<br><br>அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்<br>இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே<br>— தாயுமானவர் |

| கட்டிடங்கள் | வாசகம் |
|---|---|
| அன்னையருள்<br>10.8.1960 | நின்கடன் அடியேனையும் தாங்குதல்<br>என்கடன் பணி செய்து கிடப்பதே<br>— அப்பர் |
| கலைமகள்<br>இல்லம் (விடுதி)<br>11.3.1960 | பெருகலாம் தவம் பேதமை தீரலாம்<br>திருகலாகிய சிந்தை திருந்தலாம்<br>பருகலாம் பரமாய தோர் ஆனந்தம்<br>மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே<br>— அப்பர்<br><br>அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது.<br>— திருக்குறள் |
| திருமகள்<br>இல்லம் (விடுதி)<br>2.7.1963 | இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்<br>இல்லவள் மாணாக் கடை<br>— திருக்குறள்<br><br>அன்பிலார் எல்லாந் தமக்குரியர்; அன்புடையார்<br>என்பும் உரியர் பிறர்க்கு<br>— திருக்குறள் |
| மலைமகள்<br>இல்லம்<br>3.7.1966 | பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்<br>கருமமே கட்டளைக் கல்<br>— திருக்குறள்<br>மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்<br>ஆகுல நீர பிற<br>— திருக்குறள் |
| கண்ணகி<br>இல்லம்<br>18.7.1966 | பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்<br>திண்மையுண் டாகப் பெறின்<br>— திருக்குறள் |
| நிவேதிதா<br>இல்லம்<br>3.2.1971 | உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது<br>தள்ளினும் தளளாமை நீர்த்து<br>— திருக்குறள் |
| அவினாசிலிங்கம்<br>குழந்தைகள்<br>பள்ளி<br>3.2.1971 | ஓடிவிளையாடு பாப்பா — நீ<br>ஓய்ந்திருக்கலாகாது பாப்பா<br>நீதி உயர்ந்த மதி, கல்வி — அன்பு<br>நிறைய உடையவர்கள் மேலோர்<br>— மகாகவி பாரதியார் |
| திருச்சிற்றம்பலம்<br>அரங்கு<br>29.6.1987 | இற்பிறப்பு என்ப தொன்றும் இரும் பொறை என்ப தொன்றும்<br>கற்பெறும் பெயர தொன்றும் களி நடம் புரியக் கண்டேன்<br>— கம்பராமாயணம் |

## இறையுணர்வு

ஆண்டவன் வழிபாடு, காலையிலும், மாலையிலும், ஆண்டின் 365 நாட்களும் ஆலயத்தில் பக்தியோடு நடப் பதுடன், எந்த வேலையை / முயற்சியை ஆரம்பித்தாலும் கடவுள் வாழ்த்து, வணக்கத்துடன் ஆரம்பிக்க வேண்டும் என்று அய்யா அவர்கள் வழிகாட்டினார்கள். அதற்காகவே பஜனைப் பாடல் புத்தகம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் சர்வ மதப் பாடல்கள், ஆண்டவரைப் போற்றித் துதிக்கும் வண்ணம் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றை நன்கு போதிப்பதற்காகவே இசைத் துறையைக் கல்லூரி யின் ஆரம்பத்திலேயே 1958–ல், முதல் மூன்று பட்டப் படிப்புகளில் ஒன்றாக ஆரம்பித்தோம். அதாவது மனை யியல், பொருளாதாரம், இசை. இசைப் பட்டப்படிப்பில், ஆன்மீகம், இலக்கியம், தமிழிசையில் வழிபாடு ஆகி யவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

## தமிழார்வம்

தாய்மொழித் தமிழ் அய்யா அவர்கள் வாழ்க்கையில் தலையாய இடத்தைப் பெற்றிருந்தது. அவர்கள் ஆற்றி யுள்ள சொற்பொழிவுகள், எழுதிய கடிதங்கள், கட்டு ரைகள், புத்தகங்கள், கல்விச் செயல்முறைகள் அனைத் திலும், தமிழ்த் தாய்க்கு மகுடம் அணிந்து மகிழ்ந்தார்கள். ஆங்கில மோகம் நிறைந்து ஆங்கில ஆட்சியின் விளை வுகளின் மத்தியில், அய்யா அவர்கள் தேனினும் இனிய செந்தமிழை வணங்கி வளர்த்தது ஒரு மகத்தான சாத னையாகும். தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவியது, தமிழ் கலைக்களஞ்சியத்தை 15 தொகுதிகளாகவும், தமிழில் குழந்தைகள் களஞ்சியத்தை 10 தொகுதிகளாகவும் வெளியிட்டது, திருக்குறள் ஆராய்ச்சி ஆகிய பல பெரும் பணிகளை நினைக்கும் பொழுது, எப்படித்தான் இதற்

கெல்லாம் நேரமும், ஆற்றலும் கிடைத்ததோ என்றுவியப் புண்டாகிறது. இத்தகைய தத்துவத்துடன், எங்களுடன் பேசும் பொழுதெல்லாம் மனதாரத் தூயத் தமிழில் பேசித் தமிழ் தெரியாத மாணவியருக்காக கொஞ்சம் ஆங்கிலத் திலும் பேசுவார்கள். கட்டிடங்களின் பெயர்களாகிய அன் னையருள், அப்பன் அருள், கலை மகள் இல்லம், திரு மகள் இல்லம், மலைமகள் இல்லம், திருச்சிற்றம்பலம் கலையரங்கு ஆகியவற்றில் தமிழ் ஓங்கி நிற்கிறது.

## அனைத்திலும் மிகச் சிறந்த உயர்வு (Excellence)

அய்யா அவர்கள், மாணவியர் படிப்பில், எழுத்தில், பேச்சில், நடத்தையில், மற்றவர்களுடன் பழகுவதில், உயர்ந்த தன்மை விளங்க வேண்டும் என்று எதிர்பார்ப் பார்கள். இப்பண்புகளுக்கு ஆசிரியர்களும், தலைவர் களும் முன் மாதிரிகளாக இருக்க வேண்டும் என்று சுட் டிக் காட்டுவார்கள். மற்றவர்களைப் போல் நாமும் சாதார ணமாக இருக்கலாமா? நாம் மிக உயர்ந்த காரியங் களைச் செய்வதற்காகப் பிறந்திருக்கிறோம் அல்லவா? ஆகவே, ‘உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்’ என்ற வள்ளுவர் வாக்கின்படி வாழுவோம்; செய்வதையெல் லாம் சிறப்பாகச் செய்வோம்'' என்ற அய்யா அவர்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற வகையில் எங்களால் முடிந்த வரையில் காரியங்களைச் செய்யும் பொழுது, அய்யா அவர்களுடைய மகிழ்ச்சி, எல்லையற்று வெளிப்படும்.

## சுமுகமான உறவுகள்

அனைவரிடமும் ஒத்துப் போக வேண்டும். ஆசிரியர் களுக்கும், மாணவியருக்குமுள்ள உறவு ஒரு குடும்பத்தி லுள்ளவர்களின் உறவைப் போல் அந்நியோன்யமாக

இருக்க வேண்டும். சமுதாயத்துடனும் சுமுகமான உறவு களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த அடிப் படையில் தான் எங்கள் விடுதிகளிலும், நிறுவனங் களிலும் அய்யா, அம்மா, அக்கா, அண்ணா என்ற வகை யில் தான் ஆசிரிய, மாணவியரின் உறவுகள் அமைந் துள்ளன. சமுதாயப் பணிக்குப் பாடத்திட்டத்திலேயே இடம் தந்து, அரும்பெரும் தொண்டுகளை மாணவியர் ஆற்றி வருகிறார்கள். அதனால் சமுதாயத்தில், நம் பல் கலைக்கழக மாணவியருக்கும், ஆசிரியருக்கும் தனி மதிப்பும் பாசமும் உள்ளன.

## காந்திய அடிப்படை

காந்திய அடிப்படையில் கல்வித் திட்டங்களும், வாழ்க்கை முறைகளும் அமையவும், தொழிலின் மேன் மையை மாணவியரும் ஆசிரியர்களும் உணரவும் அறி வுறுத்தினார்கள். விடுதிகளில் மாணவியர் அவரவர் அறைகளை அவரவரே சுத்தம் செய்து கொள்ள வேண் டும். அதற்காகத் துப்புரவு தொழிலாளர்களை அமர்த் துவது மானிடத் தன்மையல்ல என்ற காந்தியடிகளின் கொள்கையை அடிக்கடி எடுத்துக் காட்டுவார்கள்.

இத்தகைய நல்ல பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, கல்லூரி விடுதிகளும் ஆரம்பிக்கப்பட்டு, வேக மாக வளர்ந்தன. 1957—ம் ஆண்டு 45 மாணவியருட னும், 9 ஆசிரியருடனும் ஆரம்பித்த கல்லூரி, இன்று பல்கலைக்கழகமாகி 3,500 மாணவியர் (1000 பேர் விடுதியிலிருப்பவர்கள் உட்பட) 200 ஆசிரியர்களைக் கொண்டு அமரர் அய்யா அவர்களுடைய ஆசியோடு வெற்றி நடைபோட்டுக் கொண்டு வருகிறது.

# 10. கல்லூரியின் முதல் பத்தாண்டுகள் (1957–1967)

ஆண்டவனருளைக் கொண்டு 1957–ல் ஆரம்பித்த கல்லூரி, ஆண்டு தோறும் வேகமான வளர்ச்சியும், தெம்பும் பெற்றுப் புதுபொலிவுடன் நாடெங்கிலுமிருந்து மாணவியரை ஈர்த்தது.

முதல் பத்தாண்டுகளில் ஆரம்பித்து நடத்திய பாடத்திட்டங்களாவன :

| | |
|---|---|
| 1957–1958 | (PUC) புகுமுக வகுப்பு |
| 1958–1959 | (Undergraduate course) பட்டப்படிப்புகள் B.A. இந்தியன் இசை, B.A. பொருளாதாரம், B.Sc. மனையியல், இத்துடன் மத்திய அரசுக்காக முக்கிய சேவகிகள் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1959–1960 | முதுகலைப் படிப்பு M.Sc. மனையியல் குடும்ப நிர்வாகம் இதே ஆண்டில் குழந்தைப் பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டது. |
| 1960–1961 | B.Sc. பட்டப்படிப்பு மனையியல் உணவு உற்பத்தி; மனையியல் விரிவாக்கம். |

1961—1962 முதுகலைப் படிப்பு
M.Sc. உணவியல்.
(Food Science and Nutrition)

1963—1964 மாதாந்திர உணவியலிதழ் —
Indian Journal of Nutriton and Dietetics -
ஆரம்பிக்கப்பட்டது.

1965—1966 முதுகலைப் படிப்பு
M.Sc., குழந்தை வளர்ப்பியல்,
இதே ஆண்டில் சுவாமி
விவேகானந்தர் அரங்கு
திறக்கப்பட்டது.

1966—1967 Ph.D. மனையியல்
முனைவர் பட்டப்படிப்பு துவக்கம்.
பட்டப்படிப்புகள் —
B.Sc. கணிதவியல்,
B.A. ஆங்கில இலக்கியம்,
'கண்ணகி இல்லம்' என்ற
மனையியல் பயிற்சி இல்லம்
ஆரம்பிக்கப்பட்டது.

இதே காலக்கட்டத்தில் அப்பன் அருள், அன்னையருள் ஆகிய கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு வகுப்புகளுக்கு அளிக்கப்பட்டன. கலைமகள் இல்லம், திருமகள் இல்லம், மலைமகள் இல்லம் ஆகிய விடுதிகளும் கட்டி முடிக்கப்பட்டன.

பத்து ஆண்டுகளில் கல்லூரி மிகவும் வேகமாக வளர்ச்சியுற்றது. அழகிய கற்கட்டடங்கள் பல வேகமாக எழுந்தன. கட்டிட அமைப்பிலும் அய்யா அவர்கள் ஒரு தீர்க்கத்தரிசியாக விளங்கினார்கள். இறை வணக்கம் எவ்வாறு அவர்கள் உள்ளத்தில் குடி கொண்டிருந்ததோ அது போலவே, வளாகத்தின் நடுவில் கம்பீரத் தோற்றத்துடன் அமைந்திருந்த பிரார்த்தனைக் கூடத்தில் பொறிக்கப்

பட்டிருந்த அருள் வாக்குகளும் இடம் பெற்றிருந்தன. விலை அதிகமானாலும், கம்பீரமாக, நிலை பெற்றதாக, அழகாக இருப்பதற்குக் கற்கட்டிடங்களை எழுப்பி னார்கள். குழந்தைகள் விளையாடுவதற்காக நடுவில் தாராளமான இடத்தை விட்டுச் சுற்றிலும் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகளைத் திட்டமிட்டுக் கட்டி முடித் தார்கள். சிக்கனமாக ஆனால் சீராக, அகலமான வராந்தா இருக்கும் வண்ணம், கட்டிடங்களை அமைத்தார்கள். மாணவியரின் தேவைகள் — உணவு உண்ண, படிக்க, கோலம் போட, ஆடிப்பாட, விளையாட, நடிக்க வசதி யாக, ஒவ்வொரு அங்குலத்தையும் அளந்து பயன்படுத் தும் வகையில் கட்டிடங்களை அமைத்தார்கள். அவற்றில் எதிர்கால வளர்ச்சிக்கும் இடம் இருந்தது.

முதுகலைப் பட்டப்படிப்புக்கான ‘அன்னையருள்’ கட்டிடத்திற்கு இராம கிருஷ்ண மடத்தின் அந்நாளைய செயலர் (பின்னாள் தலைவர்) தவத்திரு சுவாமி மாத வானந்தா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் கட்டடத்தைக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் 10.8.1960 தேதியில் திறந்து வைத்தார்கள்.


மாணவியர் தங்கும் கலைமகள் இல்லம் என்ற முதல் விடுதியைத் துணைவேந்தர் டாக்டர் சர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் முன்னிலையில், மத்திய வேளாண் மைத்துறை அமைச்சர் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் அவர்கள் 11.3.1960 அன்று திறந்து வைத்தார்கள். ‘திரு மகள் இல்லம்’ என்ற இரண்டாம் விடுதியைக் குடியரசு துணைத்தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் 2.7.1963—ல் திறந்து வைத்தார்கள்.

மாணவியரின் உழைப்பும், பொருளும் ஓரளவுக்கு உதவி செய்ய, சுவாமி விவேகானந்தர் கலையரங்கு கட் டப்பட்டது. அதனைப் பெருந்தலைவர் திரு. கே. காம

ராஜ் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர்கள் 21.6.1965 அன்று திறந்து வைத்தார்கள்.

அய்யா அவர்களின் 60—ம் பிறந்த நாளை (மே 5, 1963) மிகவும் எளிய முறையில் கொண்டாடினோம். பிரார்த்தனையோடு எழை எளிய மாணவர்களுடன் அய்யா அவர்கள் உணவு உண்டு, பிறந்த நாள் வாழ்த் துக்களைப் பெற்றுக் கொண்டார்கள். 1964—ம் ஆண்டு அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வெளிநாடு களிலிருந்து வரும் நண்பர்கள், மாணவியர், ஆசிரியர் கள் தங்குவதற்காக ஒரு விருந்தினர் இல்லம், ‘சகோதரி நிவேதிதா இல்லம்’ என்னும் பெயரோடு அமைக்கப் பட்டது. அதனை 1970—ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19—ம் நாளன்று இந்தியாவிலுள்ள ராக்பெல்லர் பவுண்டேசனைச் சேர்ந்த டாக்டர் கை. பி. பேர்ட், என் பவர், மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் தலை மையில் திறந்து வைத்தார்கள். அங்கு வெளிநாடுகளி லிருந்து வருகின்றவர்கள் தங்கிப் பயிலுகின்றனர்; பணிபுரிகின்றனர்.

அய்யா அவர்கள் கல்விச் சேவையினைக் கோவை மாநகர மக்கள் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினார் கள். 61,000 ரூபாயுள்ள பணப்பை ஒன்றை, அறுபது ஆண்டு நினைவாக அன்றைய துணை குடியரசுத் தலை வர் டாக்டர் ஜாகீர் ஹுசேன் அவர்கள் மூலமாக வழங்கி னோம். அந்த பணத்தில், அய்யா அவர்கள், ரூ20,000—ஐ சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு, ‘இந்திய பண்பாடும், மதமும்’ என்ற தலைப்பில் தொடர் சொற் பொழிவு ஆண்டு தோறும் ஆற்றுவதற்கும்,ரூ.30,000—ஐ முதுகலைப் பட்டத்தில் சென்னை பல்கலைக்கழகத்தில் சத்துணவு, மனை நிர்வாகம் ஆகிய பாடங்களில் முதல் இடத்தைப் பெறும் இரு மாணவிகளுக்குத் தங்க பதக்கங்



முதலாவது குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள் குத்துவிளக்கேற்றி
அன்னையருள் கட்டிடத்தைத் திறந்து வைத்த போது



துணை குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேனுடன் சாரதாலயம் வளாகத்தில்

களாக வழங்கவும் அளித்தார்கள். மீதி தொகையைச் சகோதரி நிவேதிதா இல்லம் அமைப்பதற்காக ஏற்படும் செலவில் ஒரு பங்காகக் கொடுத்தார்கள்.

பாடங்களில் வளர்ச்சியுடன், மாணவியரின் பல் நோக்கு வளர்ச்சிகளும், அதாவது உடல், உள்ளம், உணர்ச்சி ஆகியவற்றை நற்செயல்களுக்காகத் தூண்டும் வண்ணம், கற்பிக்கும் முறைகளும், அணுகுமுறைகளும் அமைந்தன. அனைவருக்கும் போதுமான கல்விச் சாத னங்களும் மற்ற வசதிகளும் இருக்க வேண்டும் என்று அய்யா அவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டார்கள்.

## சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா (1963 ஜனவரி 21)


சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவை நன்றாக கொண்டாட வேண்டும் என்று அய்யா அவர்கள் சொன்ன போது, அதனை ஒரு தனிச்சிறப்பான கைங் கரியமாகச், சமர்ப்பணமாகச் செய்ய வேண்டும் என்று நானும் வளாகத்தில் உள்ள ஆசிரியைகளும் விரும் பினோம். அய்யா அவர்கள் ‘உங்களால் எவ்வளவு முடியு மோ அதைச் செய்யுங்கள்’ என்று ஊக்குவித்தார்கள். அப்போதிருந்த மாணவிகளுடனும், ஆசிரியர்களுடனும் கலந்தாலோசித்து நாங்கள் ஒருமுகமாக 101 மணி நேரம் தொடர்ந்து அகண்ட பஜனை, அர்ச்சனை, நடத்து வது என்று தீர்மானித்தோம். அய்யா அவர்கள் ‘‘இதை யோசித்துச் செய்யுங்கள். ஆரம்பித்து விட்டு நடுவில் விடு வது மிகவும் தவறானது. தன்னம்பிக்கையைக் குறைப் பது ஆகும்'' என்று எச்சரித்தார்கள். அவர்களுடைய எச்ச ரிக்கை எங்களை மேலும் ஊக்குவித்தது. 1962 ஆகஸ்டு, டிசம்பர் மாதம் அன்னை சாரதாமணியின் திதி பூஜை

அன்று, பிரார்த்தனைக்கு ஆயத்தம் செய்ய ஆரம்பித் தோம். சுவாமி விவேகானந்தருடைய நூற்றாண்டு விழா வுக்கு 1963–ம் ஆண்டு ஜனவரி 21–ம் தேதி அன்று 101 மணி நேரம் அகண்ட பஜனை செய்ய வேண்டிய கடமை களை வகுத்தோம்.

### கடமைகள்

பிரார்த்தனைக் கூடத்தின் சுத்தம், அலங்காரம், திரு விளக்கு ஏற்றி தீபம் காட்டல் மற்றும் பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், அர்ச்சனைக்குத் தேவையான பொருட் களைச் சேமித்தல், அர்ச்சனை செய்வதற்கு முன் வருப வர்களுக்கு நேரம் ஒதுக்கிடுதல், பிரசாதம் வழங்குதல், பஜனைக்குழு காலம் தவறாமல் வரக்கவனம் செலுத் துதல், அனைவரும் ஒழுங்காகக் கோயிலுக்குச் செல்ல வழி வகுத்தல், அமைதி காத்தல், எங்கும் தூய்மை, பஜனை பாடல்களைத் தேர்ந்தெடுத்து, நெறிப்படுத்தல், பற்பல மலர் அலங்காரங்களைச் செய்தல் என்ற பல கடமைகளுக்குக் குழுக்களை நியமித்தோம். ஒவ்வொரு குழுவுக்கும் கடமைகளை நிர்ணயித்து அட்டவணை தயாரித்துப், பல பிரிவுகளாக எடுத்து ஒரு தவறு கூட நடைபெறா வண்ணம் உறுதி செய்தோம்.

101 மணி நேரத்தை 45 நிமிடங்கள் பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் 50 பேரை நியமித்தோம். காலை 6.30 மணி, நற்பகல் 11.45 மணி, மாலை 6.30 மணி, இரவு 11.00 மணிக்கும் ஆரத்தியுடன் சிறப் புப் பூஜைகளுக்கு ஏற்பாடு செய்தோம். உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு ஒரு நாளைக்கு 4 முதல் 8 பகுதி களை அவர்களுக்கு ஏற்ற நேரத்திலும், மற்ற பகுதி களைக் கல்லூரி மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும், பெற்றோருக்கும் கல்லூரியின் வளர்ச்



மாணவியரை வாழ்த்தும் போது

சியை மதிக்கும் அன்பர்களுக்கும் என அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் கால நிர்ணயம் / அட்ட வணை செய்தோம். வித்யாலய மாணவர்களும், பிற பள்ளி மாணவிகளும், துறவியர்களும், பேரூர், காஞ்சி புரம் ஆகிய ஆலயங்களின் பெரியவர்கள், உள்ளூர் பெண்கள் சங்கங்களும் ஏற்பாட்டில் கலந்து கொண் டார்கள். மழலைப் பள்ளி, ஆரம்பப்பள்ளி முதல் முது கலை மாணவிகள் பல குழுக்களாக வகுத்துப் பிரார்த் தனை நடத்த ஏற்பாடு செய்தோம்.

கிறிஸ்தவ மதத்தினரும், புத்த மதத்தினரும், ஜைன மதத்தினரும், இஸ்லாம் மதத்தினரும், பல நாடுகளி லிருந்து வந்தவர்களும், (Ceylon, Brazil, Ethiopia, Canada) இந்த பஜனையில் கலந்து கொண்டார்கள். பஜனைப் பாடல் கள் வளாகம் எங்கும் ஒலித்தது.

ஆசிரியர்கள் மாணவிகளை ஊக்குவிக்குமாறு அய்யா அவர்கள், ''ஜோராகப் பண்ணுகிறீர்கள் அப்பா — எல்லாம் ஆண்டவன் அருள்'' என்று சொல்லுவார்கள். முடிந்த போதெல்லாம் பூஜைகளில் கலந்து கொள்வார் கள். வளாகத்தில் அனைவரும் 101 மணி பூஜை தங் களுக்கு என நினைத்துச் செயல் பட்டது, அய்யா அவர் கள் சிறப்பைக் காட்டியது. மாணவிகளுக்கு ஒற்றுமை — கட்டுக்கோப்புடன் திறமையாகத் திட்டமிட்டுச் செயலாற் றுதல், உழைப்பால் உயர்வு ஆகிய அரிய வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைத்தன. 19.1.1963 அன்று காலை 5 மணிக்கு ஆரம்பித்த பூஜையும், அகண்ட பஜனையும் 23.1.1963 காலை 10.30 மணிக்கு நிறைவு பெற்றது. ஆனால் அய்யா அவர்களும், நாங்கள் அனைவரும் மேலும் இரண்டு மணி நேரம் பஜனையைத் தொடர்ந் தோம். மனத்தில் நிறைவு, உள்ளத்தில் மகிழ்ச்சி தந்த இந்த அரிய பணி அன்று மட்டுமின்றி, என்றுமே

நிலைக்க வேண்டினோம். அன்று பேராசிரியர்கள் கோதா வரி கமலநாதன், சரஸ்வதி பட்ஜி, லஷ்மி சாந்தா, ஹேம பிரபா, மற்றும் விடுதியில் உள்ள அனைத்து ஆசிரி யைகளும் பயிற்சிக்காக பல மாநிலங்களிலிருந்தும் வந் திருந்த முக்கிய சேவகிகளும் நாளும், இரவென்றும் பக லென்றும் பாராமல் செய்து வந்த பணி போற்றத் தக்கது. இந்நிகழ்ச்சியின் சிறப்பு என்னவென்றால் பள்ளி, கல்லூரி வகுப்புகள் எப்போதும் போல் நடந்தன. வளா கமே ஒரு கோயிலாயிற்று. எங்குப் பார்த்தாலும் பக்தி பரவசமாகப் பாய்ந்தது. ''இந்த ஆண்டு மட்டும் சுவாமி களை நினைத்தால் போதாது. என்றுமே அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடித்தால் தான் நமக்கும் நல் லது; நாட்டுக்கும் நல்லது'' என்று நிறைவு விழாவுக்கு வருகை தந்த துணை குடியரசு தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் அய்யா அவர்களின் தலை மையை, எங்கள் வெற்றியை வெகுவாகப் பாராட்டினார் கள். ''உங்களுக்கு என் வாழ்த்துக்கள். இந்த வெற்றி உங்கள் கடுமையான உழைப்பினாலும், மனநிறைவான பக்தியாலும், அம்மா அவர்களின் வழி நடத்துதலினாலும் கிடைத்தது'' என்று அய்யா அவர்கள் சொன்னார்கள்.

## அயல்நாட்டுப் பயணம்

ஒரு அயல்நாட்டுப் பயணமாக 16 மாணவியர்களும், நானும், பர்மா (ரங்கூன்), தாய்லாந்து (பாங்காக்), ஹாங் காங், ஜப்பான் (Tokyo, Kyoto, Osaka) பிலிப்பைன்ஸ் (Manila), வியட்னாம் (Saigon) மலேஷியா, கோலாலம்பூர், சிங்கப்பூர் உட்பட 8 நாடுகளுக்குச் சென்று வந்தோம், அது ஒரு மகத்தான கல்விக் கலாச்சார அயல்நாட்டு அனுபவம்— வெற்றியாக அமைந்தது. இந்தப் பயணத்திற்காக அய்யா அவர்கள் செய்த உதவிகள் பல பல. வெளிநாட்டுறவு அமைச்சராக இருந்த திருமதி லக்ஷ்மி மேனன் அவர்

களைப் பல அயல்நாட்டு இந்திய தூதரகத்திற்கும் கடிதங்கள் எழுதி எங்களை வரவேற்பதற்கும், எங்களுக்கு உதவி செய்வதற்கும் ஏற்பாடு செய்தார்கள். அது விமரிசையாக நடந்தது.

கல்லூரியிலிருந்து, அமெரிக்க நாட்டின் ராக்பெல்லர் பௌண்டேஷன் உதவித் தொகையுடன் திருமதி உஷா சந்திரசேகர், செல்வி பி.எஸ். நிர்மலா (மூர்த்தி) ஆகியோரையும் USAID உதவியுடன் செல்வி லக்ஷ்மி சாந்தா, திருமதி கமலா ஆனந்தம், செல்வி ராஜி ஆகியோரையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் உதவியுடன் திருமதி பார்வதி ஈஸ்வரன், செல்வி சாரதாம்பாள், திருமதி ராஜேஸ்வரி ரோலன்ஸ் ஆகியோரையும் மேற்படிப்புக்காக அமெரிக்காவுக்கு அனுப்பினோம். அவர்கள் வெற்றியுடன் படித்து முடித்துத் திரும்பினார்கள். சில காலம் கல்லூரியில் வேலைப் பார்த்து விட்டுக் கமலாவும் சாரதாம்பாளும் அமெரிக்காவுக்கே திரும்பிவிட்டனர்.

உலக உணவு மகாநாட்டில் 1963—ஆம் ஆண்டு வாஷிங்டன் டி.ஸி—ல் கலந்து கொள்ளும் வாய்ப்பை மத்திய அரசு எனக்கு வழங்கியது. நம் அய்யா அவர்களும் 1964—ல் தலைவர்களுடைய பரிமாற்றம் என்ற திட்டத்தின் மூலம் அமெரிக்க நாட்டின், கௌரவ விருந்தினராகச் சென்று, வழியில் பல நாடுகளில் தங்கிப் பார்த்து வந்தார்கள். அந்தப் பயணத்திற்காக அய்யா அவர்கள் பல முன்னெச்சரிக்கைகள், ஏற்பாடுகளுடன் புறப்பட்டார்கள். அவர்கள் பார்த்த கல்வி நிலையங்களில், அன்டியோக் சமுதாயக் கல்லூரியும், பெரியா கல்லூரியும் அவர்கள் கவனத்தை மிகவும் கவர்ந்தன. என்னுடைய பல நண்பர்களை அமெரிக்காவில் சந்தித்து நான் அனுப்பிய அன்புப் பரிசுகளையும் அளித்து வந்தார்கள்.

அய்யா அவர்கள் வெளிநாடு சென்றிருந்த போது பாகிஸ்தான்—இந்தியா யுத்தம் மும்முரமாக இருந்தது. அதே சமயத்தில் பெரும் தலைவர் திரு காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தலைவராக இருந்தார்கள். ''காமராஜர் திட்டம்''' என்று அரசியல்வாதிகள் சிலர் பதவிகளை விட்டுக் கட்சியை வளர்க்க விலக வேண்டும் என்று ஆரம்பித்து, அதற்கு மாண்புமிகு லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் முதல் இலக்கானார்கள். செப்டம்பர் 1965—லிருந்து பிப்ரவரி 1966—ல் யுத்த நிதிக்கு அனை வரும் ஒரு நாளைய சம்பளத்தையும் தந்தோம். பெருந் தலைவர் திரு காமராஜர் கல்லூரிக்கு வந்த போது 1020 கிராம் தங்கமும், ஜவான்களுக்கு அன்பளிப்பும், ஆடை களும் கொடுத்தோம். அப்போது அவர்கள் அய்யா அவர் களை மிகவும் பாராட்டிப் பேசி (27.11.1966) ''வில்லுப் பாட்டின் மூலம் உங்கள் உணர்ச்சிகளைச் சிறப்பாக, நன்றாகக் காட்டினீர்கள். வெறும் பாட்டாக இல்லாமல் கருத்துடன் பாடினீர்கள், இவ்வாறு சிறப்பாக நடத்தி யமைக்கு மிக்க மகிழ்ச்சி. மேலும் உங்கள் செயல்கள் வெற்றியடையப் பிரார்த்திக்கிறேன்'' என்று மாணவி யரை வாழ்த்தினார்கள்.

கல்லூரியில் கட்டடங்களும் பெருகின. ஆண்டு தோறும் மாணவியரின் எண்ணிக்கையும் உயர்ந்தது. 1957—ல் 45 மாணவியராக இருந்த தொகை 1966—ல் 843 ஆக உயர்ந்தது. ஒன்பது ஆசிரியர்களு டன் ஆரம்பித்த நிலை 67 ஆசிரியராக வளர்ந்தது.

இந்தக் காலக் கட்டத்தில்தான் சென்னைப் பல் கலைக்கழக ஆட்சிக்குழுவில், 1966—ல், உறுப்பினரா வதற்கு முதன் முதலாக கல்லூரிகளில் 'கல்விக்குழு' (Academic Council) சார்பில் தேர்தலில் நான் நின்று, அமோக வெற்றியுடன் ஆட்சிக்குழு உறுப்பினரானேன். நான்

ஆட்சிக்குழுவுக்குப் போவதற்கு முன்பு, அய்யா அவர்கள் அரசின் நியமன உறுப்பினராக அந்த ஆட்சிக்குழுவில் ஆறு ஆண்டுகள் தீவிரமாகச் செயல்பட்டிருந்தார்கள். அவர்களுடைய முன்மாதிரி எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. தொடர்ந்து மூன்று வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் அதே தேர்தலில் நின்று 15 வருடங்கள் தொடர்ந்து ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்தேன். தேர்தலுக்காக அய்யா அவர்கள் பல பேருக்கு எனக்காகப் பரிந்துரை செய்து எழுதினார்கள். சென்னையில் தேர்தல் நடந்து ஓட்டு எண்ணும் போது, டாக்டர் குழந்தைவேல் தான் என் பிரதிநிதியாகக் கண்காணிப்பார். தேர்தலன்று ஓட்டு எண்ணிக்கை முடிந்ததும் அய்யா அவர்களுக்குத்தான் முதன் முதலாகத் தொலைப்பேசியில் வெற்றிச் செய்தியை சொல்லுவார். தேர்தலுக்காக என்னுடன் இரவும், பகலும் பயணம் செய்து கடுமையாக உழைத்த டாக்டர் கோதாவரி கமலநாதன், காலம் சென்ற டாக்டர் ஈடித் வேதநாயகம், டாக்டர் குழந்தைவேல், திருமதி சாந்தா ராஜன், (எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் பி.பி. ராஜனின் துணைவியார்) மாணவி, காலஞ் சென்ற சங்கரி, செல்வி சந்திரலேகா (இன்று ஜனதா தலைவர்) ஆகியோரை நான் மறக்கவே முடியாது.

ஆட்சிக் குழுவில் எடுத்துக் கொள்ளும் காரியங்களுக்குத் தகுந்த அறிவுரைகளை அய்யா அவர்கள் அவ்வப்போது தருவார்கள். அந்தப் பதினைந்து ஆண்டுகளில், துணைவேந்தர்கள் — டாக்டர் சர் லக்ஷ்மணசாமி முதலியார், திரு. என்.டி. சுந்தர வடிவேலு, டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, டாக்டர் ஜீ.ஆர். தாமோதரன், டாக்டர் எம். சாந்தப்பா காலத்தில், உயர் கல்வியில் பல மாற்றங்கள் கொண்டு வர உதவ முடிந்ததுடன், அவர்களுடைய பாராட்டுதல்களையும், பெற முடிந்தது. மேலும் 1951

முதல் 1981 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து மனையியல் பாடத்திட்டத் தலைவராக நான் இருந்தப்படியால் மனையியலுக்கு உண்மையான உருவத்தையும் விளக்கத்தையும் அளிக்க முடிந்ததுடன், பல கல்லூரிகள், மனையியலை ஆக்கப் பூர்வமாக ஆரம்பிக்க முடிந்தது. அய்யா அவர்கள் கொடுத்த ஊக்கத்தால் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் மனையியல் அமைப்பைப் பற்றிப் பல ஆய்வுகள் மேற் கொள்ள முடிந்தது. அவற்றின் விளைவாக மனை யியலைச் சமுதாயத்துடன் பிணைத்துச் செயல்படுத்த வழிமுறைகளைக் காண முடிந்தது. மனையியல் என்பது, வாழ்க்கைக்கு வேண்டியதனைத்தையும் தன்னகத்தே கொண்டது. வாழ்க்கை நலம், குழந்தை வளர்ப்பு, உணவு, உடை, உறைவிடம், பொருளாதாரம், அறிவியல், சமுதாயக் – குடும்ப உறவுகள், வாழ்க்கைத் தரம் ஆகிய வற்றை அறிவியல் அடிப்படையில் விளக்குவது. ஆகவே, இந்தத் துறைகளில் முனைவர் பட்டம் வரைக்கும் பாடத் திட்டங்களையும், ஆராய்ச்சித் திட்டங்களையும் வகுத்துக் கொடுக்க முடிந்தது. இன்று தமிழகத்திலே சுமார் 12 கல் லூரிகளிலும், மூன்று பல்கலைக்கழகங்களிலும், மனை யியல் துறை உள்ளது.

உணவியல் அறிவியல் மூலமாகச் சமுதாயத்திலுள்ள உணவுப் பற்றாக்குறை நோய்களைப் போக்க முடிகிறது. குழந்தை வளர்ப்புத் துறையின் மூலமாகப் பச்சிளங் குழந்தைப் பருவத்தில் முழு ஆரோக்கியம் பெறுவதற்கும், குழந்தைப் பருவ நோய்களைத் தவிர்க்கவும் முடிகிறது. அதுபோலவே வீட்டமைப்பு, அறை அலங்காரம் ஆகி யவை மனித நலத்தையும், பண்புகளையும் உயர்த்த உதவுகின்றன. அனைத்திற்கும் மேலாகக், கடவுள் பக்தி, தேசிய உணர்வு, ஒருமைப்பாடு, சுமுகமான குடும்ப, சமுதாய உணர்வுகளை வளர்க்க உதவுகிறது. இத்தகைய

வலிமை நிறைந்த பாடத்திட்டத்தை முழுமையாகவும் மற்ற பாடங்களுடன் இணைத்தும் பெருமளவில் சாதித்துள்ளது அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரி ஒன்றே என்று கூறுவது மிகையாகாது.

## பத்தாண்டு விழா

கல்லூரி ஆரம்பித்து பத்தாண்டுகள் நிறைவானதை மிக அருமையாகக் கொண்டாடினோம். மாணவியர் ஆலயத்தில் பத்து மணி நேரம் அகண்ட பூஜை செய்தனர். ஒரே நேரத்தில் சுமார் 300 மாணவியர் இருந்து படிக்கத்தக்க நூல்நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பத்து கிராமங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் சத்துணவு கூடத்திற்கு வேண்டிய பாத்திரங்கள் கொடுக்கப்பட்டன. சத்துணவு, மனை நிர்வாகம் ஆகிய இரு துறைகளிலும் கண்டு பிடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் துணை கொண்டு இரு புத்தகங்கள் வெளியிடப்பட்டன. கோயமுத்தூரில், இந்திய சத்துணவு கழகத்தின் கிளை தொடங்கப்பட்டது. வருடா வருடம் தகுதி வாய்ந்த மாணவியருக்கு உதவித் தொகை வழங்கப் பணம் முதலீடு செய்யப்பட்டது. இவற்றிற்கெல்லாம் பொருள் ஈட்டுவதற்கென்று, உலகப் புகழ் பெற்ற பாடகி திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இன்னிசை விருந்து அனைவரையும் ஆனந்தக் கடலில் ஆழ்த்தும் வண்ணம் நிகழ்ந்தது. அன்று அவர்கள் கணவர் திரு. சதாசிவம் அவர்கள், அய்யா அவர்களுடன் சுதந்திரப் போராட்டத்தில் தான் பங்கு கொண்டதைப் பற்றிக் கூறியவை எங்களை நெகிழ வைத்தது.

பத்தாண்டு பணிபுரிந்த ஆசிரியர் — ஊழியர்களுக்குக் கல்லூரிச் சின்னம் பொறித்த வெள்ளி தேக்கரண்டிகள் நினைவளிப்பாக வழங்கப்பட்டன.



டாக்டர் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி — திரு. சதாசிவம் தம்பதியருடன்

# 11. இரண்டாம் பத்தாண்டுகள் (1967–1977)

அடுத்த பத்தாண்டுகளில், அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில், தேசிய அளவில் பல கருத்தரங்குகள், மகாநாடுகள் நடத்தப்பட்டன. ஒரு அகில உலக மாநாடும் நடந்தேறியது. பல கருத்தரங்குகளின் பரிந்துரைகள் புத்தகங்களாகவும் வெளிவந்தன.

படிப்படியாகக் கல்லூரி வளர்ந்தது. இந்தப் பத்தாண்டுக் காலக் கட்டத்தில் ஆரம்பித்த பாடத் திட்டங்களாவன :

| | | |
|---|---|---|
| 1967–68 | B.Sc. பட்டப்படிப்பு | வேதியல் |
| 1968–69 | B.A. பட்டப்படிப்பு | தமிழ் இலக்கியம் |
| 1969–70 | B.Ed. முதுகலைப்படிப்பு | கல்வியியல் |
| " " | M.Sc. முதுகலைப்படிப்பு | ஆடையியல் |
| " " | M.Sc. முதுகலைப்படிப்பு | உயிர் வேதியியல் |
| " " | M.Sc. முதுகலைப்படிப்பு | மனையியல் விரிவாக்கம் |
| 1971–72 | B.Sc. பட்டப்படிப்பு | குழந்தைப் பள்ளி நிர்வாகம் |
| 1972–73 | B.Com. பட்டப்படிப்பு | வணிகவியல் |

| | | |
|---|---|---|
| 1973–74 | M.Ed. பட்டப்படிப்பு | முதுநிலை கல்வியியல் |
| | Diploma in Education | சான்றிதழ் கல்வியியல் |

| | | |
|---|---|---|
| வேலை வாய்ப்புகள் தரும் பட்டப்படிப்புகள் | B.Sc. | மனையியலில் வேலை வாய்ப்பு<br>உணவியல் – உணவு மருந்தியல்<br>குழந்தை–குடும்ப–சமுதாய நலம்<br>உணவு பாதுகாத்தல்<br>மனையலங்காரம் |

1974–75 பட்டமேற்படிப்பு – டிப்ளோமா
உணவியலும், உணவு மருத்துவமும்
இளங் குழந்தைக் கல்வி
உணவு பாதுகாப்பு
மனையலங்காரம்
குறுகிய B.Ed. பயிற்சி

இந்த ஆண்டில் விஞ்ஞானச் சுடர் என்ற
தமிழ்ப் பத்திரிக்கையும் உதயமாயிற்று
உணவியல் ஆய்வுக் கூடங்களும் திறக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1975–76 | M.Sc. | உணவு நிர்வாகம் |
| 1976–77 | M.A. | பொருளாதாரம் |
| | B.Sc. | உயிர் வேதியியல் |
| | M.Phil. | மனையியல் |
| | Ph.D. | உயிர் வேதியியல் |

மாணவியரின் எண்ணிக்கையிலும், 1966–ல் 823 ஆக இருந்தது, 1976–ல், 1,962 ஆகி, ஆசிரியரின் எண்ணிக்கையும் 122 ஆக உயர்ந்தது.

தேசிய அளவில் மனையியலுக்குத் தலைமையும் வர ஆரம்பித்தது, அகில இந்திய மனையியல் சங்கத்தின் தலைவியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். மனையியல் மாநாடு அவினாசிலிங்கம் வளாகத்தில், 1969—ல் நடை பெற்ற பொழுது அய்யா அவர்கள் கூறிய கருத்துக்க ளாவன:

''அனைத்து நாடுகளிலும், குறிப்பாக இந்தியா போன்ற வளரும் நாடுகளில், மனையியல் கல்வி, நாட் டின் முன்னேற்றத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சிறந்த குழந்தை வளர்ப்பு முறைகள், குடும்பத்தினருக்கு நல்ல பழக்க வழக்கங்கள், வளம் நிறைந்த மகிழ்ச்சி கரமான குடும்பங்களை ஆக்குவது, உற்பத்தியைப் பெருக்குவது, மனவலிமை, மற்றும் உடல்நலம் நிறைந்த புதிய சமுதாயத்தை உருவாக்குவது போன்ற பணிகளில் மனையியற் கல்வி மூலமாகப் பெண்ணினம் மிக உன் னதமான கடமையை ஆற்றி வருகிறது.''

ஒவ்வொரு புதுத்துறையை ஆரம்பிக்கும் போதும், அய்யா அவர்கள், ''இந்தத் துறையினால், மாணவச் சமு தாயத்திற்கும், மக்களுக்கும் என்ன பயன்? வெறும் பட்ட மளிப்பதற்காகவோ, கல்லூரியில் இத்தனைப் பட்டப் படிப்புகளுக்கு வழி செய்திருக்கிறோம் என்ற பெருமைக் காகவோ, அல்லது சிலருக்கு வேலை வாய்ப்புகள் தருவ தற்காகவோ ஆரம்பிப்பது உசிதமல்ல'' என்று, பொன்னை மாற்று பார்ப்பது போல், மனித நலம் என்ற உரை கல்லில் எங்கள் புது முயற்சிகளை உரைத்துப் பார்க்க யோசனை கூறுவார்கள். அவர்கள் காட்டிய வழியின் படியே, ஒவ்வொரு பாடத்திட்டத்திலும், சமுதாய நலஞ் சார்புள்ள பகுதிகளைச் சேர்த்திருக்கிறோம். பின்னர், டாக்டர் மால்கம் ஆதிசேசுஷயா அவர்கள் சென்னைப் பல் கலைக்கழகத்தின் துணைவேந்தராகிப் பல புது மாறுதல்

களைக் கொண்டு வந்த பொழுது, இந்த அனுபவங்கள் மிகவும் உதவியாக இருந்தன. ஒவ்வொரு பாடத் திட்டத்திற்கும் குறிக்கோள்களைச் சிந்தித்து வரைய றுத்து, பாடங்களைச் சிறு பகுதிகளாக அமைத்து, ஒவ் வொரு பகுதிக்கும் எத்தனை மணி நேரம், அதாவது பாடம் கற்பிப்பதற்கும், செயல் முறைகளுக்கும், சமு தாயப் பணிக்கும் தர வேண்டும் என்று கணக்கிட்டு, அந்த பாடத்திற்காக ஒதுக்கிய மணிக்கணக்குக்கும், பாடத் திட்டத்தினா் போட்ட கணக்கும் ஒத்துப் போகிறதா என்று பாா்த்து முடிவு செய்வோம்.

நாடு தழுவிய அளவில், இந்தியா முழுவதும் துவக் கப்பட்ட உடனடியாகப் பயன்தரும் ஏ.என்.பி. (Applied Nutrition Programme - ANP) என்ற சத்துணவுத் திட்டம் அமலாக்கப்பட்டிருந்தது. 1962—ம் ஆண்டு தமிழ் நாட்டில் ஏழு வட்டாரங்களில் ஏ.என்.பி. துவக்கப்பட்டது. பிறகு படிப்படியாக 61 வட்டாரங்களில் செயல்பட்டது. ஏ.என்.பி.—யின் நோக்கம், கிராமங்களில் பால், முட்டை, காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்க மகளிருக்கு மானியமும் தொழில் நுட்பப் பயிற்சியும் தந்து, உற்பத் தியான பால், முட்டை, காய்கறிகளைக் கா்ப்பிணிகளுக் கும், பாலூட்டும் தாய்மாா்களுக்கும் பிறகு குழந்தைகளுக் கும் தருவது ஆகும். 1964—ம் ஆண்டில் அவினா சிலிங் கம் மனையியற் கல்லூரி, ஏ.என்.பி.—க்காக மாவட்ட அலுவலா்களையும் கிராம ஊழியா்களையும் பயிற்றுவிக் கும் நிலையமாக அரசால் தோ்ந்தெடுக்கப்பட்டது. 1968—ம் ஆண்டில் தமிழகத்திலுள்ள ஏ.என்.பி. ஊழி யரைப் பயிற்றுவிக்கும் ஆணை பிறந்தது. பல கட்டங் களில் நியமிக்கப்பட்டிருந்த அலுவலா்களைப் பயிற்று விக்க அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியை ஒரு பிராந்திய மையமாக மத்திய அரசும், ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிறுவனத்தினரும் தோ்ந்தெடுத்தனா்.

அந்தக் காலக் கட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல பணியாளருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

| பணியாளர்கள் | எண்ணிக்கை |
|---|---|
| பால சேவகிகள் | 155 |
| சுகாதார ஊழியர்கள் | 77 |
| முக்கிய சேவகிகள் | 186 |
| கிராம சேவகிகள் | 36 |
| மகளிர் மன்ற அமைப்பாளர்கள் | 3564 |
| மாவட்ட அலுவலர்கள் | 68 |
| சத்துணவுக் கூட சமையல்காரர்கள் | 40 |
| விரிவாக்க ஊழியர்கள் | 8 |
| பஞ்சாயத்து தலைவர்கள் | 495 |
| பள்ளி ஆசிரியர்கள் | 112 |

மேலும், பவானிசாகர் வட்டாரத்தின் ஏ.என்.பி. ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அங்கு அது எப்படிச் செயல்படுகிறது என்பதையும், அதை எவ்வளவு சிறப்பாக நடத்திக் காட்ட முடியும் என்பதையும் ஆராய்வதற்கு, மூன்று முதுகலைப் பட்டப்படிப்பு மாணவியர், ஒரு ஆசிரியருடன், நானும் தங்கி மூன்று மாத காலத்தில் பல ஆய்வுகள் நடத்தி, மாநில, மத்திய அரசுகளுக்கும், UNICEF—க்கும் அனுப்பிய முடிவுகள் பின்வருமாறு :

மூன்று கிராமங்கள் — ராஜன் நகர் (ஏ.என்.பி. திருத்தியமைக்கப்பட்ட கிராமம்) கொத்தமங்கலம் (ஏ.என்.பி. எப்போதும் போல் நடந்த கிராமம்), பசுவம் பாளையம் (ஏ.என்.பி. இல்லாத கிராமம்) தேர்ந்தெடுத்தோம். ராஜன் நகர் ஏ.என்.பி.—யைத் திருத்தியமைப்பதற்கு அதன் நடைமுறைகளைப் பார்வையிட்டோம். பின்னர், உணவு உற்பத்திக்கு நாள் தோறும் கணக்கு

வைத்து, அதன் விநியோகத்திற்கும் கணக்கு வைத்தோம். ஏ.என்.பி.யில் விளைந்த சத்துணவைப் பெறும் தாய்மார் குழந்தைகளின் வருகையைப் பதிவு செய்து கொண்டு அவர்களுக்கு உணவியற் கல்வியையும் அளித்தோம். இந்த முயற்சிகள் அனைத்தும் ஒருங்கே ஏ.என்.பி.யைச் சீர்ப்படுத்தின.

ஏ.என்.பி.—யியைச் சேர்ந்த கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், பச்சிளம் குழந்தைகள் ஆகியோரின் எடை, உயரம், இரத்தப் பரிசோதனை ஆகியவற்றைப் பார்த்ததில் ஏ.என்.பி. சீராக நடைபெற்ற ராஜன் நகரில் எல்லா அளவைகளும் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டபடி உயர்ந்து இருந்தன.

| | கர்பபிணியின் எடையில் உயர்வு கி.கி. | கர்ப்பிணியின் இரத்தத்தில் ஹீமோ குளோபின் அளவு 100 ம.கி. | பிறந்த குழந்தையின் எடை கி.கி. | பிறந்த குழந்தையின் நீளம் |
|---|---|---|---|---|
| ராஜன் நகர் | 4.6 | 76.00 | 3.15 | 50 |
| கொத்தமங்கலம் | 2.1 | 66.60 | 2.51 | 47 |
| பசுவம்பாளையம் | 2.0 | 60.03 | 2.50 | 46 |

ஆகவே, எங்களால் சீராக்கிச் செயல்பட்ட ANP கிராமத்தில் தாய்மாரின் சத்துணவு நிலை மிக உயர்ந்து இருந்தது. இந்த முடிவுகளைப் பெற்ற அரசும் UNICEF—ம் எங்களைப் பெரிதும் பாராட்டினதுடன், ஏ.என்.பி. செயல் முறைகளை எல்லா வட்டாரங்களிலும் திருத்தி யமைத்தனர். அய்யா அவர்கள் அடிக்கடி பவானிசா

கருக்கு வந்து மாணவியரையும், எங்களையும் ஊக்கு வித்தார்கள். அந்த வட்டாரத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர், திரு. ஏ.யு. சண்முகம் ஈடுபாட்டுடன் செய்த உதவி பெரிது. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், கலாச்சார நிறுவனம், முனைவர் டீன் லோ என்ற நிபுணரைக் கல்லூரிக்கு உணவியல் துறையில் உதவி செய்ய இங்கிலாந்து நாட்டிலிருந்து அனுப்பித் தந்தது. அவர்கள் ஏ.என்.பி.—யில் சிறப்பாகப் பணியாற்றினார்கள். அவர்களுடைய எளிய வாழ்க்கையும், சைவ உணவும், சேவையுணர்ச்சியும் அய்யா அவர்களைக் கவர்ந்தன. அவர்களும் எல்லையற்ற அன்புடன் அய்யா அவர்களுடன் பழகிப் பல அறிவியல் குறிப்புகளையும் அளித்தார்கள்.

இந்த மிகப் பெரிய சாதனையில் அக்காலத்தில் UNICEF ஆலோசகராக இருந்த டான் பேரிஸ் (Don Faris) — கனடா நாட்டைச் சேர்ந்தவர் — பேருதவியாக இருந்ததுடன் அய்யா அவர்களிடம் பெரு நட்பு கொண்டு அவர்களின் பாசத்தையும் பாராட்டுதல்களையும் பெருமளவில் பெற்றுக் கொண்டார்கள். அய்யா அவர்கள் தன்னைக் காண வரும் வெளிநாட்டு அன்பர்களை மிகுந்த உவகையுடன் உபசரிப்பது வழக்கம். வருகிறவர்களுக்கு ஏதாவது தர வேண்டும் என்று நிறையப் புத்தகங்களை வாங்கி வைத்திருப்பார்கள். டாக்டர் ஃபேரிஸ்க்கும் சுவாமி விவேகானந்தரைப் பற்றி ரோமேய்ன் ரோலாண்ட்—ல் எழுதிய ஆங்கில புத்தகத்தை அளித்தார்கள்.

டாக்டர் டான் ஃபேரிஸ் ஓய்வு பெற்றுக் கனடாவுக்குத் திரும்பிச் சென்ற போதிலும், வாழ்நாள் முழுவதும் அவரும் அவருடைய துணைவியார் மேரியன் பேரிஸ் அவர்களும், முது வயோதிகத்திலும், அய்யா அவர்களுடனும் என்னுடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர் கனடாவுக்குத் திரும்பிய சுமார் 15 ஆண்டுகளுக்குப்



வெளிநாட்டு அறிஞர்களுடன் அய்யா அவர்கள்

பிறகு, அவருடைய புதல்வர்களில் ஒருவரான இளைய டான் பேரிஸ் ஹைதராபாத்திலுள்ள இக்ரிசாட் (ICRISAT) என்ற அகில உலக வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்குப் பணிபுரிய வந்திருந்தார். வந்தவுடன், தனது தந்தை, அய்யா அவர்களைப் பற்றி அவரிடம் சொல்லியிருந்த செய்திகளை மனத்தில் கொண்டு, கோவை வந்து எங்களைப் பார்த்துத் தம் தந்தை – தாயார் பெயரால் ரூ.24,632/–க்குக் கல்லூரிக்கு ஒரு மூலதனமாகத் (Endowment) தந்தார். அந்தத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியில் ஆண்டு தோறும் இரு முதுகலை பட்டப்படிப்பு மாணவியருக்கு உதவித் தொகை தருகிறோம்.

நான் இக்ரிசாட் என்ற அனைத்துலக வறட்சி பூமிப் பயிர் ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒரு அகில உலகக் கூட்டத்திற்குச் சென்றிருந்த போது, டானும் அவர் துணைவியார் டாவுன் அவர்களும் தங்கள் வீட்டிலேயே என்னைத் தங்கியிருக்கச் செய்து எனக்களித்த அன்பு உபசரிப்பை நான் மறக்க முடியாது. அதை அய்யா அவர்களிடம் சொன்ன போது, அகமகிழ்ந்தார்கள். ''நம்மிடம் வரும் வெளி நாட்டு நண்பர்களை நாமும் நன்கு உபசரிக்க வேண்டும்'' என்று அடிக்கடிக் கூறுவார்கள். ''வெளி நாட்டிற்குப் போகும் பொழுதெல்லாம் நிறைய அன்பளிப்புகளை இந்திய நாட்டுக் கைவினைப் பொருட்களைக் கொண்டு போய் வளமாக வழங்க வேண்டும்'' என்று அழுத்தமாகக் கூறுவார்கள்.

மீண்டும் 1996–ம் ஆண்டு, டான்–டாவுன் தம்பதியரை அவர்கள் வீட்டில், கனடாவிலுள்ள குயுபெக் மாநிலத்திலுள்ள விக்டோரியா நகரில் சந்தித்து அவர்களிடம் சில நாட்கள் தங்கும் வாய்ப்பு கிடைத்தது. டானுடைய தாயார், தகப்பனார் அமரராகி விட்டார்கள். அப்பொழுதும் அவர்கள், தாங்கள் அய்யா அவர்கள் மீதும்,


என் மீதும், நமது நாட்டின் மீதும் கொண்டிருந்த அன்பை எல்லையற்றுக் காட்டி உபசரித்துக் காண வேண்டிய இடங்களை நன்கு காட்டினார்கள். அதில் கண்கொள்ளா அழகுடன் பல மலர்ச் செடிகள், மரங்கள், கொடிகள் கொண்ட 'புச்சார்ட்' தோட்டமும் ஒன்று. இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்ட வனப்புடன் விளங்கிய அந்தப் பூங்கா வனத்தைக் கண்டு நான் துய்த்த இன்பம் பெரிது. அய்யா அவர்களுக்குப் பூக்கள் என்றால் மிக மிகப் பிரியம். பூந்தோட்டத்தில் உலாவுவது மிகுந்த விருப்பமுள்ள செயலாகும். புச்சார்ட் தோட்டத்தில் நாங்கள் உலாவிய பொழுது அய்யா அவர்களும் எங்களுடன் உலாவியதாக நினைவு எழுந்தது.

டான் தம்பதியருக்கு தமிழக உணவின் மேல் மிகுந்த பிரியம் உள்ளது. அவர்கள் வீட்டில் இட்லிப்பானை, தோசைக்கல், அம்மி முதலியன இருந்ததுடன், பல வகை மசாலைப் பொருட்களும் இருந்தன. அவற்றைப் பயன் படுத்திச் சாம்பார், ரசம், சட்னி, ஊத்தப்பம், இட்லி, பாயசம், முதலியன தயாரித்தோம். நான் எடுத்துச் சென் றிருந்த தோசைப்பொடி, புளிக்காய்ச்சல் ஆகியவற்றை ருசித்து உண்டார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவரும், பிரபல விவசாய விஞ்ஞானியுமான முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களிடமிருந்து, அய்யா அவர்களுக்கு என்னை ஓராண்டு காலம் டெல்லியில் அவர்கள் ஆரம்பிக்க இருக்கும் உணவியற் கல்வித் துறைக்குத் தலைவியாகப் பணிபுரிந்து உதவ வேண்டும் என்று வேண்டுகோள் வந்தது. அதை ஏற்றுக் கொள்வது நல்லது என்று அய்யா அவர்கள் நினைத்தபடியால், நானும் ஒத்துக் கொண் டேன். டெல்லி எனக்கும் புதிதல்ல. ஆனால் நான்

ஓராண்டு அங்கு, அப்பொழுது என்னுடன் இருந்த மூன்று வயது பேத்தி சாரதாவுடன் இருக்க வேண்டும். உதவி யாளராக இருந்த மரியா, காலம் சென்ற மீனா ஆகிய இருவரையும் அழைத்துச் செல்ல வேண்டும். டெல்லியில் வாடகை வீடு கிடைப்பதும் அரிது. என்னுடன் வருப வர்களுக்கு ஹிந்தி மொழியும் தெரியாது என்று பல பிரச்சனைகள் எழுந்தன. ஆயினும் தைரியத்துடன் செல்ல அய்யா அவர்கள் ஊக்கம் கொடுத்தார்கள். அன்பு நிறைந்த நண்பர் திருமதி லக்ஷிமி ரகுராமையா அவர் களின் வீட்டில் சில நாட்கள் தங்கினோம். அவர்கள் கணவர் வீட்டு வசதி அமைச்சராக இருந்தபடியால் கர்சன் ரோட்டிலுள்ள (இப்பொழுது கஸ்தூரிபா காந்தி ரோடு) அரசு அலுவலர்களுக்கு கட்டியிருந்த பல மாடிக் கட்டி டத்தில் ஐந்தாவது மாடியில் 501 என்ற இல்லத்தை வாங் கித் தந்தார்கள், உடனே அங்கு தொலைபேசியும் கிடைத் தது. வசதியாக வாழ்க்கை ஆரம்பித்தது. அய்யா அவர்கள் டெல்லிக்கு வரும் போதெல்லாம் எங்கள் இல்லத்துக்கு வந்து உணவருந்தி எங்களை உற்சாகப் படுத்திச் செல் வார்கள். கர்சன் ரோடு அப்பார்ட்மெண்ட் அவர்களுக்கு மிகவும் பிடித்தது. அதே மாதிரி நமது ஆசிரியைகளுக் கும், நம் கல்லூரிக்கருகில் 30 இல்லங்களை அமைத் தார்கள்.

முனைவர் எம்.எஸ் சுவாமிநாதன் பேரில் அய்யா அவர்களுக்கு நிறைந்த மதிப்பு இருந்தது. அவருடன் பணி புரிந்தது எனக்கும் பெரிய அனுபவமாக அமைந் தது. அந்த ஓராண்டு காலத்தில் நாடெங்கும் நிறுவப் பட்டிருந்த 21 விவசாயப் பல்கலைக்கழகங்களால் உண வியற் கல்வித்துறையை ஆரம்பிக்க முடிந்தது. அவற் றிற்கு ஆசிரியைகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட் டிலும் பயிற்சி அளித்ததும், இந்திய அறிவியல் சங்கத்தில் மனையியல் பிரிவைத் துவங்கியதும் நான் செய்ய முடிந்த முக்கிய செயல்களாகும்.



புச்சார்ட் தோட்டத்திலுள்ள அழகிய மலர்

ஏ.என்.பி—க்குப் பயிற்சி அளித்தது போலவே, அரசின் வட்டார வளர்ச்சித் திட்டத்தில் நியமித்திருந்த முக்கிய சேவகிகளுக்குப் (இப்பொழுது இவர்களைச் 'சமுதாய விரிவாக்க அலுவலர்' என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள்) பயிற்சி தரும் வாய்ப்பையும் அய்யா அவர்கள் வாங்கித் தந்தார்கள். இந்தப் பயிற்சியைத் தருவதன் மூலமாக, வட்டார வளர்ச்சித் திட்டத்தோடு கல்லூரி இணைய முடிந்தது. நாட்டில் பல நிலைகளை அறிய வழி கிடைத்தது. சமுதாயத்திலுள்ள வறுமை, நோய், அறியாமை ஆகிய வேதனைகளை அகற்றுவதற் காக வழி காண விழையும் ஆர்வத்தையும் கொடுத்தது. இந்த மாதிரி இணைப்புகளைத் தான் அய்யா அவர்கள் பெரிதும் விரும்பி எங்களை அவற்றில் பங்கு கொள்ள எப்பொழுதும் உற்சாகப்படுத்தி வந்தார்கள்.

இந்தப் பத்தாண்டு காலத்தில், அய்யா அவர்களின் எழுபதாம் பிறந்தநாள் விழாவும் வந்தது. அதனை ஆழ்ந்த பக்தியுடன் கொண்டாடினோம். வழக்கம் போல் அன்று காலை, நானும், விடுதி ஆசிரிய, மாணவியரும், பழங்கள் ஆகியவற்றையும், அய்யாவுக்கு பிரியமான பூக் களையும் எடுத்துக் கொண்டு வித்யாலயம் சென்று அய்யா அவர்களை வணங்கி, அவர்களுடைய ஆசியை யும் பெற்றோம்.

சமுதாயத்திற்கே தன்னை அர்ப்பணித்து நிறைவு பெற்ற அய்யா அவர்களின் 70—ம் ஆண்டு நிறைவு விழா வைச் சமுதாயத்திற்கே அர்ப்பணித்தோம். அவர்களுக்கு மிக்க விருப்பமாகிய நாட்டுப் பணியை மையமாகக் கொண்டு "Directions of National Development" என்ற ஆங்கிலப் புத்தகத்தை முனைவர் குழந்தைவேலும், நானும் தொகுத்து, மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அவர் களின் வாழ்த்துரையுடன் 1975—ல் பிரசுரித்து அய்யா

அவர்களுக்குச் சமர்ப்பித்தோம். இதற்கான செலவை வித்யாலய முன்னாள் மாணவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தொண்டுள்ளம் கொண்ட சிந்தனையாளர், விஞ்ஞானிகள் உட்பட 25 பேர் எழுதிய கட்டுரைகளைக் கொண்டது இவ்வரிய நூல். மேலும் எழுபது ஆண்டு விழாவுக்கென்று ஆசிரியைகள் தந்த அன்பளிப்பைக் கொண்டு, 'அவினாசிலிங்கம் மழலையர் பள்ளியை, 1973—ல் ஏழைக் குழந்தைகளுக்கு நல்ல கல்வியையும் பராமரிப்பையும் தருவதற்கு என்று உருவாக்கி தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

*வாழ்க்கையில் வெற்றிக்குத்*
*தன்னம்பிக்கையும் மன உறுதியும்*
*மிகவும் அவசியம்.*

*மனித வாழ்க்கையில் அனைத்திலும்*
*முக்கியமானது ஊக்கம். அது செல்வம்,*
*செல்வாக்கு, கல்வி முதலிய அனைத்தையும்*
*அளிக்க வல்லது.*

*— தி.சு. அவினாசிலிங்கம்*

# 12. மூன்றாம் பத்தாண்டுகள் (1977–1987)

இந்தப் பருவம் – 1977–1987 – அவினாசிலிங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் மிக முக்கியமான கட்டமாக பரிணமித்து விட்டது. மழலைப் பள்ளி முதல் முனைவர் பட்டப்படிப்பு வரை மலர்ந்ததும், சமுதாயத் தொடர்புடன் பல முயற்சிகளை மேற்கொண்டதும், கல்லூரிக்குப் பெரும் புகழைத் தேடித்தந்தன. இந்த பத்தாண்டுகளில் தொடங்கப்பட்டவை :

| | |
|---|---|
| 1977 | புதுநூல் நிலையம் திறப்பு |
| 1978–79 | தன்னாட்சி நிலை ஆரம்பம்<br>முச்சிறப்பு பாடங்கள் |
| மே 1979 | ஸ்ரீ அவினாசிலிங்கம் வேளாண்மை அறிவியல் நிலையம் |
| அக்டோபர் 2 1984 | ஸ்ரீ அவினாசிலிங்கம் சிரமிக் வித்யா பீத் (உழைப்போர் தொழில் கல்வி மையம்) |

ஏற்கனவே கற்பிக்கப்பட்டு வந்த பாடங்களுடன், உளவியல் (Psychology), தாவரவியல் (Botany), புள்ளியியல் (Statistics), இயற்பியல் (Physics)–ம் சேர்த்துப் பின்கண்ட முச்சிறப்புப் பாடத் தொடர்களை வழங்கினோம்.

## முச்சிறப்புப் பாட அமைப்புகள்

I. அ. மனையியல், தமிழ், பொருளாதாரம்
ஆ. மனையியல், ஆங்கிலம், பொருளாதாரம்
இ. மனையியல், இசை, தமிழ்
ஈ. மனையியல், இசை, பொருளாதாரம்
உ. மனையியல், உளவியல், ஆங்கிலம்
ஊ. மனையியல், உளவியல், பொருளாதாரம்

II. அ. மனை அலங்காரம், தமிழ், பொருளாதாரம்
ஆ. மனை அலங்காரம், ஆங்கிலம், பொருளாதாரம்
இ. மனை அலங்காரம், ஆங்கிலம், உளவியல்
ஈ. மனை அலங்காரம், இசை, பொருளாதாரம்
உ மனை அலங்காரம், உளவியல், பொருளாதாரம்

III. அ. குழந்தை குடும்பம் சமூக நலம், தமிழ், பொருளாதாரம்
ஆ. குழந்தை குடும்பம் சமூக நலம், தமிழ், வணிகவியல்
இ. குழந்தை குடும்பம் சமூக நலம், தமிழ், உளவியல்
ஈ. குழந்தை குடும்பம் சமூக நலம், ஆங்கிலம், பொருளாதாரம்
உ. குழந்தை குடும்பம் சமூக நலம், ஆங்கிலம், வணிகவியல்
ஊ. குழந்தை குடும்பம் சமூக நலம், ஆங்கிலம், உளவியல்
எ. குழந்தை குடும்பம் சமூக நலம், இசை, பொருளாதாரம்
ஏ. குழந்தை குடும்பம் சமூக நலம், இசை, உளவியல்
ஐ. குழந்தை குடும்பம் சமூக நலம், உளவியல், பொருளாதாரம்

IV. அ. உளவியல், வணிகவியல், பொருளாதாரம்

V. அ. மனையியல், தமிழ், தாவரவியல்
ஆ. மனையியல், ஆங்கிலம், விலங்கியல்
இ. மனையியல், ஆங்கிலம், தாவரவியல்
ஈ. மனையியல், கணிதவியல், இயற்பியல்
உ. மனையியல், வேதியியல், இயற்பியல்
ஊ. மனையியல், வேதியியல், விலங்கியல்
எ. மனையியல், தாவரவியல், கணிதவியல்
ஏ. மனையியல், தாவரவியல், விலங்கியல்
ஐ. மனையியல், தாவரவியல், உளவியல்

VI. அ. சத்துணவு—சிகிட்சை உணவு, வேதியியல், விலங்கியல்
ஆ. சத்துணவு—சிகிட்சை உணவு, வேதியியல், உயிர் வேதியியல்

VII. அ. உணவு பாதுகாத்தல், வேதியியல், தாவரவியல்

VIII. அ. வேதியியல், கணிதவியல், இயற்பியல்
ஆ. வேதியியல், தாவரவியல், விலங்கியல்
இ. வேதியியல், உயிர்வேதியியல், இயற்பியல்
ஈ. வேதியியல், உயிர்வேதியியல், விலங்கியல்

IX. அ. கணிதவியல், பொருளாதாரம், வணிகவியல்
ஆ. கணிதவியல், புள்ளியியல், இயற்பியல்
இ. கணிதவியல், புள்ளியியல், வணிகவியல்

X. அ. புள்ளியியல், பொருளாதாரம், உளவியல்

கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலை அளிக்கப் பல்கலைக்கழக மானியக்குழு முன் வந்தது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்தையும், தன்னிடமுள்ள கல்லூரிகளுக்கு எவ்வெவற்றிற்குத் தன்னாட்சி தரலாம் என்று பரிந்துரை செய்யும்படித் துணைவேந்தர்களைக் கேட்டிருந்தது. அதன்படிச் சென்னைப் பல்கலைக்கழகமும் தன்னைச் சார்ந்த கல்லூரிகளுக்கு, யார் யாருக்கு தன்னாட்சி வேண்டுமோ அவர்கள் மனு போடலாம் என்றும்,

மனுவில் தர வேண்டிய விபரங்கள் பற்றிய குறிப்பு களையும் அனுப்பியிருந்தது. அப்போது துணை வேந்தராக இருந்த அமரர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தரவேண்டும் என்ற குறிக்கோள் மீது காட்டிய அக்கரை மகத்தானது. அய்யா அவர்களும் இந்த அரிய வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். பல அறிவுரைகளையும், கோட்பாடுகளையும் தந்தார்கள். அவற்றையும், கடந்த அனுபவங்களையும் அடிப்படை யாகக் கொண்டு நானும் ஆசிரியர்களும் ஓராண்டு கால மாகப் பல கூட்டங்கள் கூட்டி ஆழமாக யோசனை செய்து முடிவுகளுக்கு வந்தோம். அவற்றை உள்ளடக்கி ஒரு பிரே ரனை எழுதித் தந்தோம். அய்யா அவர்கள் அதற்கு அழ காகப் பல திருத்தங்களைத் தந்தார்கள். அவற்றின் விளைவாகப் பின் கண்ட விபரங்கள் அடங்கிய எங்கள் மனுவை சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப் பினோம்.

*தன்னாட்சியை விழைவதன் நோக்கங்கள்*
*தன்னாட்சியில் செயல்படுத்த விரும்பும் மாற்றங்கள்*
*தன்னாட்சியில் கற்பிக்கப் போகும் பாடங்கள்*
*கற்பிப்பதில் (போதனா முறைகளில்)*
*மேற்கொள்ளப் போகும் மாறுதல்கள்*
*தேர்வுகளில் புகுத்தப் போகும் மாற்றங்கள்*
*மேற்கொள்ளப்போகும் ஆராய்ச்சிகள்; பிரசுரங்கள்*
*சமூக விரிவாக்கப் பணிகள் முதலியன.*

தன்னாட்சி நிலையில், நாங்கள் தர விரும்பிய உயர் கல்வியில், மாணவருடைய சிந்தனா சக்தியைத் தூண் டிப் பெருக்குவது ஒரு முக்கிய நோக்கமாகக் காட்டியிருந்

தோம். அவர்களுக்குப் பரவலான அறிவைத் தருவதற்காக முச்சிறப்புப் பாடத்திட்டம் கொடுப்பதென்றும் முடிவு செய்தோம். இத்தகைய அதிரடி மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன்பு, ஆழ்ந்த யோசனைகளுடன், முன் ஏற்பாடுகளும் எச்சரிக்கைகளும் நிறைய இருக்க வேண்டும் என்று அய்யா அவர்கள், என் வேகத்தை பற்றிக் கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருந்தார்கள். அவர்களுடைய யோசனைகளை நன்றியுடன் ஏற்றுக் கொண்டு அமைத்த திட்டங்களைச் சென்னைப் பல்கலைக்கழகமும், பல்கலைக் கழக மானியக் குழுவும், தமிழக அரசும் ஏற்றன. தன்னாட்சி நிலையை 1978–ம் ஆண்டு ஜூன் மாதம் துவங்கினோம். புரட்சித் தலைவர் தமிழக முதலமைச்சர், மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தன்னாட்சி நிலையை 19 ஜூலை 1978 அன்று குத்து விளக்கு ஏற்றி ஆக்கமுடன் ஆரம்பித்து வைத்தார்கள்.

தன்னாட்சித் திட்டத்தில் கல்லூரியே தேர்வுகளை நடத்தி முடிவுகளை வெளியிடும் வாய்ப்பு இருந்தபடியாலும், மற்றக் கல்லூரிகளிலுள்ள திட்டத்தைப் போல் அல்லாது, முச்சிறப்புப் பாடத்திட்டத்தை ஆரம்பித்ததாலும், கல்லூரி செயல்படும் நாட்களின் எண்ணிக்கையை ஆண்டுக்கு 180 என்பதற்கு பதிலாக 200 என்றும், அதற்கு மேல் 10–20 நாட்கள் தேர்வுகளுக்குத் தர வேண்டும் என்றும் முடிவு செய்தோம். அத்துடன் முதற்பகுதி ஆங்கிலம், இரண்டாம் பகுதி மொழிக்கு உள்ள நேரத்தையும் குறைத்தோம். உள்மதிப்பீட்டுக்கு 50 விழுக்காடு தருவதென்று தீர்மானித்தோம். அதற்காக ஒவ்வொரு மாதமும், தேர்வுக்கும், மற்ற அம்சங்களுக்கும் மதிப்பெண்கள் தருவது என்று முடிவு எடுத்தோம். உள் மதிப்பீட்டிற்குப் பின் கண்டபடி அமைத்தோம்.



நூலாசிரியரும், அய்யா அவர்களும்
புரட்சி தலைவர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடன்



புரட்சித்தலைவர் மாண்புமிகு திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் குத்துவிளக்கேற்றித் தன்னாட்சிக் கல்லூரி நிலையை ஆரம்பித்து வைத்த போது, அய்யா அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகமும் உடன் இருக்கிறார்கள்

## உள் மதிப்பீட்டின் விவரம்

| | பட்டப்படிப்பு – விழுக்காடு | |
|---|---|---|
| | இளங்கலை | முதுகலை |
| அறிவிக்கப்பட்ட தேர்வு | 20 | 10 |
| மாதத் தேர்வு | 20 | 10 |
| சுயவேலை (Assignment) | 20 | 20 |
| இறுதித் தேர்வு | 40 | 40 |
| கருத்தரங்கு | – | 20 |
| மொத்தம் | 100 | 100 |

இங்ஙனம் கணிக்கப்பட்ட உள்மதிப்பீடு 50 விழுக்காடும், வெளிமதிப்பீடு 50 விழுக்காடுமாகச் சேர்த்து முடிவு வெளியிடப்பட்டது.

இம் மாற்றங்களால் ஆசிரியருடைய வேலைப்பளு மிக மிக அதிகமாயிற்று. வேலை பளுவுக்கேற்ப, முச்சிறப்புப் பாடங்களுக்கு வேண்டிய ஆசிரியர்களையும், உள்மதிப்பீட்டு வேலைப்பளுவுக்குத் தேவைப்பட்ட ஆசிரியர்களையும், சென்னைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்து, அரசும் அனுமதித்தது. அதனால் புதிய பாடத்திட்டங்களையும், பயிற்சி முறைகளையும், போதிய வசதிகள், தளவாடங்களுடன் நிறைவேற்ற ஆரம்பித்தோம். வெற்றி நடையுடன் மூன்று ஆண்டுகள் கழிந்தன. உயர் கல்வி உலகம், எங்களது வியத்தகு சாதனைகளைக் கண்டு புகழ ஆரம்பித்தது.

ஆனால், பொறாமையால், மாணவர் நலத்தில் அக்கரையில்லாத சிலர், சில ஆசிரியர்களைத் தூண்டி, அவர்கள் மாணவியரைத் தூண்டி, ஒரு சிறு வேலை நிறுத்தமும் 1981–ம் ஆண்டு நடந்தது. இது எதிர்பாராதது. இந்த அனுபவத்தின் மூலமாக ஈடுபாடில்லாத சிலரைக் கண்டு கொள்ள முடிந்தது. நான் மனம் ஒடிந்தேன். ஆனால் அய்யா அவர்கள் தளரவோ, கோபப்படவோ இல்லை. ''ஆண்டவன் செயல்; நாம் செய்ய வேண்டியதைச் செய்வோம்'' என்று ஆக்கமுடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். பெற்றோர் தம் குழந்தைகளுக்குத் தகுந்த புத்திமதி சொல்லி அவர்களை அழைத்து வந்து விட்டார்கள். மீண்டும் கல்லூரி நன்கு செயல்பட்டது. வேலை நிறுத்தம் செய்த சில ஆசிரியர்களும் நிபந்தனையின்றி வேலைக்குத் திரும்பினார்கள்.

முதல் ஐந்தாண்டு தன்னாட்சி முடிந்து, அடுத்த ஐந்தாண்டுகளுக்குத் (1983–1988) தன்னாட்சிக்குப் பரிந்துரை செய்வது பாரதியார் பல்கலைக்கழகத்தின் கடமை. அப்பொழுதிருந்த துணைவேந்தர், ஆசிரியரின் வற்புறுத்துதலால் முச்சிறப்புப் பாடத்தைக் கைவிட்டு, பட்டப் படிப்பில், மொழிக்கும், ஆங்கிலத்திற்கும் முன்போல் அதிக நேரம் தர வேண்டுமென்று நிபந்தனை போட்டார். ''இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளுவதற்குப் பதில் தன்னாட்சியையே விட்டு விடலாமே'' என்று நான் அய்யா அவர்களிடம் ஆத்திரத்தில் சொன்னேன். ஆனால் அய்யா அவர்கள் பெரிய தூரப் பார்வையுடன், ''தன்னாட்சியை விட்டு விடக் கூடாது. இப்போது நிபந்தனையை ஏற்றுக் கொள்ளலாம்; பின்னால் பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொன்னார்கள். அப்படியே மீண்டும் பாடத்திட்டங்களை மாற்றி, அடுத்த ஐந்தாண்டு தன்னாட்சி 1983–ல் ஆரம்பித்து, தொடர்ந்து புது புது முறைகளோடு, ஆர்வத்தோடு கல்விப் பயணம் செவ்வனே நடந்தது.

## வெள்ளிவிழா

நாளும் வளர்ந்து வந்த மனையியற் கல்லூரி வெள்ளி விழாவினை நோக்கி வெற்றி நடை போட்டுக் கொண்டிருந்தது. அய்யா அவர்களின் சிறந்த தலைமையில் சீரிய நோக்கங்களோடு வளர்ந்து வந்த மனையியல் கல்லூரி வெள்ளி விழாவினை வெற்றிக் களிப்போடு 1983—ம் ஆண்டு கொண்டாடினோம். அவ்வமயம் 25 மணி நேரம் அகண்ட பஜனை நடத்தினோம். ‘‘மகளிர் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் பரப்புகின்றவர்கள்’’ என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றும் நடத்தினோம். இருபத்தைந்து ஆண்டு காலங்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகளைத் தொகுத்து அய்யா அவர்களின் அணிந்துரையுடன் வெளியிட்டோம். அன்னை சாரதா ஆரம்பப் பள்ளி 3 ஜூன் 1981 அன்று தொடங்கப்பட்டது. 16 செப்டம்பர் அன்று இரத்தப் பரிசோதனை கூடம் அமைக்கப்பட்டது. 25 கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு அவற்றின் முன்னேற்றத்திற்குப் பாடுபட உறுதி எடுத்துக் கொண்டோம். குழந்தைகள் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டது. அதை அந்நாள் மத்திய அமைச்சர் திருமதி மார்கிரேட் ஆல்வா அவர்கள் 18.10.1987 அன்று திறந்து வைத்தார்கள். திரு. அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களில் 25 ஆண்டு காலம் சேவை புரிந்த ஆசிரியர் ஊழியர் அனைவருக்கும் கல்லூரியின் சின்னம் பொறிக்கப்பட்ட தஞ்சாவூர் தட்டு வழங்கிச் சிறப்பித்தோம். வெள்ளி விழாவை முன்னிட்டு 25 தங்க பதக்கங்கள், அந்தந்தத் துறைகளில் முதல் இடம் பெறும் மாணவியருக்கு அளிப்பதற்காகப் பல அன்பர்கள் மூலதனம் கொடுத்தார்கள். அவர்கள் பெயராலேயே பதக்கங்கள் நிறுவப்பட்டு ஆண்டுதோறும் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படுகின்றன.

வெள்ளி விழாவின் நிறைவுக்கு குடியரசுத் தலைவர் மாண்புமிகு கியானி ஜெயில்சிங் சிறப்பு விருந்தினராக



1985—ல் குடியரசுத் தலைவர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் தம்பதியருடன்
டெல்லி ராஷ்டிரபதி பவனில்

வருகை தந்திருந்தார்கள். அவர்கள் வெள்ளி விழா பேருரை ஆற்றும் பொழுது கல்லூரியின் கிராமத் தொண்டைப் பாராட்டி, விரைவில் அதற்கு நிகர் பல்கலைக்கழக அந்தஸ்து வரவேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

வெள்ளி விழாவும், அய்யா அவர்களின் எண்பதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவும் ஒரே ஆண்டில் வந்தன. பலருக்கும் பயனளிக்கும் வண்ணம், 'ஆண்டவன் அருள்' என்னும் நூல் அய்யா அவர்களைத் தெரிந்தவர்கள், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதித் தந்த கட்டுரைகளால் உருவாகியது. அய்யா அவர்களோடு நெருங்கிப் பழகிய நண்பர்கள், அன்பர்கள், இராம கிருஷ்ண மடம், சாரதா மடத்தைச் சேர்ந்த சாதுக்கள், பணிபுரிந்த ஆசிரியர்கள் ஆகியோரின் கட்டுரைகள் அடங்கிய நூலாக இளைய தலைமுறையினருக்கு வழி காட்டியாக, அந்த நூல் அமைந்தது. இதனைக் குடியரசுத் துணைத் தலைவர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் செப்டம்பர் 1984 அன்று வெளியிட்டார்கள். அய்யா அவர்களின் உயர்ந்த பண்புகளைப் பாராட்டி, அவர்களின் நீண்ட ஆயுளுக்கும், விரைவில் அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரி, ஒரு பல்கலைக்கழகமாக மலர வேண்டுமென்ற தனது எதிர்பார்ப்பையும் தெரிவித்தார்கள்.

*ஒழுக்கமே மனிதனுடைய*
*உயர்ந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக*
*இருக்கிறது.*

*– தி.சு. அவினாசிலிங்கம்*

# 13. அவினாசிலிங்கம் நிகர் பல்கலைக்கழகம் உதயம்

இரண்டாவது முறையாக அளிக்கப்பட்ட தன்னாட்சிப் பருவக் காலத்தில், அடுத்து எந்த வளர்ச்சிக் கட்டத்திற்குப் போவது என்ற எண்ணம் எழுந்தது. அதற்காக ஆண்டவனிடம் வழிகாட்டும்படி பிரார்த்தனைகளைத் தொடர்ந்து ஏறெடுத்தோம். 1984–லிருந்தே சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள அனைவருடனும் அய்யா அவர்கள் ஆழமாகத் தீர்க்கமாக யோசனை செய்தார்கள். இவற்றின் விளைவாக, மத்திய அரசிடம் 'நிகர் பல்கலைக்கழக நிலை' வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலமாக மனு 1984–ல் அனுப்பப்பட்டது. அத்துடன் அவினாசிலிங்கம் கல்லூரி சார்ந்துள்ள பாரதியார் பல்கலைக்கழகமும், தமிழக அரசும் 'ஆட்சேபனை இல்லை' என்று எழுத வேண்டிய கட்டாயம் எழுந்தது. முன்பு முச்சிறப்புப் பாடத்தை நீக்க வேண்டுமென்று வற்புறுத்திய அதே துணைவேந்தர், இந்த 'ஆட்சேபனை இல்லை' என்ற கடிதத்தைத் தருவதற்கும், காரணமில்லாமல் இரண்டாண்டுகள் தாமதம் செய்தார். பல அரசியல் தலைவர்கள் அவரை நிர்ப்பந்தப் படுத்திய பிறகே குறிப்பிட்ட சான்றிதழை 1988–ல் மார்ச் மாதத்தில் அளித்தார். அதை உடனே டெல்லியில் உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தோம். இந்த முயற்சிக்குத் தமிழக அரசு பெரிதும் உதவியது.

பல்கலைக்கழக நிலை பெறுவதற்காக டெல்லிக்குச் சென்று கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மே 6, 1988—ல், அய்யா அவர்கள் பிறந்த நாளுக்கு அடுத்த நாளில், டெல்லிக்குப் புறப்பட்டோம். அப்போது அய்யா அவர்களுக்குச் சுதந்திர இந்தியாவைப் பற்றிய தியாகிகள் மாநாடும் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் டெல்லியில் நடந்தது. அதையும் கவனித்துக் கொண்டு, கல்வி அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களையும், செயலராக இருந்த திரு அனில் போர்டியா, ஐ.ஏ.எஸ். அவர்களையும், பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் முனைவர் யஷ்பால் அவர்களையும் செயலர், முனைவர் எஸ்.கே. கன்னா அவர்களையும் பலமுறை சந்தித்துக் காரியத்தை நிறைவேற்ற அளவில்லாத முயற்சி எடுக்க வேண்டியதாக இருந்தது. அவர்கள் எல்லோரும் அய்யா அவர்கள் மேல் தங்களுக்கு இருந்த பெரிய அன்பும், மரியாதையும் காரணமாகத் தயக்கமில்லாமல் உதவினர். அப்பொழுது பல்கலைக் கழக மானியக் குழுவில் உறுப்பினராக இருந்த முனைவர் மு. அறம் அவர்கள் அய்யா அவர்களுடன் பல்கலைக்கழக மானியக் குழுவின் அலுவலகத்திற்கு உவந்து வந்து உதவி செய்தார்கள். ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ஒரு சில ஆசிரியைகள் பல்கலைக் கழக நிலை வேண்டாம் என்று நினைத்து எதிர்த்த போதும், முனைவர் அறம் அந்த ஆசிரியைகளிடம் பேசி அவர்களுடைய ஐயப்பாடுகளை நீக்கித் தடையை அகற்றினார்கள். மத்திய அரசின் மனித மேம்பாட்டுத் துறையின் பண்பாட்டுச் செயலராக இருந்த முனைவர் வீரராகவன் அவர்களும் ஓயாது இந்த முயற்சியைக் கண்காணித்து எங்களுக்கு அவ்வப்போது விபரங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். தமிழக அரசின் கல்வித் துறை செயலராக இருந்த முனைவர் ஹெச்.பி.என். ஷெட்டி, ஐ.ஏ.எஸ். அவர்களிடமும் பேசிக் காரியங்களைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் செய்த உதவியும் பெரிது.

அய்யா அவர்களுக்கு உடல்நலம் சரியாக இல்லை. ஆயினும் வந்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் சோர்வையும் கவனிக்காமல் அலைந்தார்கள். ஒரு முறை அமைச்சர் மாண்புமிகு நரசிம்மராவ் அவர்களைச் சந்திக்க அய்யா அவர்கள் அவர் இல்லத்திற்கே சென்ற போது, அவர் பதறி வந்து, ''நீங்கள் ஏன் வந்தீர்கள்? நான் அல்லவா உங்களை வந்து பார்த்திருக்க வேண்டும்? — உங்களுக்குப் பல்கலைக்கழக நிலை கொடுக்கும் உத்தரவை இன்று பிறப்பித்து விட்டேன். உங்களுக்கல்லாமல் வேறு யாருக்கு இதைச் செய்வேன்'' என்று அவர் கூறியது மனத்தைத் தொட்டது. அய்யா அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. மாண்புமிகு அமைச்சருக்கு மனமாற நன்றி கூறினோம்.

இந்தப் பெரும் சாதனைக்காக குடியரசுத் தலைவர் மாண்புமிகு உயர்திரு வெங்கட்ராமன் அவர்கள் செய்த உதவிகளை என்றென்றும் மறக்க முடியாது. அய்யா அவர்கள் டெல்லிக்கு செல்லும் பொழுதெல்லாம் அவர்களுக்குக் குடியரசுத் தலைவர், தமது இல்லத்தில் விருந்து அளிக்காமல் இருந்ததே கிடையாது. அவர்கள் துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள், அய்யா அவர்களுக்கு விருப்பமான பால் பாயாசத்தை விருந்தில் தவறாமல் தருவார்கள்.

மாண்புமிகு கல்வி அமைச்சரின் உத்தரவு கிடைத்ததும் செயலர் திரு. அனில் போர்டியா அவர்களைச் சந்தித்து நடைமுறையில் கவனிக்க வேண்டிய குறிப்புகள், உத்தரவுகள், பெயர் மாற்றம் ஆகியவற்றையெல்லாம் தெரிந்து கொண்டோம். திரு. அனில் போர்டியா அவர்களின் தந்தை திரு. போர்டியா ஒரு ஆசிரியர். அய்யா அவர்களின் நண்பர். திரு அனில் போர்டியாவுக்கும் அய்யா அவர்கள் மேலும், என் பேரிலும் நிறைய மதிப்

பும் அன்பும் உண்டு. ஆகவே, அவர்கள் மனமார அனைத்து உதவிகளையும் செய்து, உத்தரவையும் பிறப் பித்தார்கள். இதற்கெல்லாம் அடிக்கோலிய பல்கலைக் கழக மானியக் குழுவின் முன்னாள் தலைவி முனைவர் மாதுரிஷா அவர்கள் உதவிக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகும். உத்தரவை வாங்கிக் கொண்டு ஆண்ட வனருளால் கோவைக்குத் திரும்பினோம். அதுவே அய்யா அவர்கள் டெல்லிக்குச் சென்ற கடைசிப் பயண மாகிவிட்டது. டெல்லியில் தங்கும் தமிழ்நாடு இல்லத்தில் அய்யா அவர்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகு வார்கள். அனைவரும் அய்யா அவர்களை அன்புடன் உபசரிப்பது வழக்கம். ஆகவே, 1988—க்குப் பிறகு நான் அங்குச் செல்லும் போது எல்லாம், ''அய்யா அவர்கள் ஏன் வரவில்லை?'' என்று கேட்பார்கள்.

கோவைக்குத் திரும்பியதும் கவனிக்க வேண்டிய செயல்களையெல்லாம், கவனமாகத் தாமதமின்றிக் கவனித்தோம். நிகர் பல்கலைக்கழக நிலை கிடைப்பதற் காக ஏற்கனவே சமர்ப்பித்திருந்த ஒப்பந்தத்தை மீண்டும் ஒரு முறை சரி பார்த்து பல்கலைக்கழகத்திற்காக நிறுவப் பட்ட புது 'அவினாசிலிங்கம்' சங்கம் ஜனவரி திங்கள் 20, 1988—ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது. அப் பொழுது பதிவுத் துறையின் செயலர்—ஆணையராக இருந்த திரு. ஆளுடையப்பிள்ளை அவர்கள் (இந்நாள் மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்) மிகுந்த அக்கரையுடன் தாமதமின்றியும் அனு மதி அளித்தார்கள். அவர்களுக்கு அய்யா அவர்கள் மேலி ருந்த பக்தி பெரிது.

அவினாசிலிங்கம் சங்கத்தின் முதல் கூட்டம் ஜூன் மாதத்தில் நடந்தது. பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்

காகப் பூர்வாங்க ஏற்பாடுகளைத் துவங்கினோம். அய்யா அவர்கள் சங்கத்தின் தலைவராக விளங்கினார்கள். என்னைத் துணைத்தலைவராக்கினார்கள். அவினாசி லிங்கம் அறக்கட்டளையின் செயலராக டாக்டர் குழந்தை வேலும், சங்கத்தின் செயலராகத் திரு. டி.கே. ஷண்மு கானந்தம், பி.ஏ.பி.எல். அவர்களும், பல்வேறு தேவை களைக் கவனித்தார்கள். இன்றும் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். அனைத்தும் வேகமாக நடைபெறுகிறதா என்று பார்க்க அய்யா அவர்கள் தினமும் கூட்டங்கள் நடத்தினார்கள்.

அவினாசிலிங்கம் அறக்கட்டளையின் இரண்டு கல் லூரிகளையும் — மனையியல், கல்வியியல் — 16 துறை களையும் இணைத்துப் பல்கலைக்கழகம் உருவாகியது. அதில் 4 புலன்கள் — மனையியல், அறிவியல், மானிட வியல், கல்வியியல் அமைக்கப்பட்டன. அவற்றிற்குரிய தலைவிகளும் அறிவிக்கப்பட்டனர். ஒவ்வொரு புலனுக்கு முரிய துறைகளும் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

## பல்கலைக்கழகத்தின் அமைப்பு

தலைவர்/வேந்தர் — அய்யா டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்கள்

துணைவேந்தர் — முனைவர் இராசம்மாள் பா. தேவதாஸ்

| புலன் — | மனையியல் | அறிவியல் | மானிடவியல் | கல்வியியல் |
|---|---|---|---|---|
| தலைவி — | முனைவர் லக்ஷ்மி சாந்தா ராஜகோபால் | முனைவர் நிர்மலா மூர்த்தி | முனைவர் ஜி. ராமதிலகம் | முனைவர் எம். சந்திரமணி |
| | | துறைகள் | | |
| | குடும்ப சமுதாய அறிவியல் | கணிதம் | தமிழ் | கல்வி உளவியல் |
| | குடும்ப நிர்வாகம் | இயற்பியல் | ஆங்கிலம் | கல்வித் தத்துவம்<br>கல்வி நிர்வாகம் |
| | உணவியல் | | | |
| | உணவு நிர்வாகம் | வேதியியல் | ஹிந்தி | மனையியல் கல்வி |
| | ஆடையியல் | உயிர் வேதியியல் | பிரெஞ்சு<br>இசை | இயற்கையின் கல்வி |
| | மனித மேம்பாடு | தாவரவியல் | பொருளாதாரம் | பொருளாதாரக் கல்வி |
| | குழந்தைகள் வளர்ப்பு | விலங்கியல் | உளவியல் | |
| | மனையியல் விரிவாக்கக் கல்வி | கணிப் பொறியியல் | வணிகவியல் | விழி இழந்தோருக்கு ஒருங்கிணைந்த கல்வி |

இந்த நான்கு புலன்களின் முதல் தலைவியரும் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்து பல்கலைக்கழகச் சூழ்நிலையை வலுவாய் உருவாக்கினார்கள். அதில் முனைவர் லக்ஷ்மி சாந்தா ராஜகோபாலுக்கு மூத்த புலன் முதல்வர் என்பதால் துணைவேந்தர் ஊரில் இல்லாத போது அவர்கள் பொறுப்புகளைக் கவனிப்பதற்கும் பல் கலைக்கழக இதர நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதற்கும் நேரம் கொடுக்க வேண்டியதாக இருந்தது. அதை அவர் கள் ஈடுபாட்டுடன் நிறைவேற்றினார்கள்.

பல்கலைக்கழகத்திற்கு வேண்டிய கல்விக்குழு, கல் வித் திட்டக்குழு, ஆட்சிக்குழு ஆகியவை முறைப்படியே அமைக்கப்பட்டன. பல்கலைக்கழகத்தின் முதலாண்டில், திடீர் மாற்றங்கள் செய்யாமல், ஏற்கனவே இருக்கும் பாடத்திட்டங்களையே இன்னும் சிறப்பாக நடத்துவ தென்று முடிவெடுத்தோம்.

அய்யா அவர்களை முதல் வேந்தராகக் கொண்ட பல் கலைக்கழகத்திற்கு அய்யா அவர்களே, 'வேந்தர்' என்ற அடிப்படையில் முதல் துணைவேந்தரை நியமிக்க வேண் டியது என்பது சட்டம். ஆரம்பம் முதல் அய்யா அவர் களுக்கு என்னைத் தான் முதல் துணை வேந்தராகவும், டாக்டர் குழந்தைவேல் அவர்களை முதல் பதிவாள ராகவும் நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தது. நாங்கள் இருவரும் அந்தப் பதவிக்கு வரை யறுக்கப்பட்ட வயதைத் தாண்டி விட்ட படியால், முதல் துணைவேந்தர், பதிவாளர் என்ற நிலையில் வயது வரம்பு கிடையாது என்ற முடிவு பல்கலைக்கழகச் சட்டங் களில் குறிக்கப்பட்டிருந்தது. ஆகவே, எங்களை அமர்த்து வதில் சிரமம் இல்லை. மேலும் மத்திய அரசின் செய லரிடம், துணைவேந்தரை நியமிக்க உத்தரவு தேவையாக

இருந்தது. அதைப் பற்றி அய்யா அவர்கள் திருவாளர் அனில் போர்டியாவுக்கு எழுதிய கடிதத்தில் பின் வரும் குறிப்புகள் இருந்தன :

"I propose to appoint Dr. Rajammal P. Devadas as the first Vice-Chancellor of our University. . . . . Her qualifications are outstanding :

a) She has the highest academic distinction from the Ohio State University, along with Ph.D. in Nutrition and M.A. in Education.

b) Soon after her return, she was invited to be the Dean of Home Science in the Baroda University.

c) While in that post, she was appointed as the Chief Home Economist in the Government of India in the Ministry of Agriculture, in which position she organised training of women in Nutrition and Rural Development throughout India.

d) The Avinashilingam Home Science College borrowed her services to organise the college and the present eminence of the college is due to her initiative, hard work and dedication.

e) She was recalled by the Ministry to become the Assistant Director-General (Nutrition) of the ICAR which position she occupied till her retirement from Government service.

f) She has held significant positions in national and international bodies like FAO, UNICEF, WHO, ICAR, ICMR, NCERT & UGC and NIPCED, has about 300 research papers and 37 books to her credit, is the Chief Editor of the Indian Journal of Nutrition; President of the Indian Nutrition Society and continues till today as Scientist – Member of the ICAR Governing Body.

g) She has represented India in about 30 international conferences in about 40 countries, she was awarded Rafi Ahmed Kidwai award for Nutrition in 1976.

We are indeed proud to appoint her as the first Vice-Chancellor of the Avinashilingam Institute for Home Science and Higher Education for Women – Deemed University. I am sure you will greatly welcome her appointment and send us your confirmation immediately to enable us to begin the University."

இதற்கு திரு. அனில் போர்டியா அனுப்பிய பதில் பின்வருமாறு :

सचिव
**SECRETARY**

Ministry of Human Resource Development
Department of Education
Government of India
New Delhi

D.O.No.F.9-20/84-U.3

20 June 1988

Dear Shri Avinashilingam,

Kindly refer to your letter of 15th June 1988 regarding the appointment of first Vice-Chancellor of Avinashilingam Institute for Home Science and Higher Education for Women.

In accordance with the provision contained in VI(2)(f) of the Bye-laws, the Chancellor is competent to appoint any person as the first Vice-Chancellor for such period as he deems fit. Dr. Rajammal Devadas also seems to us to be eminently suited for appointment as the first Vice-Chancellor of this deemed University and you may go ahead with her appointment for a period of five years.

With regards,

Yours sincerely,

( ANIL BORDIA )

Shri T.S. Avinashilingam
Chancellor
Avinashilingam Institute for
Home Science & Higher Educations for Women
Coimbatore - 641 043

இங்ஙனம் ஆரம்ப ஏற்பாடுகள் நிறைவுற்ற போது ஜூன் 24 அன்று அய்யா அவர்கள் ஆசிரியர் கூட்டத்தில் என்னை 'துணைவேந்தர் அம்மையார் அவர்களே'(Madam Vice-Chancellor) என்று விளித்து, அறிமுகப்படுத்தினார்கள். அய்யா அவர்களே என்னை முதன் முதலாக, 'துணை வேந்தர்' என்று அழைத்தது பெரும் பேறாக அமைந்தது. ஆண்டவன் அருளே அப்படிப் பாய்ந்தது.

ஒரு கல்லூரி, அதிலும், பல்கலைக்கழகத்தின் அடியில் இயங்கி வந்த ஒரு நிறுவனம், கல்லூரி நிலையிலிருந்து பல்கலைக்கழகமாக மாறுவதற்குப் பல மாறுதல்கள் வேண்டும். முதலாவதாக ஆசிரிய பெருமக்களும், மாணவியரும், பணியாளரும், பெற்றோர், பொது மக்களும் குறுகிய கல்லூரிப் பார்வையை விசாலமாக்க வேண்டும். எல்லையற்ற மேம்பாட்டை நாட வேண்டும். அதற்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டும் என்று உணர வேண்டும். மாணவியரிடம், மனப்பாடம் செய்து, கிளிப் பிள்ளை போல் சொல்லிக் கொடுத்ததை மாத்திரம் ஒப்புவிக்கும் பழக்கத்தை மாற்றிச் சிந்தித்து மனத்தை அகலப் படுத்தும் பாங்கை வளர்க்க வேண்டும். அதற்காக நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்த வழிகாட்ட வேண்டும். ஒருங்கிணைந்த பாடத்திட்டங்களையும், அவற்றைக் கற்பிக்கும் முறைகளையும் உருவாக்க வேண்டும். உயர் கல்வித் திட்டத்தில் ஆராய்ச்சிக்குப் பெரிய இடம் தர வேண்டும். ஆசிரியரே மாணவியரின் தேர்வுகளை நடத்தும் நேர்மையையும், திறமையையும், நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர் இந்த மாற்றங்களை எவ்வளவு விரைவில் செய்கிறார்களோ அவ்வளவு விரைவில் பல்கலைக்கழகம், பண்டித ஜவஹர்லால் நேரு பின் வருமாறு சுட்டிக் காட்டியபடி உயர்ந்த கல்விக் களமாகும்.

''ஒரு பல்கலைக்கழகம், மனித நேயம், விட்டுக் கொடுக்கும் மனநோக்கு, சிந்தனைத் திறன், கருத்துக் களில் துணிகரம், வாய்மையைத் தேடுதல் ஆகிய வற்றுக்கு நிலையான களமாக இருக்கிறது. மனித குலம் மேலும் உயர்ந்த குறிக்கோள்களை அடையும் பயணத்தில் நடை போடுகிறது. பல்கலைக்கழகங்கள் தங்கள் கடமை களை ஒழுங்காகச் செய்தால், நாடும், மக்களும் நலம் பெறுவார்கள்.''

பல ஆண்டுகளுக்கு முன்பே 1852—ல் ஜான் ஹென்றி நியூமன் என்ற ஆங்கில எழுத்தாளர், பல் கலைக்கழகத்தை வர்ணித்திருந்தது மெச்சத்தக்கது. சமய அடிப்படையில் இங்கிலாந்து நாட்டில் பல்கலைக் கழ கங்கள் நடந்து கொண்டிருந்த காலக் கட்டத்தில் உயர் கல்வியின் நோக்கம், சமயம் மட்டுமன்று, மனித உள் ளத்தை நெறிப்படுத்தும் பண்பாடாகும் என்று வரை யறுத்துப், ''பல்கலைக்கழகத்தில் கிடைக்கும் தாராளகல்வி ஒரு கிறித்துவனையோ, கத்தோலிக்கனையோ ஆக்கு வதல்ல, அதற்கு மாறாக, ஒரு உத்தமனை உருவாக்கு வதாகும், அப்படி உருவாக்கப்பட்ட மனிதனுக்குப் பண் படுத்தப்பட்ட அறிவு, எதையும் அனுபவிப்பதில் உயர்ந்த தன்மை, நேர்மையும் நியாயமும் நிறைந்த விருப்பு வெறுப்பற்ற உள்ளம், வாழ்க்கையில் பெருந்தன்மையுட னும் மரியாதையுடனும் நடந்து கொள்ளும் பாங்கு ஆகி யவை இயற்கையாகவே பெற்ற அறிவுடன் இணைத்த தன்மைகளாகும். இவைதான் ஒரு பல்கலைக் கழகத்தின் நோக்கங்களுமாகும்.''

'Liberal education makes not the Christian, nor the Catholic, but the gentleman. It is well to be a gentleman, it is well to have a cultivated intellect, a delicate taste, a candid, equitable, dispassionate mind, a noble and courteous bearing in the conduct of life - these are the connatural qualities of a large knowledge; they are the objects of a University;'

'Liberal education, viewed in itself, is simply the cultivation of the intellect as such; and it's object is nothing more or less than intellectual excellence'

– Newman, John Henry
The Idea of a University
(1852)

அய்யா அவர்கள் தன் பெயரைத் தாங்கியிருக்கும் புது பல்கலைக்கழகம், ஆன்மீகத்திலும், கல்வியிலும், பண்புகளிலும், ஆராய்ச்சிகளிலும், இந்திய பண்பாட்டிலும், உலகோர் புகழும் நிலையமாகத் திகழ வேண்டுமென்று விரும்பினார்கள். அடிக்கடி ஆசிரியர், மாணவியரிடம் தனது இந்த விருப்பங்களை எடுத்துரைத்தார்கள்.

அய்யா அவர்களுக்கு 1957–ம் ஆண்டிலேயே தன் பெயரைக் கல்லூரிக்கு வைக்கச் சிறிதும் விருப்பமில்லை. ஆண்டவன் பெயரால் அல்லது அன்னையின் பெயரால் அது விளங்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் நானும், அக்கா திருமதி லக்ஷ்மி மேனன் அவர்களும், அய்யா அவர்கள் குறிப்பிட்ட பெயர்களில் பல நிறுவனங்கள் உள்ளன. இந்தக் கல்லூரி அய்யா அவர்கள் பெயரைத் தான் என்றென்றும் தாங்க வேண்டும் என்று வற்புறுத்தினோம். அந்தத் திருநாமமே பல்கலைக்கழகத்திற்கும் முறைப்படி அமைந்துள்ளது. இது எவ்வளவு பொருத்தம்! அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் தான் இன்று அய்யா அவர்களின் வாரிசாக அவர்கள் காட்டிய வழியில் வெற்றிநடை போட்டுக் கொண்டு இருக்கிறது!

பல்கலைக்கழகத்திற்கு ஆரம்ப விழா நடத்துவதற்கு ஜனாதிபதி மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களையே அழைக்க வேண்டும் என்று அய்யா அவர்கள் விரும்பினார்கள். அவர்களும் எங்கள் அழைப்பை ஏற்

றுக் கொண்டு 29.8.1988 தேதியில், ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களுடன் வந்து, திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள் குத்து விளக்கேற்ற, ஜனாதிபதி பல்கலைக்கழகத்தை அய்யா அவர்கள் தலைமையில் திறந்து வைக்க ஆளுநர் முதல் பேருரையை ஆற்றினார்கள். இது மறக்க முடியாத, மகோன்னத சரித்திரம் படைத்த நிகழ்ச்சியாகும்.

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் சாரதாலய வளாகத்தில் அதற்கு இடம் போதவில்லையே என்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அருகிலுள்ள வனக்கல்லூரியிலிருந்த காலி இடத்தை கேட்டு, மத்திய அரசின் வனத்துறைக்கு மனு செய்திருந்தோம். மாநில அரசுக்கும் மனு கொடுத்தோம். ஆனால் மாநில அரசும், மத்திய அரசும் முடியவே முடியாது, என்று ஏராளமான எதிர்ப்புகள் கொண்ட கோப்பைப் பெரிதாக்கி வைத்திருந்தார்கள். அந்தக் கட்டத்தில், அந்நாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் செயலராக இருந்த திருமதி சர்லா கிரேவால், ஐ.ஏ.எஸ்., அவர்கள் எங்கள்பாலுள்ள பரிவால் பெருமுயற்சி செய்து கல்லூரிக்கு 2½ ஏக்கர் நிலத்தை வனத்துறையிலிருந்து வாங்கித் தந்தார்கள். அதற்கு அன்றைய மத்திய அரசின் வனத்துறை செயலர் திரு. டி.என். சேஷன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் (முன்னாள் தேர்தல் ஆணையர்) மாநில அரசின் வருவாய்த்துறை செயலர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ். அவர்களும் உதவி செய்தார்கள். அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஆண்டவனருளால் இந்த முயற்சி வெற்றியுடன் ஈடேறியது. அய்யா அவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள். திருமதி சர்லா கிரேவாலை எப்படிப் போற்றுவது? பல்கலைக்கழகத்தின் முதல் கௌரவ டாக்டர் பட்டத்தை அவர்களுக்கு அளித்து, எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.

புதிதாகக் கிடைத்த நிலம், குடியரசுத் தலைவர் ஆட்சி யின் போது ஆளுநர் தந்தது. ஆகவே, மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் ஆன போது அதற்குக் கிரயத்தை நிர்ணயித்துக் கையெழுத் திட்டுத் தந்தார்கள். இதற்குத் திரு. சி. சுப்ரமணியம் அவர் கள் உதவி செய்தார்கள். அவர்கள் இருவருக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

1988–1989 ஆம் ஆண்டு முழுவதும், பல்கலைக் கழகத்தில் செய்ய வேண்டிய முக்கிய மாறுதல்கள் குறித்துத் திட்டமிட ஏராளமான கூட்டங்களை ஆசிரியர் களுக்கு நடத்தினோம். அவற்றின் மூலமாக, அய்யா அவர்கள் ஆலோசனையுடன் பின்வரும் முடிவுகளை எடுத்தோம்:

1. முதல் பட்டத்திற்கான மூன்றாண்டு பாடத் திட் டத்தை இரு சிறப்புப் பாடங்கள், அவற்றுடன் சேர வேண்டிய இரண்டு உதவிப் பாடங்கள், 2 அடித் தளப் பாடங்கள், அதில் ஒன்று பொது அறிவு ஆக இருக்க வேண்டும்.
2. கேள்வித் தாட்களில் தன்மை முற்றிலும் மாற வேண்டும். Objective questions – சிறு விடை தரும் கேள்விகள், கட்டுரைக் கேள்விகள் ஆகிய மூன்று வகை கேள்விகளைச் சேர்க்க வேண்டும்.
3. தேர்வுகள் முழுவதும் உள்மதிப்பீடாக இருக்க வேண்டும். அதற்குக் கேள்வி வங்கிகளைத் (Question Banks) தயாரிக்க வேண்டும்.
4. இம்மாற்றங்களுக்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.
5. முனைவர் (Phd.D.) பட்டமில்லாத ஆசிரியர் அனை வரும் Ph.D. பட்டத்தை 5 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும்.
6. அயல்நாட்டு உறவுகள், ஒத்துழைப்புகளைப் பெற வேண்டும்.

7. நிறைய கருத்தரங்குகள் நடத்த வேண்டும், ஆசிரியர்கள் கருத்தரங்குகளுக்குப் போக வேண்டும்.
8. அனைத்திலும் கணிப்பொறியியல் முறைகளைக் கையாள வேண்டும்.
9. நூல் நிலையத்தை விரிவாக்குதல் முதலிடம் பெற வேண்டும்.

இந்த மாற்றங்களை மேற்கொண்டு வேகமாக செயல்பட்டோம். பேரளவு வெற்றியும் கண்டோம். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் பொழுதும் அய்யா அவர்கள் நிதானமாகத் திறமையுடன் செல்லும்படி கூறுவார்கள்.

பாடத்திட்டங்கள் அதிகரிக்க, அதிகரிக்க வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் அதிகமாகத் தேவைப்பட்டன. பல்கலைக்கழக மானியக் குழுவின் 8—வது ஐந்தாண்டு திட்டத்தின் உதவியுடன் பல வகுப்பறைகளையும் கட்டினோம். விடுதிகளையும் விரிவாக்கினோம். கூடுதல் ஆசிரியர்களையும் நியமித்தோம். ஆனால் வளரும் தேவைகளுக்கு ஏற்றபடி அவற்றை அதிகரிக்க முடியவில்லை.

எங்கள் முன்னாள் மாணவி, முனைவர் ரேவதி பாலகிருட்டிணன் காட்டிய ஆர்வத்தின் மூலம், அமெரிக்காவில் அவர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஆரிகன் மாநிலப் பல்கலைக் கழகத்துடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தோம். அதற்கு அமெரிக்க நாட்டின் செய்தி (USIA) நிறுவனம் முழுப் பொருளுதவியும் செய்ய முன் வந்தது. அதன் மூலமாக நமது பல்கலைக் கழகத்திலிருந்து ஏழு ஆசிரியர்கள், ஒவ்வொருவராக ஆரிகன் பல்கலைக் கழகத்தில் மூன்று மாதங்கள் தங்கிப் பலப்பல அனுபவங்கள் பெறுவதற்கும், அங்கிருந்து ஏழு பேராசிரியைகள் நம் பல்கலைக்கழகத்தில் இரண்டிரண்டு மாதங்கள் தங்கிச் செயல்படவும் முடிந்தது. இந்தப் பரிமாற்றம் மூன்று ஆண்டு காலத்தில் நிகழ்ந்தது (1992—1995). இதன்

மூலம் நூல் நிலையம் விரிவாக்கப்பட்டது. ஆய்வுக் கூடங்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. பாடத்திட் டங்கள், கற்பிக்கும் முறைகள் அனைத்திலும் முன் னேற்றம் காணப்பட்டது. இந்தத் தொடர்பின் மூலமாக ஆரிகன் சென்று வந்த ஆசிரியைகள், அந்தத் திட்டம் 1995—ல் முடிவுற்ற போதிலும், ஆய்வுகளிலும், ஆராய்ச் சிக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதிலும் நீடித்த ஈடுபாட்டைக் காட்டி வருகின்றனர். ஆரிகனிலிருந்தும் இது வரை மூன்று பேராசிரியர்கள் — காத்ரீன் மூமா, ஜெரால்டின் ஒல்சன், மார்ஜி வுட்பர்ன் ஆகியோர் மீண்டும் நம் பல் கலைக்கழகத்திற்கு வந்து முன்னேற்றங்களைக் கண்டு சென்று இருக்கின்றனர்.

ஆரிகன் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இங்கிலாந்து நாட்டில் சால்போர்ட் பல்கலைக்கழகத்துடன் உயிரியல், தாவரவியல் துறைகளுடன் சென்னை பிரிட்டிஷ் கவுன் சில் மூலமாகக் கூட்டு ஆராய்ச்சி செய்ய ஒரு ஒப்பந்த மும், கனடாவில் வெஸ்டர்ன் ஒன்டாரியோ பல்கலைக் கழகத்துடன் உடற்பயிற்சிக் கல்வி (Physical Education) —க்கும் ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில், ராயல் மெல் போர்ன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியுடன் புதிதாக ஆரம்பித்த சுற்றுலா — விருந்தோம்பல் நிர்வாக பாடத் திட்டத்திற்கும் ஒப்பந்தங்கள் ஏற்பட்டுச் செயல்பட்டு வரு கின்றன. மேலும் 1995ம் ஆண்டில் சீனாவில் பீஜிங் நகரில் Institute of Machinery Industry—உடனும், 1997ல், கன டாவில் ஒன்டாரியோ மாநிலத்தில் உள்ள காம்பிரியன் கல்லூரியுடனும் ஒப்பந்தங்கள் ஆகியுள்ளன. இவற்றால் மாணவியருக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு அகில உலகப் பார்வையும், மனப்போக்கும் ஏற்பட்டிருக்கின்றன.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'' என்ற மகாகவி பாரதி யாரின் அறைக் கூவலின்படி இந்தப் பரிமாற்றங்கள் நடந் திருக்கின்றன.

**பல்கலைக்கழமான பிறகு ஆரம்பிக்கப்பட்ட துறைகளும் பாடங்களும் பின்வருமாறு —**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | | பட்டப்படிப்பு | — கணிப்பொறியியல் | 1988–89 |
| 2. | | பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை படிப்பு | — கல்வியியல் | |
| | a. | ஒருங்கிணைந்த விழி இழந்தோர் மறுவாழ்வு கல்வி | | 1988–89 |
| | b. | கல்வியியல் எம்.ஃபில். | | 1988–89 |
| 3. | a. | முதுநிலை பட்டயப்படிப்பு | — கணிப்பொறி பயன் | 1989–90 |
| | b. | கல்வியியல் | — ஆராய்ச்சிப்படிப்பு | 1989–90 |
| 4. | a. | முதுநிலை படிப்பு | — மொழி இலக்கிய வளர்ச்சி (தமிழ், ஆங்கிலம்) | 1990–91 |
| | | முதுநிலை பட்டயப்படிப்பு | — முதுநிலை மனையியல் | 1990–91 |
| | b. | குடும்ப நிர்வாகம், அக அழகியல் மற்றும் சுற்றுப் புறச் சூழல் | | 1990–91 |
| | c. | முதுநிலை பட்டயப்படிப்பு | — முதுநிலை விஞ்ஞான மருத்துவ ஆராய்ச்சி படிப்பு | 1990–91 |
| | d. | முதுநிலை படிப்பு | — உயிர் அறிவியல் | 1990–91 |
| 5. | a. | முதுநிலை படிப்பு | — கணிப்பொறியியல் | 1991–92 |
| | b. | முதுநிலை படிப்பு | — கணிப்பொறி பயன் படிப்பு | 1991–92 |
| | c. | ஆராய்ச்சிப் படிப்பு | — 1989–90 உயிர் அறிவியல் | |

ஐந்து வருடச் சிறப்புப் படிப்பு

| | | | |
|---|---|---|---|
| a. | சிறப்புப் படிப்பு மற்றும் கணிதம் | | 1992–93 |
| b. | சிறப்புப் படிப்பு மற்றும் தாவரவியல் | | 1992–93 |
| c. | சிறப்புப் படிப்பு மற்றும் பௌதிகம் | | 1992–93 |
| d. | சிறப்புப் படிப்பு மற்றும் வேதியியல் | | 1992–93 |
| e. | முதுநிலை படிப்பு | – தொழிற்முறை ஹிந்தி | 1992–93 |
| | பட்டப்படிப்பு | – ஆடை ஆக்கம் | 1992–93 |
| | இளநிலை பட்டயப்படிப்பு | (இரண்டு வருடம்) – குழந்தைகள் கல்வி | 1992–93 |
| | பட்டப்படிப்பு | – உடல் நலக் கல்வி மற்றும் விளையாட்டுகள் | 1993–94 |
| | பட்டப்படிப்பு | – முதுநிலை ஐந்து வருட பொருளாதாரம் | 1994–95 |

வேலை வாய்ப்புத் தொழிற் கல்வி – பட்டப்படிப்பு 1994–95

1. உணவியலும், தரக்கட்டுப்பாடும்
2. நோய்க்காலங்களில் ஏற்படும் மாற்றங்களும், நோய்க்காலங்களுக்கேற்ற உணவும், உணவு மேலாண்மையும்
3. நடைமுறை ஆங்கிலம்
4. நடைமுறை ஹிந்தி
5. வரி நடைமுறை வழக்கம்
6. தொழிற் நிர்வாகம் (இரண்டு வருடம்) 1994–95
7. முதுநிலை – நிகழ்த்து கலை 1994–95

**வேலை வாய்ப்புத் தொழிற் கல்வி – பட்டப்படிப்பு**

| | | |
|---|---|---|
| 1. | உயிர் வேதியியல் | 1995–96 |
| 2. | முதுகலை வேதியியல் | 1995–96 |
| 3. | இளநிலை உருவாக்க வடிவமைப்பு | 1995–96 |

**வாழ்க்கை கல்வி (சுயநிதி – Self-financing)**

| | | |
|---|---|---|
| 1. | சுற்றுலா / விருந்தோம்பல் நிர்வாகம் | 1996–97 |
| 2. | பொறியியற் கல்வி – | |
| a. | கணிப்பொறியியல் | 1996–97 |
| b. | உயிர் மருத்துவம் | 1996–97 |
| c. | உணவு பாதுகாத்தல் மற்றும் பதப்படுத்துதல் | 1996–97 |
| d. | அச்சுத் தொழில் நுட்பம் | 1996–97 |

*எவரும் தமக்கு இருக்கும் குறைகளை நினைந்து வருந்திக் கொண்டிருக்க வேண்டாம். அறிவோடு கூடிய இடைவிடாத முயற்சியே அனைத்தையும் தரக்கூடியது.*

*நல்ல பழக்கங்களும், கட்டுப்பாடான வாழ்க்கையும், தூய்மையுமே சகலவிதமான சக்திகளுக்கும் அடிப்படை.*

*– தி.சு. அவினாசிலிங்கம்*

# 14. வாழ்க்கையில் நிறைவு

*''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்''*

என்ற திருக்குறள்படி அய்யா அவர்கள் ஆண்டவன ருளை நம்பித் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் அவர்கள் எண்ணியபடியே அமோகமாக நிறைவேறியதைக் கண்டு அளவில்லாத மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். 1989–ம் ஆண்டு முதல், இந்த நிறைவுள்ள நினைவுகளுடன் அடிக்கடி எங்களுக்குப் பல அறிவுரைகளைத் தந்து கொண்டே இருந்தார்கள். அவற்றில் சில :–

நம்முடைய வரவுக்குத் தக்கபடிச் செலவும், ஆற்ற லுக்கு ஏற்படி முயற்சிகளும் அமைய வேண்டும். காந்தி யடிகள் காட்டிய எளிய வாழ்க்கை முறைகளைப் பின் பற்ற வேண்டும். அவரவர் வேலையை – அதாவது துப் புரவு செய்தல், உணவு பரிமாறுதல், தத்தம் பாத்திரங் களைக் கழுவுதல் போன்ற பணிகளை அவரவரே செய்து அதன் மூலம் கடைநிலை பணியாட்கள் தொகையைக் குறைப்பது; அன்றன்று செய்ய வேண்டிய கடமைகளை ஒத்திப் போடாமல் அன்றன்றே செய்து முடிப்பது; எல்லா செலவுகளுக்கும் கணக்கு வைப்பது; சொந்த காரணத் திற்காகக் கல்லூரி பல்கலைக்கழக நேரத்தையோ, பணத் தையோ வசதிகளையோ பயன்படுத்தாமலிருப்பது; கடன் வாங்கவே கூடாது; கடன் கொடுக்கவும் கூடாது; ஏனெ னில் கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கொடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். ஆனால் அவர்கள் கொடுக் காமல் போய் விடலாம். ஆகவே, ஏதாவது பண உதவி யாருக்காவது செய்ய வேண்டும் என்று விரும்பினால்,

அதைக் கொடையாகவே கொடுத்து விடுவது நல்லது. யாரிடமும் எந்த நன்கொடையும் வாங்கக் கூடாது; வாங்கினால் நாம் செய்யத் தகாத, செய்ய முடியாத உதவியைப் பிரதிபலனாக, நன்கொடை கொடுத்தவர்கள் எதிர்பார்ப்பார்கள். அந்தச் சங்கடம் இல்லாமல் இருப் பதற்கு, நன்கொடை வாங்கும் செயல்களைத் தவிர்ப்பது நல்லது.

1989–லிருந்து அய்யா அவர்கள் உடல் நலம் சிறிது சிறிதாகக் குன்றி வந்தது. ஆயினும், உற்சாகம் குறை யாமல் எல்லா விபரங்களையும் தெரிந்து கொள்ளுவதற் கும், யோசனைகள் கூறுவதற்கும், பல்கலைக்கழகத்திற் குத் தினமும் வந்து எங்களை வாழ்த்துவதற்கும், சோர்வு படவே இல்லை. பல்கலைக்கழகத்திற்குத் தினமும்மாலை 4 மணியளவில் வருவதைக் கைவிடவேயில்லை. அவர் கள் வரும்போது ஆரம்பப் பள்ளி மாணவ மாணவியர் வீடு திரும்பும் நேரம். அவர்கள் அய்யா அவர்கள் காரைக் கண்டதும் குதித்து ஓடி வருவார்கள். அய்யா அவர்கள் குழந்தைகளைப் பார்த்து தடவிக் கொடுத்து தனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்கள். பல்கலைக்கழக வளா கத்தில் நடைபெறும் பூஜைகள், முக்கியமான கூட்டங் களிலும் கலந்து கொள்ளுவார்கள். பல்கலைக்கழகத் தின் வளர்ச்சியில் எல்லையற்ற ஆர்வம் காட்டினதுடன், அவ்வப்போது என்னைச் சற்று நிதானமாகச் செயல் படும்படி யோசனைகள் கூறுவார்கள்.

பல்கலைக்கழகம் நன்றாக நடைபெறுகிறது என்று அய்யா அவர்களிடம் அவர்களைப் பார்க்க வருகிறவர்கள் கூறும்பொழுது, அளவில்லாத பெருமையும் மகிழ்ச்சியும் அடைவார்கள். ''நான் மிகவும் கொடுத்து வைத்தவன் — எனக்குக் குருமகராஜ் அருளால் வாழ்க்கையில்

அனைத்தும் கைக்கூடியிருக்கிறது. நான் நிம்மதியாக ஆண்டவனிடம் செல்லத் தயாராக இருக்கிறேன்'' என்று அடிக்கடி கூறுவார்கள். ''எனக்கு வித்யாலயத்தைப் பற்றி யும், சாரதாலயத்தைப் பற்றியும் கவலை இல்லை. வித் யாலயத்தில் இராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சாதுக் கள் பொறுப்பேற்றுக் கொண்டு நன்றாக நடத்தி வரு கிறார்கள். சாரதாலயத்தில் நீங்களும் உங்கள் உடன் உழைப்பவர்களும் பிரமாதமாகக் காரியங்களை நடத்தி வருகிறீர்கள்'' என்று அளவிடற்கரிய மன திருப்தியுடன் சொல்லுவார்கள்.

சில பல்கலைக்கழகங்களில், துணைவேந்தருக்கும், பதிவாளருக்குமிடையே சுமுகமான உறவுகள் இருப்ப தில்லை என்பதை உணர்ந்த அய்யா அவர்கள், ''எனக்கு மிகுந்த சமாதானம்; நீங்களும், பதிவாளர் டாக்டர் குழந் தைவேலும் மிகவும் ஒற்றுமையுடன், மனத்தாங்கல் எது வும் இல்லாமல், உடன் பிறப்புகளைப் போல் செயல் படுவது'' என்று சொல்லி மகிழ்ச்சியடைவார்கள்.

எனக்கு உறுதுணையாக இருக்கும் முனைவர்கள் கோதாவரி கமலநாதன், சரோஜா பிரபாகரன், லக்ஷ்மி சாந்தாராஜகோபால், ஜனாபாய் கிரி, சந்திரமணி, இராம திலகம், நிர்மலா மூர்த்தி, உஷா சந்திரசேகர், பார்வதி ஈஸ்வரன், விஜயலக்ஷ்மி புருஷோத்தமன், என். ஜெயா, சீதாலக்ஷ்மி இன்னும் பலரை ''உங்கள் மந்திரிகள் என்ன சொல்லுகிறார்கள்?'' என்று ஏதாவது புது முயற்சியை மேற்கொண்டால் அதைப் பற்றிக் கேட்பார்கள். உடன் உழைப்பவர்களுடன் நடப்புகளை ஒளிவு மறைவில்லா மல் முழுவதுமாகப் பகிர்ந்து கொண்டு செயல்பட வேண் டும் என்பது அய்யா அவர்களின் உறுதியான கொள்கை.

நம் அறக்கட்டளையில், நமது நிறுவனங்களில் மிகுந்த ஈடுபாடுள்ள மகளிரை நியமிக்க வேண்டும்

என்று அய்யா அவர்கள் விரும்பி, முனைவர் கோதாவரி கமலநாதனையும், திருமதி தனலக்ஷ்மி பாலசுப்ரமணியத்தையும் (அய்யா அவர்களின் அண்ணன் மகள்) அறங்காவலர்களாக நியமித்தார்கள். அந்த அடிப்படையில், அய்யா அவர்களின் மறைவுக்குப் பின் முனைவர் இராதா தியாகராஜனையும், முனைவர் லக்ஷ்மி சாந்தாராஜா கோபாலையும், முனைவர் சரோஜா பிரபாகரனையும், முன்னாள் மாணவி சுகுணா லக்ஷ்மி நாராயணனையும் அறங்காவலர்களாகச் சேர்த்திருக்கிறோம். இவர்கள் ஏற்கனவே இருந்த காலி இடத்தையும், சின்னய்யா திரு தண்டபாணி செட்டியார், அய்யா அவர்கள், திருமதி லக்ஷ்மி மேனன் அவர்கள் மறைவுகளால் ஏற்பட்ட இடங்களை நிறைவு செய்திருக்கிறார்கள். சின்னய்யா திரு தண்டபாணி செட்டியார் அவர்கள் எங்கள் மேல் வைத்திருந்த அன்பும் பரிவும் எல்லையற்றது. நாளும், வலது கை செய்வதை இடது கை அறியாது போல, ஏதாவது உதவி செய்து கொண்டே இருப்பார்கள். அய்யா அவர்களைப் போலவே அவர்களும் பிரம்மச்சாரியாக இருந்து விட்டார்கள்.

கடைசி இரண்டு ஆண்டுகளில் அய்யா அவர்கள் நான் அடிக்கடி வெளியூருக்கோ, வெளிநாடுகளுக்கோ செல்வதை விரும்பவில்லை. ''என் வாழ்க்கை நிச்சயமில்லாதது, எப்பொழுது வேண்டுமானாலும் என்னை இறைவன் அழைத்துக் கொள்ளலாம். ஆகவே நீங்கள் ஊரிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்று தீர்க்கதரிசனமாகச் சொல்வார்கள். ''நான் போன பின்பு நீங்கள் யாரிடமும் பண உதவியையோ, வேறு எந்த உதவியையோ எதிர்பார்க்கலாகாது. அறக்கட்டளையில் உள்ள தொகையை விவேகத்துடன் செலவு செய்யுங்கள். எதிர்காலத்திற்கு உங்களுக்கு என்ன என்ன வழிவகைகள் வேண்டுமென்பதை இப்போதே சொல்லுங்கள்; அதற்கேற்ற ஏற்பாடுகளை நான் செய்து முடிக்க முடியும்'' என்று கூறுவார்கள். அப்பொழுதெல்லாம்

எனக்கு அதிக வருத்தமாக இருக்கும். அழுகையும் பீறிட்டுக் கொண்டு வரும். அய்யா அவர்கள் முன்னிலையில் என் துக்கத்தை அடக்கிக் கொண்டு, அவர்கள் நீண்ட நெடுங்காலம் வாழ வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக் கொள்ளுவேன். அய்யா அவர்கள் அறக்கட்டளையின் தலைவராகவும், பல்கலைக்கழகத்து வேந்தராகவும், செய்ய வேண்டிய எல்லாக் கடமைகளையும் முற்றும் முடியச் செய்து வைத்திருந்தார்கள். தன் சொந்தப் பணம் மிச்சம் மீதி இருந்ததைக் கூட எப்படி பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் ஒரு உயில் எழுதி என்னிடம் தந்திருந்தார்கள். அவர்கள் மறைவுக்குப் பின் எந்தச் சுணக்கமும், தயக்கமும் இல்லாமல் எல்லா செயல்களும் அவர்கள் இருந்து நடத்துகிற மாதிரியே நடைபெற்று வருகின்றன. அது பெரிய ஆசிர்வாதமாக இருக்கிறது.

அய்யா அவர்கள் எப்பொழுதும் வாழ்க்கை நெறிகளை நன்கு கடைப்பிடித்து வந்தார்கள். அதிகாலையில் எழுவது, குளிப்பது, பூஜை செய்வது, உடற்பயிற்சி, உணவு, உடை, வேலைத்திட்டம், கவனிக்க வேண்டிய குறிப்புகள் எல்லாவற்றிலும் முழுக் கவனம் செலுத்தி வாழ்வாங்கு வாழ்ந்தார்கள்.

அதிகப் பெலவீனப்பட்ட கடைசிக் காலத்திலும், குன்னூருக்குச் சென்று அங்குள்ள பாஸ்டியர் நிலையத்திலுள்ள மலர் வனத்தின் ஊடேயுள்ள விருந்தினர் விடுதியில் தங்கி மகிழ்ந்தார்கள். அங்கு உணவை நாங்களே பக்குவமாகத் தயார் செய்து தர வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் விரும்பியவாறே செய்து அவர்களுடைய பாராட்டுதல்களைப் பெற்றோம்.

அந்தக் காலத்தில் தினமும் காலை உணவுடனும், பிற்பகல் சிற்றுண்டியுடனும், நான் வித்யாலயத்திற்குச்

சென்று அய்யா அவர்களுக்கு உணவு பரிமாறி, அவர் களுடன் நானும் சாப்பிட்டு வந்தது, பெருவாய்ப்பாகவும், பேரானந்தமாகவும் இருந்தது. எங்கள் வருகைக்காக ஆவலுடன் குழந்தையைப் போல் காத்துக் கொண்டு இருப்பார்கள். நான் போக முடியாத நாட்களில் சாரதால யத்திலிருந்து சகோதரிகள் பிற்பகல் வித்யாலயத்திற்குச் சென்று அய்யா அவர்களுக்குச் சிற்றுண்டி கொடுத்து வரு வார்கள்.


அய்யா அவர்களை வித்யாலயத்தில் திரு குப்புசாமி யும், ராஜேந்திரனும், டிரைவர் சுப்பையனும் கண் இமை காப்பது போல் காத்து வந்தார்கள். டாக்டர் சீனிவாசன் கூடவே இருந்து கவனித்தவர், கடைசி நாளில் ஏனோ கிடைக்காமல் போய்விட்டது ஒரு அவல அனுபவமாகி விட்டது.

நவம்பர் 1991—ல் 16ம் தேதி மாலை பல்கலைக்கழ கத்திற்கு அழைத்துச் செல்லும்படிக் கேட்டார்கள். காரில் இருந்தபடியே புது கட்டடங்களைக் கட்டும் பணிகளைப் பார்த்து நிம்மதி பெற்றார்கள். அதுதான் அய்யா அவர்கள் சாரதாலயத்திற்கு வருகை தந்தது கடைசியாகி விட்டது. அடுத்த நாள் 17ம் தேதியன்று ஆஸ்துமாவின் மும்முரம் அதிகமாகியது. அன்று அய்யா அவர்களின் மருத்துவர் டாக்டர் சீனிவாசனை எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. அய்யா அவர்களின் டாக்டர் அருகிலில்லாத போது, மற்ற டாக்டர்கள் வந்து சிகிச்சை தர மறுத்து விட்டார்கள். அடுத்த நாள் காலையில் இராமகிருஷ்ணா மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றது தான் அவர்களின் கடைசி பயணமாகிவிட்டது. இராமகிருஷ்ணா மருத்துவ நிலை யத்தின் தலைவர் திரு ஆர். வெங்கடேசலு நாயுடு அவர் களும் மருத்துவர்களும் நன்கு கவனித்தார்கள். ஆனால் அய்யா அவர்கள், இம்மண்ணுலகை விட்டு, அவர்கள்

மிகவும் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த இறைவனுடைய இணையடி நிழலை அடையும் நாள் வந்துவிட்டது. நவம்பர் 21—ம் தேதி இரவு 9 மணியளவில் கார்த்திகை தீப ஒளியில் அய்யா அவர்கள் ஜோதியாகி இரண்டறக் கலந்து விட்டார்கள். அன்று அய்யா அவர்களின் சடலத்தை வித்யாலயத்திற்குக் கொண்டு வந்து, பொது மக்கள் பார்வைக்கு வைத்தார்கள். திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் புட்டபர்த்தியில் பகவான் சாய்பாபாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பிரதமர் நரசிம்மராவுடன் கலந்து கொண்டிருந்த சமயத்தில், அய்யா அவர்கள் காலமான செய்தியைக் கேட்டுத் தனி விமானத்தில் பறந்து வந்தார்கள்.

அன்று இரவு முழுவதும் பக்திப் பாடல்கள் பாடப் பெற்றன. எண்ணிலடங்கா பஜனை பாடல்களைப் பல்வேறு குழுக்கள் பாடித் தங்கள் சொல்லொண்ணாத் துயரத்தை ஆண்டவனிடம் கூறினர். வித்யாலய ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் பஜனையில் கலந்து கொண்டனர். சாரதாலய ஆசிரியர் மாணவியர் அனைவரும் அய்யா அவர்களின் இறுதி யாத்திரைக்கு முன்னர், நாள் முழுவதும், அய்யா அவர்களுக்குப் பிரியமான ஆன்மீகப் பாடல்களைப் பாடித், தன் கடமையை நன்கு முடித்து விட்டு, மனநிம்மதியோடு ஆண்டவனிடம் சென்றிருந்த அய்யா அவர்களைத் தரிசித்து ஆசி பெற்றனர்.

அய்யா அவர்கள் தினமும் வித்யாலயத்தில் காலையில் எந்த ஆலமரத்தடியில் அமர்ந்து தியானம் செய்து, தேவார திருவாசகம் முதலிய தெய்வத் திருநூல்களைப் படித்துச் சிற்றுண்டி அருந்துவார்களோ, அதே ஆல மரத்தருகில் மக்கள் வெள்ளம் சேர்ந்து, வித்யாலய மாணவர்களால் அக்னி தேவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டார்கள். உலக வாழ்வு என்ற ஒரு மாபெரும் அதிகாரத்தை



அருட்செல்வர் டாக்டர் என். மகாலிங்கம் அவர்களை அய்யா அவர்கள்
வாழ்த்திப் பேசிய போது. அருகில் டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்கள்

வெற்றியுடன் முடித்து, விண்ணுலகத்துக்குப் பறந்து போய், இறைவனிடம் சமாதானத்துடன் சங்கமமாகி விட்டார்கள்.

அய்யா அவர்கள் ஆண்டவனோடு இரண்டறக் கலந்து விட்டார்கள். எங்கள் உள்ளங்களிலெல்லாம் நீங்கா இடம் பெற்று விட்டார்கள். விண்ணுலக ஜோதியாய் எங்கள் உள்ளங்களின் ஒளி விளக்காய், சாரதாலய வளாகத்தின் அணையாத தீபமாய் குடிகொண்டு இருந்து, இறந்தும், இறவாமல், நாங்கள் செய்யும் பணிகளைக் கண்டு எங்களை வாழ்த்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

டாக்டர் ராதா தியாகராஜன் அவர்கள் அய்யா அவர்கள் மீது மிகவும் மதிப்பு வைத்திருப்பவர்கள். உடனே மதுரையில் இருந்து வித்யாலயத்திற்கு வந்து அய்யா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். அவர்கள் எங்கள் பல்கலைக்கழகத்தின் மீது கொண்டிருக்கும் அன்பின் காரணமாக எங்கள் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து பல்கலைக்கழக முன்னேற்றத்திற்குப் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி அதன் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாடு முழுவதிலிருந்து நேரிலும், தந்தி, தொலைபேசி, கடிதம் மூலம் பலர் அய்யா அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தார்கள். திருமதி லக்ஷ்மி மேனன், பெருந்தலைவர் ஜி.கே. மூப்பனார், மாண்புமிகு எம். அருணாச்சலம், மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், திரு எஸ்.ஆர். பொன்னுசாமி செட்டியார் (உடல் மிகவும் நலிந்த நிலையிலும்) திரு அன்னப்பூர்ணா தாமோதரசாமி நாயுடு, திரு லக்ஷ்மி நகை அதிபர் சுப்பையன், திருமதிகள் ருக்மணி தாமோதரன், ருக்மணி கோவிந்தராஜுலு, ஸ்ரீவள்ளி வரதராஜ் குறிப்பிடத்தக்க

வர்கள் ஆவார்கள். எல்லோர் உள்ளங்களிலும் அய்யா அவர்களின் அன்பு நிலைத்திருந்ததை உணர்ந்து ஆறுதலடைந்தோம். அய்யா அவர்கள் ஆன்மா சாந்தியடையச் சிறப்பு பஜனைகள் செய்தோம்.

தாங்கவொண்ணாத் துயரத்தில் உழன்று கொண்டிருந்த எங்களை அன்பர்கள் திரு என் மகாலிங்கம், திரு. ஆர். வெங்கடேசலு, திரு. சி. சுப்பிரமணியம், திருமதி ராதா தியாகராஜன் முதலியோரும், என்றும் இரவும் பகலும் பணி செய்து வந்த அன்புச் சகோதரிகளும் என்னைத் தேற்ற எடுத்துக் கொண்ட பரிவு என்னைத் தொட்டது. 100 வயதான என் தாயார் என்னிடம், ''அய்யா அவர்கள் இறந்து போகவில்லை, என்றும் நம்மிடம் இருந்து கொண்டே இருப்பார்கள்'' என்று ஆற்றினார்கள். எனக்கு வந்த ஆயிரக்கணக்கான ஆறுதல் கடிதங்களில் முதலாவது கிடைத்தது ராஷ்டிரபதி திரு. வெங்கட்ராமன் அவர்கள் கடிதம் தான். அது:

**PRESIDENT**
**REPUBLIC OF INDIA**

New Delhi
November 22, 1991

Dear Dr. Rajammal Devadas,

My wife and I have learnt with deep sorrow and a sense of personal loss, the news of Sri Avinashilingam's passing away. When I received his invitation to attend the Jubilee celebrations of the Vidyalaya something told me that I must respond to it without delay. Looking back I have a sense of deep satisfaction that it was given to me and to my wife to see Sri Avinashilingam before he was recalled by the Lord.

Persons like "Ayya" Avinashilingam never die; they merge with the Supreme. There is no doubt that from his place at the Feet of Sri Ramakrishna, Sri Vivekananda and Mahatma Gandhi, he will continue to shower his benediction on you, your associates and on the institutions that he set up and served with such matchless devotion for all time to come.

Yours sincerely,

( R. VENKATARAMAN )

Dr. (Mrs) Rajammal P. Devadas
Vice-Chancellor
Avinashilingam Institute for
Home Science & Higher Educations for Women
Coimbatore - 641 043

# 15. அய்யா அவர்கள் தொடர்ந்து வழி நடத்துவார்கள்

அய்யா அவர்கள் பேரிலுள்ள மதிப்பு நிறைந்த அன்பினால் பலர் எங்களிடம் அன்பு காட்டி வருகிறார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் ஆதரவு பெரிது. அருட்செல்வர் டாக்டர் என். மகாலிங்கம் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் அய்யா அவர்கள் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதுடன் எங்கள் வளாகத்திலிருக்கும் திருச்சிற்றம்பலம் கலையரங்கில் அனைவரும், இசையிலும், ஆன்மீகத்திலும் ஈடுபடத் தேவார திவ்விய பிரபந்த தமிழ் இசைக் கலைவிழாவினைப் பிரமாதமாக நடத்தி வருகிறார்கள். அத்தகைய நிகழ்ச்சிகளைத் தான் அய்யா அவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

அய்யா அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகளில், வித்யாலயச் சுவாமி தன்மயானந்தா அவர்கள் கலந்து கொண்டு எங்களை வாழ்த்தி வருகிறார்கள். ஆண்டு தோறும் அய்யா அவர்கள் பிறந்த நாளை மே மாதம் 5—ம் தேதி அவர்கள் மறைவுக்குப் பின்னால் ஆக்கபூர்வமான முறையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம். அய்யா அவர்களின் 80—ம் ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடிய நாங்கள் 90—ம் ஆண்டு பிறந்த நாள் விழாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கையில், அவர்களுடைய 89—ம் பிறந்த நாளை (1992) அவர்கள் இவ்வுலகில் இல்லாமல் கொண்டாடுவோம் என்று சிறிதும் நினைக்கவே இல்லை. அன்று தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண சிங் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்

தினார்கள். அய்யா அவர்களின் சேவையைப் பெரிதும் பாராட்டினார்கள்.

அய்யா அவர்களின் 90-ம் ஆண்டு பிறந்த நாளை (1993) முன்னிட்டு எங்கள் பல்கலைக்கழகமும், தமிழக அரசு திட்டக்குழுவும் இணைந்து 'உயர் கல்வியில் உயர்வை நோக்கி' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தினோம். பல்கலைக்கழக துணை வேந்தர்கள், கல்வியாளர்கள், தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள், தமிழக திட்டக்குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அய்யா அவர்களின் 91-ம் ஆண்டு பிறந்த நாள் (1994) விழாவில் முன்னாள் முதன்மைத் தேர்தல் ஆணையர் திரு சேஷன் அவர்கள் கலந்து கொண்டு 'மகளிரும், இந்திய குடியரசும்' என்னும் தலைப்பில் அரிய சொற் பொழிவாற்றினார்கள். அத்துடன் எங்கள் பல்கலைக் கழகமும் தமிழக அரசு உயர்கல்வி கழகமும் சேர்ந்து 'உயர் கல்வியில் மதிப்பெண்களுக்கு சமமான குறியீடுகள்' என்னும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கை நடத்தினோம்.

அய்யா அவர்களின் 92-ம் பிறந்த நாள் (1995) அன்று 'தரம் நிர்ணயமும் ஏற்பும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தினோம். பல்கலைக்கழக மானியக் குழுவினரும் இதில் கலந்து கொண்டார்கள்.

அய்யா அவர்களின் 93-ம் ஆண்டு பிறந்த நாளில் (1996) 'உயர் கல்வியில் விரிவாக்கப் பணிகள் - புது பார்வை' என்னும் தலைப்பில் தமிழக அரசின் உயர் கல்வி கழகமும் பல்கலைக்கழக மானிய குழுவும் இணைந்து ஒரு நாள் கருத்தரங்கு நடத்தினோம். தமிழக உயர்கல்வி கழகத்தின் துணைத் தலைவர் முனைவர்

சிட்டிபாபு தொடக்கவுரையாற்றினார்கள். செயலர் திரு. ஆளுடையப்பிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் நிறைவுரை ஆற்றினார்கள். மாலையில் அவினாசிலிங்கம் பல் கலைக்கழகத்தின் முன்னாள் மாணவியரின் கூட்டம் நடந் தது. முன்னாள் மாணவியர் அய்யா அவர்களின் சேவை யை நினைவு கூர்ந்தார்கள். மாலை 5.30 மணி அளவில் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள் நான் எழுதிய 'அய்யா அவர்கள் வாழ்க்கையில்' என்னும் தமிழ் நூலை யும், கவிதாஞ்சலி என்னும் கவிதைத் தொகுப்பையும், ஹிந்தி துறையினரால் எழுதப்பட்ட அபிநவ பாரத் என் னும் இதழையும் வெளியிட்டார்கள்.

அய்யா அவர்களின் நினைவு நாளாகிய நவம்பர் 21ம் தேதியை அய்யா அவர்கள் விரும்பும் வண்ணம் காலையில் 6 மணி முதல் 9 மணி வரை பஜனையோடு அனுசரிக்கிறோம். அன்று ஆசிரிய மாணவியர் அய்யா அவர்கள் விரும்பியவாறு கதராடை அணிந்து பயபக்தி யோடு பஜனை செய்து பயன் பெறுகிறார்கள். அய்யா அவர்களின் முதல் நினைவு நாளன்று (1992) இராம கிருஷ்ண மடத்தினைச் சேர்ந்த தவத்திரு சுவர்ணானந்தா மகராஜ் அவர்கள் தலைமை வகித்தார்கள். முதல் நினைவு நாள் சொற்பொழிவை ஜனவரி 3, 1993 அன்று, அன்றைய இந்திரா காந்தி திறந்த வெளிப் பல் கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் வழங்கினார்கள்.

இரண்டாம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவை அய்யா அவர்களின் இனிய நண்பரும், அவர்கள் மேல் பக்தி கொண்டவரும், இந்திய சத்துணவு கழகத்தின் தலைவருமான முனைவர் சி. கோபாலன் அவர்கள் அளித்தார்கள்.

அய்யா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை 21 நவம்பர் 1994 — அன்று அனுசரித்தோம். சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. அரங்கநாயகமும், சக்தி டெக்ஸ்டைல்ஸ் (நூல் ஆலை) பொள்ளாச்சி, நிர்வாக இயக்குனர் திரு. பி.கே. கிருஷ்ணராஜ வானவராயர் அவர்களும் உரையாற்றினார்கள்.

அய்யா அவர்களின் நான்காம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவைப் பிரபல விவசாய விஞ்ஞானியும், எம்.எஸ். சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவருமான முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் : ''நிலையான வளர்ச்சியில் மகளிர் பங்கு'' என்னும் தலைப்பில் வழங்கினார்கள். 'அய்யா அவர்கள் வாழ்க்கையில்' என்ற ஆங்கில நூலை அருட்செல்வர் முனைவர் நா. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

அய்யா அவர்களின் ஐந்தாம் ஆண்டு (1996) நினைவு நாளன்று கோவையிலுள்ள தியாகிகள் சிலரைப் பெருமைப் படுத்த எண்ணி அவர்களை அழைத்தோம். திரு. பி.எஸ். சின்னத்துரை, திரு. சோமசுந்தரம் உட்பட பதிமூன்று தியாகிகள் வந்திருந்து, அய்யா அவர்கள் நாட்டு விடுதலைக்குச் செய்த சேவைகளைப் பெரிதும் பாராட்டினார்கள். நாங்கள் தியாகிகளைச் சிறப்பு செய்யும் பாக்கியத்தையும் பெற்றோம்.

அய்யா அவர்கள் வாழ்க்கையில் எத்தனை எத்தனை உண்மைகளை, நெறிகளைக் கற்றுக் கொண்டோம்; ஆன்மீகமும், எளிமையும், உயர்ந்த கல்வியும் சேர்ந்து தரும் வலிமைக்கு, உலகில் எதுவும் நிகரில்லை என்பதைத் தெரிந்து கொண்டோம்.

வாழ்க்கையில் குறிக்கோள்களும், தரங்களும் மிக உயர்ந்தவையாக இருக்க வேண்டும். அவற்றையடைய

அயராது, கடுமையாக உழைக்க வேண்டும். அது ஆக்க முள்ள உழைப்பாக இருக்க வேண்டும். அதில் எல்லை யற்ற ஆனந்தம் அடைந்து, அந்த இன்பத்தை அனை வரும் பெற வழி காண வேண்டும். ஒவ்வொரு நாள் செய்யும் வேலையை முந்தின தினம் செய்ததை விட மேலும் சிறப்பாகச் செய்ய வேண்டும். செய்யும் வேலை யனைத்தும் நம்மைப் பரவசப்படுத்த வேண்டும். குழந் தைகளைப் பராமரிப்பதிலும் அவர்களுடன் விளையாடு வதிலும் அவர்கள் மகிழ்ச்சி நிறைந்த முகங்களைப் பார்ப்பதிலும், நிறைவு கிடைக்க வேண்டும். அது தான் ஆன்மீக வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

அவரவர் கடமைகளைக் கூடிய வரையிலும் முழுமை யாக நிறைவேற்றுவதில், வாழ்க்கையில் வெற்றி கிடைக் கிறது என்பதை அமரர் அய்யா அவர்கள் வாழ்ந்து காட்டி னார்கள். எந்த நிலையிலும், பெரிது, சிறிது என்றில் லாமல், சிறிதையும் பெரிதாகவே கருதிக் கடமையைச் செய்து உதாரணமானார்கள்.

வாழ்க்கையில் சாதனை பெற சில முயற்சிகள் தேவை. அவையாவன :

- அவரவர் ஆற்றலுக்குட்பட்ட குறிக்கோளும் அதை அடையும் வழியையும் தெளிவாக்கிக் கொள்ள வேண் டும்.
- எப்பொழுதும் நிமிர்ந்து நிற்க வேண்டும்;
- தைரியமாக இருக்க வேண்டும்;
- நமது தேவைகளையும் நம்முடன் இருப்பவர்கள் தேவைகளையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்;
- வாழ்க்கையில் துணிவு வேண்டும்; என்ன வேண்டும் என்று தீர்மானிக்கத் தைரியம், குறிக்கோளை அடை யச் செயலில் இறங்கத் தைரியம், தோல்வியுற்றாலும்

மீண்டும் மீண்டும் முயற்சி செய்யத் தைரியம் வேண்டும்;

- மற்றவர்கள் மேல் மதிப்பும் அனுதாபமும் காட்ட வேண்டும்; அவர்கள் நட்பைப் பெரிதாகக் கருதிப் பெற வேண்டும்;
- தன்னையே தானுணர்ந்த, தன்னை மதிப்பீடு செய்து, தன்னம்பிக்கையை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

*வெறும் உடல் பலம் மாத்திரம் இந்திய மக்களின் இலட்சியமாயிருக்க முடியாது. அத்துடன் ஆன்மீக பலமும் சேர்ந்திருக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் சக்தியை அவர்கள் தங்களுக்கெனப் பயன்படுத்திக் கொள்ளாமல், மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினைத்து, அவர்களுக்காகத் தமது உடைமை அனைத்தையும் தியாகம் செய்ய முன்வரவேண்டும்.*

*– தி.சு. அவினாசிலிங்கம்*

# 16. நினைவை நிரந்தரமாக்க . . .

அய்யா அவர்களைச், சாரதாலயத்தில் கல்வி பயிலத் தலைமுறை தலைமுறையாய் வந்து கொண்டிருக்கும் மாணவியர், அறிந்து, தெரிந்து, புரிந்து பணிந்து கொள்ளுமாறு அவர்களின் நினைவாகப் பின் காணும் செயல்களைத் திட்டமிட்டிருக்கிறோம்.

## 1. தியான மண்டபம்

அய்யா அவர்கள் வாழ்க்கையில், பிரார்த்தணை செய்வதும், தியானத்தில் ஆழ்ந்திருப்பதிலும் மிகவும் முக்கியமான செயல்களாக இருந்தன. எனவே, ஒரு நினைவு மண்டபம் அமைத்து அதன் நடுவிலே அய்யா அவர்களின் வெண்கலச் சிலையை, இருத்தி, மண்டபத்தில் அருள் வாக்குகளை எழுத ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த நினைவு மண்டபத்திற்கு 16.1.1993 தேதியன்று பாரதத்தின் துணைக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்கள், திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அன்புடன் அடிக்கோளிட்டார்கள். தமிழக கவர்னர் மேதகு பீஷ்ம நாராயண் சிங் விழாவில் கலந்து கொண்டார்கள். இந்த நினைவு மண்டபத்தில், பக்தி சொற்பொழிவுகள் நடத்துவதற்கும், பஜனைகள் செய்வதற்கும் தகுந்தவாறு அமைப்பதற்கும், 30 லட்சம் ரூபாய் ஆகும்.

Minister for Education in the State of Madras in free India. He is now a Member of the Indian Parliament in the House of People.

The several schools and colleges in the Sri Ramakrishna Mission Vidyalaya are devoted to the education of boys and this Trust was formed with the idea of the founding an institution for girls which will give them both general and professional education, besides, equaipping them for effectively discharging their duties in the home. The Home Science High School will provide Home Science and Fine Arts as its special subjects, in addition to languages, sciences and cultural subjects. The Home Science College will offer such essential subjects in home-making as nutrition, clothing, child development, phychology and home management as well as physical , chemical, biological and applied sciences, languags and cultural subjects. It will be affiliated to the University of Madras for the B.Sc. and B.A. degrees. One of the main functions of the institution will be Extension Work in surrounding villages both by contacting the women in their homes and by conducting short courses in food preservation, clothing construction, child care etc.

The Government of Madras have been pleased to allot a land of six acres of ground costing about Rs. 1,80,000 for this institution in the village of Sanganur, adjacent to the State Agricultural College near Coimbatore. And so the institution will have both the advantages of being near an agricultural college and a town. The Government of India have also made a generous grant of nearly Rs. 2,50,000, while the Trust will contribute a similar amount.

The High School has been started in June this year and it is proposed to open the College and Nursery School in a couple of years. A Basic School, Rural Dispensary and Extension Department will also have to be built up. The cost of the whole scheme is estimated to be about Rs. 12,00,000. It is hoped to raise the remaining amount through the help of the public and government.

A beautiful temple is being built for fulfilling the spiritual needs of the girls. The High School and College will be situated on either side of the temple.

The Home Science taught in this institution will be based on the ancient and sacred culture of India, interpreted according to the needs of the modern age. This institution is bound to play a significant role in the development of this great country. God willing, it is our prayer that this will develop into a temple of learning, where the spiritual gift of India will be combined with the progressive ideals of the West.

May 1, 1955.



ADU LIB
91908

நினைவு மண்டப திறப்பு விழாவின் போது :

*(இடமிருந்து வலமாக)* டாக்டர் க. குழந்தைவேல், திரு.டி.கே. சண்முகானந்தம், அருட் செல்வர் டாக்டர் என். மகாலிங்கம், மாண்புமிகு திரு.சி. சுப்ரமணியம், டாக்டர் ராஜம்மாள் பா. தேவதாஸ், டாக்டர் ராதா தியாகராஜன், ஆகியோர்.

## நூலாசிரியரைப் பற்றி . . .



முனைவர் திருமதி இராசம்மாள் பா. தேவதாஸ், தமிழகத்தின், கோயம்புத்தூரில் சிறப்பாக இயங்கும் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஆவார்கள். அவர்கள் உலகம் அறிந்த சத்துணவு விஞ்ஞானி. இவர் தனது பி.எச்.டி. பட்டத்தை 1950–ல் அமெரிக்காவிலுள்ள ஓஹையோ மாநிலப் பல்கலைக்கழகத்திலும், டி.எஸ்ஸி. பட்டத்தை 1978–ல் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்று, அவினாசிலிங்கம் நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராகவும் (1988–1994), ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் முதல்வராகவும் (1960–80), மத்திய அரசின் புதுதில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திலும் (1975–76) சத்துணவு உதவி இயக்குநராகவும், தலைமை மனை பொருளியலறிஞர் மற்றும் இணை இயக்குநராகவும் (மனையியல்), விரிவாக்க இயக்குநராகவும், உணவு மற்றும் விவசாயத்துறை, இந்திய அரசு (1955–61); பரோடாவிலுள்ள எம்.எஸ். பல்கலைக்கழகத்தில் முதன்மையர் மற்றும் மனையியல் பேராசிரியராகவும், மனையியல் புலம், புதுதில்லி மத்திய அரசின் செவிலியர் கல்லூரியின் உணவியல் பேராசிரியராகவும் (1951–53) பணியாற்றியுள்ளார்கள். தேசிய, மற்றும் பன்னாட்டு அமைப்

புகளில், ஆலோசனை வழங்கும் பதவிகளை வகித்து வருகிறார்கள். நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 250 கட்டுரைகளையும், 40 புத்தகங்களையும் வெளியிட்டு இருப்பதோடு, உலகத்தின் பல பாகங்களில் பயணம் செய்துள்ளார்கள். தேசிய, பன்னாட்டு விருதுகள் பல பெற்றுள்ளார்கள். அவற்றுள் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது, பல்கலைக்கழக மானிய குழுவின் ஹரி ஓம் ஆசிரம் விருது, அமெரிக்க நாட்டின் ஆரிகன் மற்றும் ஓஹியோ மாநில பல்கலைக்கழகங்கள் வழங்கிய மனித நேயத்தில டாக்டர் பட்டம், கான்பூர் சந்திரசேகர் ஆசாத் வேளாண்மை மற்றும் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் சிறப்பு டி.எஸ்ஸி. பட்டம் ஆகியவை அடங்கும். அய்யா டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களுடன் 50 வருடங்கள் சேவை செய்துள்ளார்கள். இந்தியப் பெண்களுக்குப் பொருத்தமான இந்திய கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒரு மனையியல் கல்லூரியை உருவாக்க வேண்டும் என்ற கனவை அய்யா அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள். கோவையில் அவினாசிலிங்கம் நிறுவனம் தொடங்கியதிலிருந்து டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அதன் ஆலோசகராக செயல்பட்டு, 1960–லிருந்து அதன் முதல்வராகவும், பின்னர் துணைவேந்தராகவும், டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் மறைவுக்குப் பிறகு வேந்தராகவும் செயல்பட்டு வருகிறார்கள். டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்களின் இடையறாத உழைப்பின் விளைவாகப் பல்கலைக்கழகம் விரிவடைந்து உயா்ந்த நிலையை அடைந்திருக்கிறது. டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் ஆதரவை, நிறுவனங்களை உருவாக்குவதில் பேரளவில் பெற்றதன் மூலமாக, அய்யா அவர்களின் பண்புகளைப் பெருமளவில் உணர முடிந்தது. அவர்களின் ஒப்பற்ற தலைமையில், மனையியல் கல்லூரி உருவாகி, பல்கலைக்கழகமாக மலர்ந்த செய்திகளை இந்நூல் வெளிப்படுத்துகிறது. இது இளம் தலைமுறையினருக்கு ஒரு பரிசாக இருக்கிறது.